விலை: 30.00
பக்கங்கள்: பதினாறு + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 05 ஞாயிற்றுக்கிழமை (19.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 31

## பயங்கரவாத விசாரணை பிரிவு
### சி.ஐ.டியின் கீழ் வந்தது

(கொழும்பு)
பயங்கரவாத விசாரணை பிரிவு, குற்றப்புலனாய்வுத்திணைக் களத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நுவன் வெதசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. பதில் பொலிஸ் மா அதிபரின் கோரிக் 15


அடுத்த வாரம்
## ஜனாதிபதி சீனா பயணம்

(கொழும்பு)
நான்கு நாள் விஜயம் மேற் கொண்டு ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் சீனாவிற்கு பயணிக்கவுள்ளார்.
அண்மையில் சீன வெளிவிவ கார அமைச்சர் இலங் 15

# இந்திய பாதுகாப்பு ஆலோசகர் கொழும்புக்கு திடீர் விஜயம்

## ஜனாதிபதி கோட்டாவுடன் முக்கிய சந்திப்பு மோடியின் செய்தி ஏதும் தெரிவித்தாரா?

(கொழும்பு)
கொழும்புக்கு நேற்று திடீர் என விஜயம் மேற்கொண்ட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஜனாதிபதி கோட்டாவுடன் முக்கிய சந்திப்பில் ஈடுபட்டார். இந்திய பிரதமர் மோடியின் முக்கிய செய்தி ஏதேனும் தெரிவிக்க அஜித் டோவல் திடீர் விஜயம் மேற்கொண்டாரா? என தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)



## தலைமைத்துவம் மாறினால் கூட்டமைப்பில் இணைவது தொடர்பில் பரிசீலிக்க முடியும்



### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால், கொள்கை ரீதியாக அரசியல் பயணத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பில் பரிசீலிக்க முடியும் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாற்றமடையும் பட்சத்தில், மக்களின் நலன்கருதி பொதுக் கொள்கையொன்றை 15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; ரவூப் ஹக்கீமிடம் விசாரணை

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
இவ்விடயம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திற்கு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு கூறுகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ரவூப் ஹக்கீம் மீது முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றுள்ளது.
அதில், கடந்த 2017ஆம் ஆண்டு சந்தேகநபர் ரில்வான் வைத்திய சாலையில் அனுமதிக்கப் 15

## ஐ.நாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக
### சிரேஷ்ட ஊடகவியலாளர் சீ.ஏ.சந்திரபிரேம நியமனம்

(கொழும்பு)
ஐநாவுக்கான இலங்கையின் தூதுவராக சிரேஷ்ட ஊடக வியலாளர் சீ.ஏ.சந்திரபிரேம நியமிக் கப்பட்டுள்ளார்.
சந்திரபிரேம அரசியல் விமர்சகர் என்பதுடன் எழுத்தாளருமாவார்.
அதேவேளை ரஷ்யாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பேராசிரியரான எம்.டி.லமாவங்ச நியமிக்கப் பட்டுள்ளார்.
ஜேர்மனிக்கான இலங்கையின் தூதுவராக கணனி தொழிநுட்பம் சம்பந்தமான சர்வதேச நிறுவனத்தின் இலங்கையின் பிரதிநிதியாக கடமையாற்றிய மனோரி உணம்புவ நியமிக்கப் பட்டுள்ளார்.
அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கான இலங்கையின் புதிய தூதுவர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளதாக அரசாங்கத் 15

## ஐக்கிய தேசியக்கட்சியின் அடுத்த நகர்வு குறித்து
### சஜித் - கரு ஜெயசூரிய கலந்துரையாடல்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக்கட்சியின் அடுத்த கட்ட நகர்வு குறித்து சஜித் பிரேமதாச மற்றும் கரு ஜயசூரிய சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையில் அமைந்துள்ள சபாநாயகரின் உத்தியோக 15



வட மாகாணத்தில்
## இன்று மழை பெய்யக் கூடும்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் இன்று மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.
வளிமண்டலவியல் திணைக் களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப் 15

## இலங்கையின் பாதுகாப்பை பலப்படுத்த 50 மில்லியனை இந்தியா வழங்குகின்றது

(கொழும்பு)
இலங்கையின் பாதுகாப்பை பலப்படுத்த 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளது.
இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தொவால் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல் தொடர்பாக இதன்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதுடன், 15

## சிங்கலே, ராவண அமைப்பை சேர்ந்த பௌத்த பிக்குகள்
### நீராவியடி ஆலய பகுதிக்கு விஜயம்

(முல்லைத்தீவு)
சிங்கலே மற்றும் ராவண பலய என்ற கடும்போக்கு சிங்கள பௌத்த அமைப்புகளை சேர்ந்த பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் நேற்றையதினம் முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி 15

## 360 கிலோ எடையுடைய தடைசெய்யப்பட்ட மீன் வலைகள்
### யாழ்.நகர் கடைகளில் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை நிலையத்திலிருந்து சுமார் 360 கிலோ எடையுடைய தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மீட்கப்பட்டுள்ளன. 15

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 32 வயதுடைய மணமகனுக்கு இலங்கையில் மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வாழும் 38 வயதுடைய மணமகனுக்கு இலங்கையில் மணமகளைத் தேடுகிறோம். அமெரிக்காவில் வாழும் 34 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையில் தேடுகிறோம். 36 வயதுடைய கனடாவில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையில் தேடுகிறோம். இலங்கையில் வாழும் விவாகரத்துப் பெற்ற 45 வயதுடைய சட்டத்தரணி மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறோம். கனடாவில் வாழும் 31 வயதுடைய Non RC மதத்தைச் சேர்ந்த மணமகளுக்கு இலங்கையில் அதே மதத்தைச் சேர்ந்த மணமகனைத் தேடுகின்றோம். (மதம் மாறுபவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:- 0776505097, 0762364188
0212221515, 0014166661855,
0014377728129 www.sorkham.com (1913)


கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம் : 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை
இடம் : கரவெட்டி பிரதேச செயலகம் கேட்போர்கூடம்

தலைவர்
**திரு.வ.கணேசமூர்த்தி**
(தலைவர் – கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி)

விருந்தினர்
**Dr.S.ரிஸாந்தன்**
(கால்நடை வைத்திய அதிகாரி, கரவெட்டி)
**Dr.R.பிருகஸ்வினி**
(கால்நடை வைத்திய அதிகாரி, கரவெட்டி)
**திருமதி இந்திரவதனா செல்வரதன்**
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**நிகழ்வுகள்**
- மங்கள விளக்கேற்றல்
- மௌன இறைவணக்கம்
- தலைமையுரை
- சென்ற பொதுக்கூட்ட அறிக்கை
- கணக்காய்வு அறிக்கை 2017
- உத்தேச வரவு செலவுத்திட்டம் 2020
- இயக்குநர் சபை பிரேரணை
  - புதிய மில்ரொபி செய்யும் இயந்திரம் கொள்வனவு செய்தல்
- செலவின அங்கீகாரம்
  - முச்சக்கரவண்டி திருத்தம்
  - உற்பத்தி பகுதிக்கு வர்ணம் பூசுதல்
  - குளிர்சாதனப் பெட்டி கொள்வனவு
  - கணனி உதிரிப்பாக கொள்வனவு
  - யூஸ் பொதி செய்யும் இயந்திர திருத்தம்
- விருந்தினர் உரை
- நன்றி உரை

*அங்கத்தவர்கள் அனைவரும் கூட்டத்துக்கு தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்*

(C-8948)

தலைவர்,
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி பிரதேசம்

## கொழும்பில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு - கிராண்ட்பாஸ் புளுமெண்டல் குப்பை மேட்டில் திடீரென தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இதனை அணைப்பதற்கு 4 தீயணைப்பு வாகனங்கள் அவ்விடத்திற்கு அனுப்பி வைகைகப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த தீயை அணைப்பதற்கு பொலிஸார் மற்றும் அப்பகுதி மக்களும் இணைந்து செயற்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## LITTLE MASTERS' MONTESOORI DAY CARE CENTRE

அதி நவீன கணினி மயமாக்கப்பட்ட ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலையும்
குழந்தைகள் பராமரிப்பு நிலையமும்

**English Medium & Tamil Medium**

யாழ் மக்களுக்கு முதல் முறையாக அதி நவீன வசதிகளுடன் முன்பள்ளியும் இணைந்த நிலையில் பிள்ளைகளின் பராமரிப்பு சேவைகள்

**Time :- 6.30 am - 5.00 pm**

1 1/2 வயது முதல் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.
பாலர் பாடசாலையின் வயது பிரிவுகள்

PLAYGROUP 2+ (2வயது)
MONTESOORI 3+ (3வயது)
PRESCHOOL 4+ (4வயது)



எதிர்வரும் 08.02.2020 தைப்பூசம் அன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

அரச,தனியார் உத்தியோகத்தர்களே! தொழில் அதிபர்களே! உங்கள் பிள்ளைகளை தாய்ப் பாசத்திற்கு நிகராக பராமரித்து அறிவுடன் ஆளுமையையும் ஊட்டி ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தரம்-1ற்கு தேர்ச்சியுள்ளவர்களாக மாற்றித்தருகின்றோம் நாம்.



மிகக் குறைந்த அனுமதிக்கட்டணம் , மாதாந்தக்கட்டணம்
விரைந்து உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் எமது முன்பள்ளிச் செயற்பாடுகளைப் பார்வையிட
Lmm Preschool எனும் Face book முகவரியை நாடுங்கள்.

முகவரி:-
Little Masters' Montesoori
&
Day Care Centre
கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரிக்கு முன்பாக)
T . P :- 0777474741 (1917)

எமது கிளைகள்
- கே.கே.எஸ்.றோட், இணுவில்.
- கே.கே.எஸ்.றோட், மல்லாகம்.
- கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பளை.
- கீரிமலை றோட், சண்டிலிப்பாய்
- தெல்லிப்பளை றோட், பண்டத்தரிப்பு
- தெல்லிப்பளை றோட், சித்தங்கேணி
- பருத்தித்துறை றோட், புத்தூர்.


## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா கிருஷ்ணசாமி



பிறப்பு:- 13.05.1932
இறப்பு:- 17.01.2020

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கிருஷ்ணசாமி அவர்கள் 17.01.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையா, ஞானம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற குமாரசாமி, இராசையா ஆகியோரின் மைத்துனியும் சிறீரஞ்சன் (கமம்), முகுந்தன் (சைக்கிள் கடை), கோகிலநாயகி (கொடிகாமம்), தேவரஞ்சனி (காமதேனு உணவகம் - மாகியப்பிட்டி), ஜெயலட்சுமி, அபிராமவல்லி ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினமலர், லோகநாயகி, செல்வநாயகம், நாகதேவன் (தேவன் பால் - அளவெட்டி), அமரர் விஜயன் (பால்), சோதீஸ்கந்தவேல் (பால்) ஆகியோரின் மாமியாரும் கலைமகள் (முன்பள்ளி ஆசிரியை) - ஜெயசுதன் (பூசகர்), தேவசுதன் (மேற்பார்வையாளர், சிவில் - யாழ்.பல்கலைக்கழகம்) - சுரேகா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுபித்தா - கோகுலன் (கோகுல் பந்தல் அளவெட்டி), அனுசா - துர்க்காதரன், சுயரூபன் - கீர்த்தனா (பிரான்ஸ்), வைகுந்தன் (வாசு) (கிராமஅலுவலர்- J/247, தையிட்டி கிழக்கு), நகுலேஸ்வரன் (மின்சார சபை), மதுரா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)- கிருஷ்ணகுமார் (காமதேனு உணவகம், அளவெட்டி), ரேணுகா - அகிலன், பானுகா - சீதாராமன் (இந்தியா), சோபா, சாரங்கன் (மின்சாரசபை), திருவரங்கன் (மின்சார சபை) - கார்த்திகா (தாதிய உத்தியோகத்தர்), கோகுலரூபன் (LOLC - யாழ்ப்பாணம்), துஜீபன் (மலேசியா), அபிராமி - மயூரன் (மலேசியா), தரணீசன், மகீபன் (காமதேனு உணவகம்), சிந்துரா, தமிழரசி - குணசேகரம் (சுட்டார்), அகிராஜ், அபிஷா, கிசானுகா ஆகியோரின் பேர்த்தியும் காருண்யா, சங்கீர்த்தனன், தனுமிதன், ரேசிகா, அயானிகா, கேசிகன், சதீர்த்தனன், மகிழினி, கர்ணி, அதிசயன், கீர்த்திகன், சன்விகா, அக்ஷயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்துப்பனையடி,
அளவெட்டி மேற்கு. (1910)

தகவல்:- குடும்பத்தினர்
(0771636440, 0754073151)

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 04 - 1924



மறைவு
18 - 01 - 2020

### திருமதி குலமணி இலங்கராஜா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலமணி இலங்கராஜா அவர்கள் நேற்று (18.01.2020) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவசம்பு - அன்னம் தம்பதியரின் மூத்த புதல்வியும் அமரர் சி.கே. இலங்கராஜாவின் (ஓவசியர்) அன்பு மனைவியும் ராஜினி, நிரஞ்சினி, ரவிராஜ், ஜெயராஜ், அமரர் தர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவானந்தன், சந்திரசிவம், மேனகா, குமாரதாசன் ஆகியோரது மாமியாரும் மயூரன், ரேணுகா, கௌரிசங்கர், சுரேன், சுரேஷ், சாம்பவி, பிரசன்னா ஆ்கியோரின் பாட்டியும் அர்ஜூன், சந்தோஷ், ஷோபியா, அமலா, அம்புஜா ஆகியோரின் பூட்டியும் அமரர் சபாரட்ணம், அமரர் தனபாலசிங்கம், அமரர் குணரட்ணம், நவரட்ணம், ராஜரட்ணம், செல்வரட்ணம், அமரர் நல்லம்மா, கண்மணி, அமரர் நேசமணி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.01.2020) திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.12, இராமகிருஷ்ண தோட்டம்,
கொழும்பு - 06.

தகவல்:-
இ.ஜெயராஜ் (கம்பன்கழகம்)

# மற்றவர்கள் மீது பழிபோடுவதை விடுத்து மக்களுக்காகப் பணியாற்றுங்கள்!

## அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுரை



**(யாழ்ப்பாணம்)**

**எங்களால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்காமல் எப்பொழுதும் மற்றவர்கள் மீது பழி போடுவதிலேயே காலம் கழிகிறது. இந் நிலை இனியும் தொடராமல், பிரச்சினைகள் தொடர்பான தீர்வை விரைவாக இனம்கண்டு, மக்களுக்கு உதவ அனைவரும் ஒத்துழைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வேண்டுகோள் விடுத்தார்.**

சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் திணைக்களங்கள், வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களம், வடக்கு மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான திணைக்களங்களும் அமைப்புக்களும் சார்ந்த அதிகாரிகளுக்கும் ஆளுநருக்கும் இடையில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. குறித்த சந்திப்பில் திணைக்களங்கள் முகம்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

இதேவேளை குறித்த திணைக்களங்கள் முன்னெடுத்துவரும் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் ஆளுநருக்கு விளக்க மளிக்கப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த ஆளுநர் எல்லோருமே தமக்கான பற்றாக்குறைகள், பிரச்சினைகள் பற்றி பேசிக்கொண்டிருப்பதைவிட, இருப்பதைப் பயன்படுத்தி மக்களுக்கு செய்ய வேண்டியவற்றை பற்றியும் சந்திக்குமாறு கூறினார்.

அத்துடன் எல்லோர் மத்தியிலும் சமூக அக்கறை மேம்படுத்தப்படவேண்டும், சுயமாக நம்மை நாமே முன்னேற்ற வேண்டும்,

எங்களால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்காமல் எப்பொழுதும் மற்றவர்கள் மீது பழி போடுவதிலேயே காலம் கழிகிறது.

இந் நிலை இனியும் தொடராமல், இனம்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான தீர்வை விரைவாக இனம்கண்டு, மக்களுக்கு உதவ அனைவரும் தன்னுடன் ஒத்துழைக்குமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். (இ-7)

## ஐ.தே.க. பொதுத்தேர்தலில் மக்களால் முழுமையாக புறக்கணிக்கப்படும்!

### டிலான் உறுதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு இன்று மும்முனை போட்டி நிலவுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் பகுதியளவில் நிராகரிக்கப்பட்ட ஐ.தே.க.பொதுத்தேர்தலில் மக்களால் முழுமையாக புறக்கணிக்கப்படும் என்பதை உறுதியாக குறிப்பிட வேண்டும்.

அரசாங்கத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் எதிர்க்கட்சி ஒன்று பாராளுமன்றத்தில் செயற்படுவது சிறந்த ஆட்சிக்கு சாதகமாக அமையும். ஆனால் நடைமுறையில் பலமான எதிர்க்கட்சி ஒன்று கிடையாது.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய குரல் பதிவுகளின் பின்னணியில் இருந்தவர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான குழுவினராலே இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

ஆனால் பழிகள் அனைத்தும் ரஞ்சன் ராமநாயக்க மீது மாத்திரமே சுமத்தப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ரஜினி இலங்கை வரத் தடையில்லை

### நாமல் தெரிவிப்பு

Namal Rajapaksa
@RajapaksaNamal

நடிகர் #Rajinikanth இலங்கை வருவதில் எந்தத் தடையுமில்லை, அது பற்றிய வதந்திகளில் எந்த உண்மையுமில்லை. நானும் எனது தந்தையாரும் திரு. ரஜினிகாந்த் திரைப்படங்களின் பெரும் ரசிகர்கள். அவர் இலங்கை வர விரும்பினால் நிச்சயம் வரலாம், ஒரு தடையுமில்லை.



(கொழும்பு)

நடிகர் ரஜினி இலங்கைக்கு வரத் தடையில்லை, நிச்சயம் வரலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்தவாரம் தமிழகம் சென்றிருந்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சென்னையில் ரஜினிகாந்தைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது யாழ்ப்பாணத்துக்கு வருமாறும், இங்கு உள்ள தமிழ் மக்களைச் சந்திக்குமாறும் ரஜினிக்கு விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்தார்.

இதையடுத்து, ரஜினி இலங்கை வரத் திட்டமிட்டதாகவும் அவருக்கு நுழைவிசைவு (விசா) வழங்க இலங்கை அரசு மறுப்பதாகவும் தகவல் வெளியானது. இந்தத் தகவலை இலங்கை அரசு மறுத்தது.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில்,

"நடிகர் ரஜினிகாந்த் இலங்கை வருவதில் எந்தத் தடையுமில்லை, அது பற்றிய வதந்திகளில் எந்த உண்மையுமில்லை.

நானும் எனது தந்தையும் ரஜினிகாந்த் திரைப்படங்களின் பெரும் ரசிகர்கள்.

அவர் இலங்கை வர விரும்பினால் நிச்சயம் வரலாம், ஒரு தடையுமில்லை" என்று தெரிவித்தார். (இ-7)

## இராஜாங்க அமைச்சர் விதுரவுக்கு பிடியாணை



(கொழும்பு)

விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே பிடியாணை உத்தரவு பிறப்பித்தார்.

இவருக்கு எதிரான வழக்கு விசாரணை கடந்த ஜனவரி 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதில் ஆஜ்ராவதற்கு தவறியதன் காரணமாகவே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்ததாகவும் கூறப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு தனது சகோதரியான துசாரா விக்கிரமநாயக்கவுக்கு அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விதுரவுக்கு எதிராக பொறளை பொலிஸாரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீடு புகுந்து கத்தி முனையில் கொள்ளை!

### புலோலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புலோலியிலுள்ள வீடு ஒன்றில் புகுந்த கொள்ளையர்கள் கத்தி முனையில் எட்டுப் பவுண் நகைகளை கொள்ளையடித்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏழு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. முகத்தைத் துணிகளால் மறைத்துக் கட்டிக் கொண்டு உட்புகுந்த மூவர் கத்தியைக் காட்டி அச்சுறுத்தி, நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-114)

# தென்னாபிரிக்கா மெதுவான ஆட்டம்

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து பேட்டிங் தேர்வு செய்தது.

முன்னணி வீரர்கள் நிலைத்து நின்று ஆடவில்லை. இடையில் இறங்கிய பென் ஸ்டோக்ஸ் சிறப்பாக விளையாடி சதமடித்தார். அவர் 120 ரன்னில் ஆட்டமிழந்தார். அவருக்கு ஒல்லி போப் நன்கு ஒத்துழைப்பு அளித்தார். இந்த ஜோடி 5-வது விக்கெட்டுக்கு 203 ரன்கள் குவித்தது.

ஒல்லி போப்பும் சதம் அடித்தார். சாம் கர்ரன் (44), மார்க் வுட் (42) அதிரடியாக விளையாடினர்.

இறுதியில், இங்கிலாந்து 9 விக்கெட் இழப்பிற்கு 499 ரன்கள் எடுத்திருக்கும்போது முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்தது. ஒல்லி போப் 135 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

தென்னாபிரிக்கா அணி சார்பில் மகாராஜ் 5 விக்கெட்டுக்களும், ரபாடா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்சை விளையாடியது. இங்கிலாந்து வீரர்களின் சிறப்பான பந்து வீச்சில் சிக்கி தென்னாபிரிக்கா வீரர்கள் சீரான இடைவெளியில் அவுட்டாகினர.

எல்கர் 35 ரன்னும், மலான் 18 ரன்னும், ஹம்சா 10 ரன்னும், நூர்ஜே 18 ரன்னும், டு பிளசிஸ் 8 ரன்னும், வான் டெர் டுசான் 26 ரன்னிலும் அவுட்டாகினர். அடுத்து இறங்கிய டி காக், பிளெண்டர் நிதானமாக ஆடினர்.

மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் தென்னாரிக்கா அணி 6 விக்கெட் இழப்புக்கு 208 ரன்கள் எடுத்துள்ளது. டி காக் 63 ரன்னுடனும், பிளெண்டர் 27 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து சார்பில் டொமினிக் பெஸ் 5 விக்கெட்டும், பென் ஸ்டோக்ச் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.




நிதானமாகத் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்காவின் டீ கொக்

## இந்தியா – அவுஸ்திரேலியா இறுதி ஒரு நாள் போட்டி இன்று

## இன்று இலங்கையை எதிர்கொள்ளும் சிம்பாவே




இலங்கை மற்றும் சிம்பாவே அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப்போட்டி இன்று ஹராரே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இலங்கை அணிக்கு திமுத் கருணாரத்னவும், சிம்பாவே அணிக்கு சீன் வில்லியம்சும் தலைமை தாங்கவுள்ளனர்.

இலங்கை மற்றும் சிம்பாவே அணிகள் இதுவரையில் 18 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளன. அதில் 13 போட்டிகளில் இலங்கை வெற்றிபெற்றுள்ளதுடன், சிம்பாவே அணி எந்தவொரு வெற்றியையும் பெறவில்லை.

இறுதியாக இலங்கை அணி ரங்கன ஹேரத் தலைமையில் சிம்பாவேவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு தொடரை 2-0 என வெற்றிக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 27ஆம் திகதி ஹராரே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## பொங்கல் தினத்தை முன்னிட்டு
# நொதேண் வி.கழகம் நடத்திய நட்பு ரீதியிலான உதைபந்தாட்டம்
## N.F.L அணி வெற்றி



(யாழ்ப்பாணம்)

அணித்தலைவர் உமாகாந்தின் அபாரமான ஆட்டம் மூலம் நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்திய நட்பு ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் N.F.L அணி வெற்றி பெற்றது.

திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலைய முன்னாள் உறுப்பினர்களின் அனுசரணையுடன நொதேண் விளையாட்டுக் கழகமும் நொதேணா விளையாட்டுக் கழக கல்வியங்காடு நல்லூர் நண்பர்களும இணைந்து நடத்திய மரபியல் தமிழ்த் தைப்பொங்கல் விழா நேற்று சனிக்கிழமை செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.நேற்று மாலை கழக உப தலைவர் மாதவன் தலைமையில் நடைபெற்ற நட்பு ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் உமாகாந் (டொக்டர்) தலைமையிலான N.F.L அணி யும் சஞ்ஜயன் (சித்தன்) தலைமையிலான பிகில் அணியும் கண்ணா தலைமையி லான ராஜப்பன் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் N.F.L அணியும் ராஜப்பன் அணியும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது. நடைபெற்ற இறுதிப் போட்டி 1-1 என்ற ரீதியில் சமநிலையானதையடுத்து சமநிலை தவிர்ப்பு உதையில் N.F.L அணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக N.F.L அணித்தலைவர் உமாகாந் தெரிவானார்.(ம)

# ரபாடாவின் மகிழ்ச்சிக்கு ஐ.சி.சி கொடுத்த தண்டனை



போர்ட்எலிசபெத்தில் நடந்து வரும் இங்கிலாந்துக்கு எதிரான 3-வது டெஸ்ட் கிரிக் கெட்டில் அந்த அணியின் கேப்டன் ஜோ ரூட்டை (27 ரன்) கிளீன் போல்டு செய்த தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் காஜிசோ ரபடா, விக்கெட் சாய்த்த உற்சாகத்தில் அவர் அருகில் சென்று ஆக்ரோஷமாக கத்தினார். எதிரணி வீரரை கோபமூட்டும் மற்றும் எரிச்சலூட்டும் வகையில் நடந்து கொண்டதாக குற்றம் சாட்டிய சர்வ தேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ரபாடாவுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 15 சதவீதம் அபராதமாக விதித்தது. மேலும் ஒரு தகுதி இழப்பு புள்ளியும் விதிக்கப்பட் டது.

இதையடுத்து அவரது தகுதி இழப்பு புள்ளி எண்ணிக்கை 4 ஆக உயர்ந்தது. இரண்டு ஆண்டுகளில் 4 தகுதி இழ ப்பு புள்ளியை எட்டும்போது ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும். இதன்படி 24 வயதான ரபாடா இங்கிலாந்துக்கு எதிராக வருகிற 24-ந்தேதி ஜோகனஸ்பர்க்கில் தொடங்கும் 4-வது டெஸ்டில் விளையாட முடியாது.

ரபாடா மீதான நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ள இங்கிலாந்து முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் தனது டுவிட்டர் பக்கத்தில், 'உலகின் சிறந்த வீரரின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியை கொண்டாடியதற்காக ஒரு போட்டிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது முட்டாள்தனமானது. பந்து வீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்கு நடவடிக்கை இல்லை. ஆனால் விக்கெட் வீழ்த்தியதை கொண் டாடியதற்கு கடினமான தண்டனையா?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (1916)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



சண்டிலிப்பாய் ஸ்ரீ ப்ரமவித்தய அம்பாள் சமேத சுவேதாரண்யேஸ்வரர் பெருமாள் சகித ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் நேற்று ஓம் நமசிவாய லகித ஜபமும் சிவ ஆராதனையும் இடம்பெற்றது.


THE TRAVELLER
Global Private Limited
AIRLINE TICKETING AGENTS & TOUR OPERATORS
Since 1989

யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னோடி பயணத்துறை நிறுவனமான எங்களுக்கு உணர்வுபூர்வமான, நல்ல ஆர்வமுள்ள, குறித்த இலக்கின் அடைவை அடிப்படையாகக்கொண்ட விதிவிலக்கான வாடிக்கையாளர் சேவையை வழங்கக்கூடிய திறமையுள்ளவர்கள் எமது நிறுவாகிகளின் குழுவோடு இணைந்து அதன் ஒரு அணியாக செயற்பட்டு எமது நிறுவனத்தை இன்னுமொருபடி உயர்த்தக்கூடியவர்களாக இருந்தால் அவர்களை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

விற்பனை பிரதிநிதி ( Sales Representative)

தகைமைகள் மற்றும் அனுபவம்

- க.பொ.த (உ/த) சித்தியடைந்திருத்தல் ( பாடசாலை படிப்பை முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்)
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ளவராக இருத்தல்
- கவர்ச்சிகரமான, வெளிச்செல்லும் ஆளுமை இருத்தல்
- மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல்
- பயண மற்றும் சுற்றுலாத்துறையில் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

துறைசார் பயிற்சி குருநாகலையில் நடைபெறும்

உங்களது பூர்த்திசெய்யப்பட்ட சுயவிபரக் கோவையை hr@ttgpl.com என்ற மின்அஞ்சல் (e-mail) முகவரிக்கு 2019 டிசம்பர் 15ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.
தொடர்புகளுக்கு: 077 771 2617

IATA (C-8948)

THE TRAVELLER GLOBAL PRIVATE LIMITED
Head Office UG 95, People's Park Complex, Colombo 11


## பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலம்புரிச் சங்குகளுடன் ஒருவர் கைது



(கல்லடி)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல இலட்சம் ரூபாய் பெறுதியான 19 வலம்புரிச் சங்குகளுடன் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்தே நீர்கொழும்பினைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார். (இ-7)

## இலக்கிய விருதுக்கு விண்ணப்பம் கோரல்

கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் 2020 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது வழங்கல் நிகழ்விற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்காக எமது பிரதேச எழுத்தாளர்களால் 01.01.2019 ஆம் திகதிக்கும் 31.12.2019 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வெளியீடு செய்யப்பட்ட நூல்களின் மூன்று பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து 20.02.2020 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என தெல்லிப் பழை பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார். (இ)

### இளைஞர்களின் ஏற்பாட்டில்

## யாழ்.முற்றவெளியில் இன்று பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்ச் சமூகத்தின் தொன்மையான கலாசார பாரம்பரியங்களைப்பேணும் வகையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இளைஞர்கள், யாழ். மற்றும் கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து தைப் பொங்கல் நிகழ்வையும் பண்பாட்டு பெருவிழாவையும்யாழ் முற்றவெளிமைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்தவுள்ளனர்.

காலத்துக்குக் காலம் நமது பண்பாட்டு கலாசார விழுமியங் கள் அழிந்த வண்ணமே உள்ளன. இவற்றைப் பேணி பாதுகாக்கும் முகமாகவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள இளைஞர்களின் உறவை மென்மேலும் பலப்படுத்தும் நோக்குடன் இந்தப் பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது. இன்று காலை 9 மணியளவில் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி அதனை தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்.

தன்னெழுச்சியாக முன் வந்து "தமிழ் இளையோர் மக்கள் இயக்கம்" என்ற பெயரில் நிகழ்த்தும் இப் பொங்கல் விழாவிலும் பண்பாட்டு பெருவிழாவிலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டனர். (இ-9)


மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 ஆம் ஆண்டு பிறந்த மேஷ நட்சத்திரம் கிரகபாவம் 15 செவ்வாய்க்குற்றமற்ற தனியார் துறையில் தொழில் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகனுக்கு முதிசம் உண்டு
078 560 3390 (1901)


## இராசி பலன்

**மீனம்:** உறவினர் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், வரவை விட செலவுகள் அதிகரிக்கலாம், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலைமை ஏற்படலாம்.

**மேடம்:** விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும் நாள், உடல் நலன் சீராகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** பிள்ளைகளின் வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் கூடும், வாகன சுகமுண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக் | இராசி பலன் | | |
| சூரி, புத | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி | | |
| சனி, குரு, கேது | செவ் | சந் | |

19.01.2020
தை 05, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு
நவமி காலை 7.21 மணிவரை
தசமி பின்னிரவு 5.40 மணிவரை
விசாகம் பின்னிரவு 2.34 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை
அமைதியாய் இரு விரும்பியதை அடைவாய்
வளவன்

**கடகம்:** தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானம் பெருக வழி சமைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம், நினைத்த காரியத்தை நிறைவேற்றுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், போசன சுகமுண்டு, குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் பெற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடப்பர், முயற்சிகளில் பெரிதும் பாடுபடுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

# யாழ்.பல்கலைக்கழக மாணவியால் கல்வி வளர்ச்சிக் கழகம் அங்குரார்ப்பணம்





(குப்பிழான்)

கொழும்புத்துறை, நெடுங்குளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக யாழ்.சேரன் கல்வி வளர்ச்சிக் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி கிருஷாந்தி மதியழகன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அனுசரணையில் மேற்படி கழகத்தை அங்குரார்ப்பணம் செய்தார்.

இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெடுங்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் கட்சியின் மகளிர் அணித் தலைவியும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான திருமதி வாசுகி சுதாகரன், கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ், யாழ். மாநகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்பள்ளிச் சிறார்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-18)





கந்தரோடை அருள்விநாயகர் சனசமூக நிலையத்தால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், சாதனை மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் அண்மையில் நிலையத்தலைவர் சின்னராசா தலைமையில் நிலைய வளாகத்தில் இடம்பெற்றன. இதில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் கடந்த வருடம் இடம்பெற்ற உயர்தரப்பரீட்சையில் கலைப்பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடமும், யாழ்.மாவட்ட மட்டத்தில் முதலிடமும் பிடித்த மாணவனான நிலக்ஷன் மற்றும் பளு தூக்கல் வீராங்கனை ஆசிகா ஆகியோர் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி. யோகாதேவி ரவிக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கௌரவிப்புக்களை வழங்கினர்.

## பரு.ஆதார வைத்தியசாலையில்

# கழிவுகள் எரிக்கும் பகுதியை புனரமைக்க ரூ.10 இலட்சம்

## அங்கஜன் விஜயத்தையடுத்து நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கழிவுகள் எரிக்கும் பகுதியைப் புனரமைக்க யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

மந்திகையில் அமைந்துள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரு வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட மருத்துவக் கழிவுகளை எரிக்கும் பகுதியால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகப் பொதுமக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் குறித்த வைத்தியசாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டதன் பயனாக குறித்த நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த வைத்தியசாலையின் புகைப் போக்கியில் வெடிப்புக் காணப்படுவதால் அப் பகுதியால் கணிசமான புகை வெளியேறுகிறது.

குறித்த குழாயைப் புனரமைக்க 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-60)

# கொள்ளைக் குற்றச்சாட்டு கைதானவர்களில் ஒருவர் முன்னாள் போராளி!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் போராளியும் அடங்குவதாக பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வந்தது.

தெல்லிப்பழையிலுள்ள பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மறைந்துள்ளனர் என மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படை யில் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை இருவர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் ஒருவர் முன்னாள் போராளி எனத் தெரியவந்தது. (இ-10)




# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் சாவகச்சேரி நகர சபை ஈடுபட வேண்டும்

## உறுப்பினர் நடனதேவன் கோரிக்கை

(சாவகச்சேரி)

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் சாவகச்சேரி நகர சபையினர் ஈடுபட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

டெங்குக் கட்டுப்பாடு தொடர்பில் சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை. சாவகச்சேரி நகர சபையினர் புகையடிக்கும் கருவி ஒன்றினைக் கொள்வனவு செய்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

அத்துடன் வீடுகளில் தயாரிக்கப்பட்டு உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவின் தரம் மற்றும் சுகாதாரம் தொடர்பாக நகர சபையின் சுகாதாரப் பிரிவு கண்காணிக்க வேண்டும்.

அதனைவிட மீன் சந்தையில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மீன்களை வாங்கி அவற்றின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், பழக்கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பழ வகைகளில் பாவிக்கப்படும் மருந்து வகை தொடர்பாகவும் கண்காணித்து சபையின் சுகாதாரக் குழுவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-30)




சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் நூலகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

# சீன நிமோனியா குறித்து இலங்கைக்கு எச்சரிக்கை

## உலக சுகாதார அமைப்பு

(ஜெனிவா)

**சீனாவுக்கு வெளியே இரண்டு பேருக்கு புதியவகை நிமோனியா கண்டறியப்பட்டதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து, உலக சுகாதார அமைப்பு கொழும்பு மற்றும் பிற நாடுகளிலுள்ள சுகாதார அமைச்சகத்திற்கு அடிக்கடி வருகைதரும் சீனச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் சீனப் பிரஜைகள் மீது வைரஸ் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தியது.**

இது இப்போது மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவலாம் என நம்பப்படுகிறது. இந்த நிமோனியா காய்ச்சலுக்கான காரணம் 'சார்ஸ்' நோயை உருவாக்கும் வைரஸ் குடும்பத்தைச் சார்ந்த கொரோனா வைரஸ்கள் எனச் சீன ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

விலங்குகளிடமிருந்து மனிதர்களிடையே பரவும் கொரோனா வைரஸ்கள் உள்ளன.

நாங்கள் தொடர்ந்து உலக சுகாதார அமைப்போடு தொடர்பில் இருக்கின்றோம். நிலைமை மோசமடைந்தால் அவசரத் திட்டங்களுடன் தயாராக இருக்கின்றோம். ஜப்பானில் பதிவான முதல் நோய் அறிகுறி குறித்து எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக சுகாதார அமைப்பு, வைரஸ் பரவலாகக் பரவக்கூடும் என்று தெரிவித்தது. ஏனெனில் சீனாவில் புதிய கொரோனா வைரஸ் குடும்பங்களுக்குள் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவ வாய்ப்புள்ளது.

கொரோனா வைரஸின் மர்ம அழுத்தத்துடன் ஒரு சீனப் பெண் தாய்லாந்தில் தனிமைப்படுத்தப்பட்டார். தாய்லாந்து அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை சீனாவிற்கு வெளியே முதல் முறையாக வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டதாக தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சீனாவிலுள்ள வுஹான் நகருக்குச் சென்று திரும்பி வந்த 30 வயதுடைய நபர் ஒருவருக்கு நேற்று புதிய கொரோனா வைரஸிலிருந்து தொற்று ஏற்பட்டதை ஜப்பான் உறுதிப்படுத்தியது.

உலகெங்கிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு நோய்த்தொற்று கட்டுப்பாடு குறித்து வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பு வழங்கியிருப்பதாகத் தெரிவித்தது.

ஜனவரி 25 ஆம் திகதி சீனப் புத்தாண்டு நெருங்கி வருவதால் பல சீன சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்குமாறு கூறப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய சீன நகரமான வுஹானில் 41 நிமோனியா நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். அதே நேரத்தில் இரு நோயாளிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.Sc, PGDE, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10394 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 13 ½ செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/7034 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 10 ¾<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, Canada<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10395 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 27 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, Lecturer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer<br>தொ.இ: G/7060 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் O/L, தனியார் தொழில்<br>தொ.இ: B/10397 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7074 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 1<br>கி.பா: 12 ½ செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Diploma, நூலகர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/10399 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/7075 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# 20 ஆவது திருமண நாள் வாழ்த்து



சதீஸ்-சுஜித்தா
19.01.2020

இரண்டு வரித் திருக்குறளாய் இணைந்திருந்து
இன்பதுன்பம் இரண்டையும் பகிர்ந்து
இன்னும் இன்னும் மேன்மைகள் கண்டு
ஈரெட்டு லோகங்கள் வாழ்ந்து
ஒன்றாய் அன்பாய் உயிராய்
இரு உயிருக்குள் ஒன்றாய் இணைந்து
இன்றுபோல் இன்பமாய் வாழ்ந்திட
பாமலரால் பூமலர் தூவி வாழ்த்துகின்றோம்.

(C-8941)

கம்பர் மலை, வல்வெட்டித்துறை.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, மாமா, மாமி, அண்ணா,
தங்கைமார், தம்பிமார், மச்சான்மார்,
மச்சாள்மார், பெறாமக்கள்,
மருமக்கள், பிள்ளைகள்.

# அரசியல் கைதியொருவர் தனக்காகத்தானே தமிழ் மொழியில் வாதாட நீதிமன்று அனுமதி

(கொழும்பு)

கடந்த 2008 ஆம் ஆண்டு கனகசபை தேவதாஸன் (வயது-63) என்பவரை பொலிஸார் அவரது வதிவிடமான கொழும்பு கொட்டாஞ்சேகையில் ஆறு கைக் குண்டுகளை வைத்திருந்ததாகச் சந்தேகித்து கைது செய்தனர். அவருக்கெதிராக அவசரகாலச் சட்டத்தின் 36(5) இன் கீழ் HC/5638/2011 இலக்கத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கில் அரசியல் கைதியான தேவதாஸன் தனக்காகத்தானே மேல் நீதிமன்றில் வழக்காடியிருந்தார்.

இந்நிலையில் 2018 நவம்பர்-7 ஆம் திகதி அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. எனினும் குறித்த வழக்கின் தீர்ப்பை ஆட்சேபித்து தேவதாஸன் மேன் முறையீடு செய்திருந்தார்.

தவிர மேல் முறையீட்டு நீதிமன்றிலும் தனது வழக்குக்காகத்தானே முன்னிலையாகி தமிழ் மொழியில் வழக்கை நெறிப்படுத்த வேண்டும் எனக் கோரி எழுத்துமூலம் விண்ணப்பித்திருந்தார்.

அதற்கமைய கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் 2020.01.13 அன்று குறித்த மனு மீதான அழைப்பமர்வு இடம்பெற்றது. இதன்போது 'தனக்காகத்தானே' வாதிட முன்வந்தது ஏன்...? நீர் விரும்பினால் மன்றுக்கூடாக ஒரு சட்டத்தரணியை நியமிக்க முடியும் என்றும் மன்றினால் கேட்கப்பட்டது.

அதற்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்ட உரிமையைத் தான் அனுபவிக்க விரும்புவதாக அரசியல் கைதியான தேவதாஸன் பதிலுரைத்தார். அதனையடுத்து தேவதாஸனின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மேல்முறையீட்டு நீதிமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியது.

மேலும் 2020.03.30 ஆம் திகதிக்கு வழக்கினை தவணையிட்ட நீதிமன்றம் அன்றைய தினம் ஆங்கில-தமிழ் உரை பெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் வழக்கமர்வு நடைபெறும் என மன்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதுவரை காலமும் கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் யாவும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரமே இடம் பெற்று வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# இரணைமடுக் குளத்துக்குள் ஒரு இலட்சம் மீன் குஞ்சுகள்


## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



(கிளிநொச்சி)

இரணைமடுக் குளத்துக்குள் ஒரு இலட்சம் மீன் குஞ்சுகளை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று விட்டார். இரணைமடுக் குளத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அமைச்சரால் குறித்த மீன் குஞ்சுகள் நேற்று விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

# யாழில் எம்.ஜி.ஆர்.பிறந்தினக் கொண்டாட்டம்





(யாழ்ப்பாணம்)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 103 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் யாழில் கொண்டாடப்பட்டது.

எம்.ஜி.இராமச்சந்திரனின் தீவிர ரசிகனும் நண்பருமான யாழ்.எம்.ஜி.ஆர்.என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பிறந்தநின நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு யாழ்.எம்.ஜி.ஆர்.சுந்தரலிங்கம் மாலை அணிவித்து. தீபம் காட்டி அஞ்சலி செலுத்தி பிறந்த தினத்தினை நினைவு கூர்ந்தார்.

அதனைத் தொடர்ந்து வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்,வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் இரா.செல்வராஜா மற்றும் யாழ்.எம்.ஜி.ஆர்.கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டு எம்.ஜி.இராமச்சந்திரனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது கோப்பாய் சுந்தரலிங்கம் தனது சொந்த நிதியில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியதுடன் இனிப்புப் பண்டங்களையும் வழங்கினார். (இ-9)

# மைத்திரியை கடுமையாக விமர்சிக்கும் ரஞ்சன் - ஹிருணிகா உரையாடல்

## வெளியீடு



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோரின் மற்றுமொரு தொலைபேசி உரையாடல் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

மிகவும் மோசமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தும் ஒலிப்பதிவே வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையாக விமர்சிக்கும் விதமான உரையாடலே வெளியானது. (இ-7)

# வடக்கு மாகாண ஆளுநருக்கு தீர்க்கப்படாத பிரச்சினைகளை எடுத்துரைத்த ஈ.பி.ஆர்.எல்.எப்.

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநருக்கு தீர்க்கப்படாத பிரச்சினைகளை ஈ.பி.ஆர்.எல்.எப். எடுத்துரைத்ததாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் வன்னி பாராளுமன்ற உறுப்பிருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில்;

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்ஸுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கட்சியின் செயலாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் காணிப்பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண ஆளுநர் மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் பல்வேறுபட்ட காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீதிபதி தலைமையில் மூவர் அடங்கிய ஆணைக்குழு ஒன்று விரைவில் நியமிக்கப்பட இருக்கின்றது எனவும் அதனூடாக பொதுமக்கள் தமக்கு இருக்கும் பல்வேறுபட்ட காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வளப் பங்கீட்டில் (ஆசிரியர் சமப்படுத்தலில்) பாரிய குறைபாடுகள் நிலவுகின்றன எனவும் குறிப்பாக கிராமப் புறத்திலுள்ள பாடசாலைகளுக்கு ஆரம்ப, கனிஷ்ட, உயர்தர பிரிவுகளுக்கு ஆசிரியப் பற்றாக்குறை காணப்படுகிறது. உதாரணமாக செட்டிகுளம் கோட்டப் பாடசாலைகளில் 94 ஆசிரியர்களுக்கான வெற்றிடமும், வவுனியா வடக்கு கல்வி வலயத் தில் 158 ஆசிரிய வெற்றிடம் காணப்படுகின்றது எனவும் இட மாற்றம் பெற்றுச் செல்லுகின்ற ஆசிரியர்களுக்கு பதிலீடாக ஆசிரியர்கள் மீள் நியமனம் செய்வதில் பல நெருக்கடிகள் இருப்பதாகவும் இதனால் மாணவர்களுடைய கல்வியில் இவ்விடயம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதற்கு ஆளுநர் உரிய நடவடிக்கை எடுப்பதாக சந்திப்பில் கலந்து கொண்டவர்களிடம் உறுதியளித்தார்.

வடக்கு மாகாணத்தில் சுத்தமான குடிநீர்த்தேவைக்கும் விவசாயத்திற்கும் புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதைப் பற்றி இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக மன்னார் மாவட்ட விவசாயிகளால் நீண்டகால கோரிக்கையான கூராய் ஆற்று நீரை மறித்து நெற் செய்கைக்குப் பயன்படுத்துவது. வவுனியா மாவட்டத்திலுள்ள பறங்கியாற்றின் மேலதிக நீரை 14 குளத்தில் சேமித்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவது. யாழ்.குடாநாட்டில் இருக்கும் சிறிய குளங்களைப் புனரமைப்புச் செய்தல் மற்றும் வடக்கு மாகாணத்தில் இருக்கக் கூடிய நீர் நிலைகளை இனங்கண்டு புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 350 | 180 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 |
| கோவா | 120 | 140 | 120 | 200 |
| கரட் | 350 | 400 | 300 | 500 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 160 | 120 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 500 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 220 | 240 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 240 | 220 | 300 | 240 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 140 | 250 |
| முருங்கைக்காய் | — | 1500 | 500 | 1000 |
| போஞ்சி | 180 | 220 | 250 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | 100 | 100 |
| கீரை-1பிடி | 50 | 40 | 60 | 60 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 160 | 150 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 250 | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | 120 | 80 |

# கொக்குவில் பொதுநூலகத்தில் விசேட விழிப்புணர்வு நிகழ்வு



(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து உருவாக்கிய மனிதம் அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்த்தையும் நூலகப் பாவனையையும் ஊக்குவிக்கும் விசேட விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் கொக்குவில் பொதுநூலகத்தில் இடம்பெற்றது.


கொக்குவில் பொதுநூலக நூலகர் கி.அனிதா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மனிதம் அமைப்பின் செயற்பாட்டாளர்களான மாணவிகள் கலந்து கொண்டு சிறுவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பிலும் நூலகப் பாவனையின் பல்வேறு நன்மைகள் தொடர்பிலும் சிறுவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் செயன்முறைகள் ஊடாக எடுத்து விளக்கினர்.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் கொக்குவில் பொதுநூலக அங்கத்தவர்களாகவுள்ள 60 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள், சிறுவர்களின் பெற்றோர்கள், வாசகர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஜ-18)

# மீன்பிடித்துறைமுக அலுவலகக் கட்டடங்கள் பேய் வீடுகள் போன்று காட்சியளிக்கின்றன

## அமைச்சர் டக்ளஸ் அதிருப்தி

(மாளிகாவத்தை)



இலங்கையின் மீன்பிடித் துறைமுகங்களில் பெரும்பாலானவை வினைத்திறனான பராமரிப்பு இன்றி அவற்றின் அலுவலகக் கட்டடங்கள் பேய் வீடுகள் போன்று காட்சியளிப்பதாகவும் தற்போதைய அரசாங்கத்திலும் இவ்வாறான நிலை தொடர்வதை எக்காரணம்கொண்டும் அனுமதிக்க முடியாது எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும் துறைமுகக் கூட்டுத்தாபனத்தால் திட்டமிடப்பட்டுள்ள மீனவ சமூக பெண்களுக்கான சமூக அபிவிருத்தித் திட்டத்தை உடனடியாக நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கியதுடன் குறித்த திட்ட வரைபின் இறுதி வடிவத்தை தனக்கு வழங்குமாறும் தெரிவித்தார்.

இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கும் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அண்மையில் தென்னிலங்கை மீன்பிடித் துறைமுகங்களுக்கு விஜயம் மேற்கொண்டபோது அவதானித்த விடயங்கள் தொடர்பாக அமைச்சரால் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு அவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.


இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், கடந்த காலத்தில் சரியான தலைமைகளின் வழிநடத்தல் இல்லாமையினால் மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் தற்போது மோசமான நிலையில் காணப்படுவதாகவும் ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கமாயின் மீண்டும் சிறந்த நிலைக்கு கொண்டு வரமுடியும் என்பதுடன் அனைத்து ஊழியர்களுக்கும் அந்தப் பயன் கிடைப்பதற்குத் தேவையான அனுமதியை தன்னால் அமைச்சரவையில் பெற்றுத்தர முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களிடமும் தான் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர்கள் அதற்குச் சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

இதில் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட அதிகாரிகள் வருடந்தோறும் தமக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகின்ற நிதி போதியளவு இல்லாமல் இருப்பதால் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் இருப்பதாக தெரிவித்தனர்.


மேலும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் நீர்மூழ்கிப் பணியாளர்களும் இல்லாமையால் துறைமுகங்களில் தேவையற்ற அசௌகரியங்கள் ஏற்படுகின்றன எனவும் தெரிவித்தனர்.

இவை தொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சர் குறித்த வெற்றிடங்கள் தொடர்பான கோரிக்கையை எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறும் அது தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடி ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமிப்பதற்கு தேவையான அனுமதிகளை உடனடியாகப் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தார். (இ-7)



உலக தமிழ் கவிஞர் பேரமைப்பின் ஏற்பாட்டில் உலகத் தமிழ்க் கவிஞர் நாள் நிகழ்வுகள் பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

# யாழில் பட்டிப்பொங்கல்



(குப்பிழான்)

யாழ்.கந்தர்மடத்தில் அமைந்துள்ள சிவகுருநாத குருபீடம் (வேதாந்த மடம்), சுழிபுரம் தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லம், கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை போன்ற இடங்களில் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை பட்டிப் பொங்கல் சிறப்பாக இடம்பெற்றது. (ஜ-18)

# நடமாடும் வியாபாரிகளிடம் வரி அறவிடத் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் உள்ளிட்ட நடமாடும் வியாபாரிகளிடத்தில் வரி அறவிடுவதற்கு பிரதேச சபையினர் தீர்மானித்தனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் நிதர்சன் அண்மையில் இடம்பெற்ற சபை அமர்வின் போது முன்வைத்த பிரேரணையை அடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக சபை உறுப்பினர் நிதர்சன் கருத்துத் தெரிவிக்கையில், நாகர்கோவில் பகுதியில் இருந்து வரும் பல மீன் வியாபாரிகள் சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் மோட்டார் சைக்கிள்களில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

அவர்களுக்கு வாராந்த அல்லது மாதாந்த வரி விதிக்க சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொது அறிவித்தல் ஒன்றினை விடுத்து நடமாடும் மீன் வியாபாரிகளை அழைத்து அவர்களுக்கு சபை எல்லைக்குள் நடமாடும் மீன் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதுடன் வரி வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

உறுப்பினரின் பிரேரணையை ஏற்றுக்கொண்ட சபை நடமாடும் மீன் வியாபாரிகளுக்கு வரி விதிக்க நடவடிக்கை எடுக்கும் அதே வேளையில் ஏனைய நடமாடும் வியாபாரிகளிடத்திலும் வரி அறவிடத் தீர்மானித்தது. (ஜ-30)



தைப்பொங்கல் தினத்தன்று கரவெட்டி மேற்கிலுள்ள மக்களுக்கு செஞ்சுடர் விளையாட்டுக்கழகம் பொங்கலுக்குரிய பொதிகளை வழங்கியது. அக்கிராமத்தைச் சேர்ந்த டென்மார்க்கில் வாழும் நவரத்தினராஜா சத்தியதாஸ் பொங்கலுக்கான பொதியை வழங்கினார்.

(படங்கள்:- மகாலிங்கம்)





வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய வட மாகாண பொங்கல் விழா நேற்றுச் சனிக்கிழமை வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் வரணி தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றன. (படங்கள்:- கொடிகாமம், சாவகச்சேரி செய்தியாளர்கள்)

# மத்திய வங்கி கொள்ளையர்களையும் குண்டுத்தாக்குதல் சூத்திரதாரிகளையும் சிறையிலடையுங்கள்-இம்ரான் கோரிக்கை



(கிண்ணியா)

இலங்கை மத்திய வங்கி கொள்ளையர்களையும் உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சூத்திரதாரிகளையும் சிறையிலடையுங்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்றுக் காலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வந்து மறுநாளே மத்திய வங்கி கொள்ளையர்களையும் உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளையும் சிறையிலடைப்போம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தால் ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுபற்றி விசாரணை கூட நடத்த முடியவில்லை. மக்களுக்கு வழங்குவதாகக் கூறிய நிவாரணங்களை வழங்க முடியவில்லை.

ஆனால் எமது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களின் கொடுப்பனவை நிறுத்தியுள்ளார்கள். நாம் குறைத்த மருந்துப் பொருட்களின் விலையை உயர்த்தியுள்ளார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் நாம் வழங்கிய சலுகைகளை நிறுத்தியுள்ளார்கள்.

ஏன் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனக் கேட்டால் பாராளுமன்றத்தில் எமக்குப் பெரும்பான்மை இல்லை. அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்கிறார்கள். நாங்கள் 2015 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய போது எமக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கவில்லை. பெரும்பான்மை இன்றியே அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம்.

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் தொகையை அதிகரித்தோம். நூறு நாள் வேலைத் திட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தோம் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.


எனவே மீண்டும் மீண்டும் மக்கள் முன் பொய் உறைக்காமல் மத்திய வங்கி கொள்ளையர்களையும் உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளையும் சிறையிலடையுங்கள். விவசாயிகளுக்கு வழங்குவதாகக் கூறிய இலவச உரத்தை வழங்குங்கள், அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரியுங்கள், பட்டதாரிகளுக்கு வேலை வழங்குங்கள், மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்.

இதற்கு நாம் மூன்றில் இரண்டு அல்ல அதற்கு மேலான ஆதரவையும் பாராளுமன்றத்தில் வழங்கத் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அபிவிருத்தி நடவடிக்கைகளில் இடம்பெறும்

# ஊழலை ஒழிக்க பாரிய போராட்டம்

## ஜனாதிபதியிடம் பேராயர் வலியுறுத்து



(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலைய சுற்றுப்புறச் சூழலில் ஏற்பட்டிருக்கும் சுற்றாடல் மாசு மற்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் சுற்றாடல் சட்ட திட்டங்களுக்கேற்ப அனல் மின் நிலையத்தை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் சிலாபம் மறை மாவட்ட ஆயர் உள்ளிட்ட பிரதேசத்தின் சமயத் தலைவர்கள், பிரதேசவாசிகள் மற்றும் சூழலியலாளர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திட்டத்தை ஆரம்பிக்கும் போது இணக்கம் காணப்பட்ட சுற்றாடல் சார்ந்த உடன்படிக்கை விதிகளை கடந்த காலத்தில் உரிய முறையில் நடைமுறைப் படுத்தாததன் காரணமாக சுற்றாடலுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

நுரைச்சோலையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 3ஆவது கட்டத்தின் கீழ் 900 மெகா வோட்ஸ் மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதன் நான்காவது கட்டம் குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. நாட்டின் துரித அபிவிருத்திக்கு மின் சக்தி தீர்க்கமானதொரு அம்சமாகும். எனவே மாற்று மின் சக்தி குறித்து உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

மாற்று மின்சக்தி குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். அது சுற்றாடல் மற்றும் மக்கள் நேயமிக்கதாக இருக்க வேண்டும். நுரைச்சோலை மின் நிலையத்தின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு மின்சக்தி அமைச்சு சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் உள்ளிட்ட குழுவொன்றை ஈடுபடுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நானும் மின்சக்தி நிலையத்தை கண்காணிப்பதற்கு வருகை தருவேன். சமயத் தலைவர்களுடனும் பிரதேச மக்களுடனும் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

2030ஆம் ஆண்டாகும் போது நாட்டின் மொத்த மின்சக்தி தேவையில் 80 வீதத்தை மீள் பிறப்பாக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பின்தொடரல் ஆய்வை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கப்பட்டது.

இதேவேளை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஊழல் மற்றும் மோசடியை ஒழித்துக்கட்டி பாரிய போராட்டம் ஒன்றில் ஜனாதிபதி ஈடுபடவேண்டியுள்ளதென பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு முதலீடுகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் குறித்தும் பேராயர் கவலை தெரிவித்தார். (இ-7)

# கட்சியின் தீர்மானத்தை மீறிச் செயற்பட்டதால் அமைப்பாளர் பதவியிலிருந்து சந்திரிகா நீக்கம்

## சுதந்திரக் கட்சி விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சியின் தீர்மானத்தை மீறிச் செயற்பட்டமைக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை அத்தனகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு தீர்மானித்தது.

அத்தோடு இந்த வெற்றிடத்துக்கு சுதந்திரக் கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவண்ண பதில் தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை இரவு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற அரசியல் குழு கூட்டம் மற்றும் மத்திய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி



ஜெயசேகர தெரிவித்தார்.

நாட்டில் மக்கள் எதிர்பார்க்கும் ஒழுக்கமுடைய தலைமைத்துவத்தின் கீழான ஆட்சியைத் தோற்றுவிப்பது அவசியமாகும். எனவே கட்சியின் தீர்மானங்களை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

அதற்கேற்பவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு அவருக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்படும். எனினும் அவர் கட்சியிலிருந்து நீக்கப்படவில்லை என்பதால் ஆலோசகர் பதவியில் தொடர்ந்தும் அவரே காணப்படுகின்றார். கட்சிக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆற்றிய பணிகளை மறந்து செயற்பட முடியாது.

எனவே அவரது கட்சி உறுப்புரிமையை நீக்குவது தொடர்பிலோ அல்லது ஆலோசகர் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பிலோ எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

அரசியல் குழுக் கூட்டம் மற்றும் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தயாசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றத்தில் பசுவதைக்கெதிராக சட்டங்கள் இயற்றுவது இலகுவில் சாத்தியமில்லை-சித்தார்த்தன் எம்.பி.

(குப்பிழான்)

எங்களுடைய மக்களும் பசுவதைக்கெதிரான காரணியாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். பசுவதைக்கெதிரான குரல் எங்களுடைய பகுதிகளில் ஒலிப்பது மிகமிகக் குறைவானதாகவுள்ளது. பசுவதை எங்களுடைய சமயத்திற்கு மாறானதொன்று என்பதனை பரந்தளவில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவது அவசியமானது.

இவ்வாறான செயற்பாடே எங்களுக்குப் பயனளிப்பதாகவும் அமையும் எனத் தெரிவித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்றத்தில் பசுவதைக்கெதிராக சட்டங்கள் இயற்றுவது இலகுவில் சாத்தியமில்லை எனவும் தெரிவித்தார்.

பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையம், யாழ். பிரதேச கிராம அபிவிருத்திச் சமாசம் மற்றும் சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்துடன் இணைந்து நடத்திய பட்டிப் பொங்கல் விழாவும், கோபவனியும் கடந்த வியாழக்கிழமை யாழில் சிறப்புற இடம்பெற்றது.

குறித்த விழாவில் பசுவதைக் கெதிராக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா மற்றும் விழா ஏற்பாட்டாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் இதுவரை கண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் எங்களுடைய சைவ சமயத்தை முன்னிறுத்திச் செயற்பாடுகளைச் செய்யும் பாராளுமன்ற உறுப்பினராக இந்த விழாவில் கலந்து கொண்டுள்ள யோகேஸ்வரன் காணப்படுகிறார்.

அவர் சீனா, ஓமான் போன்ற



நாடுகளுக்குச் செல்கின்ற போது கூட எங்களுடைய சைவசமய சின்னங்களை விட்டுச் செல்பவரில்லை. பெரும் கூட்டங்கள், ஆலோசனைகளுக்குச் செல்கின்ற போது கூட சிவசின்னமான விபூதி அவரது நெற்றியில் நிறைந்திருக்கும்.

இவ்வாறான சைவ பக்தன் பசுவதையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு முன்னெடுக்கும் போது அவருக்கு உறுதுணையாகவிருந்து நாமும் முயற்சிகள் எடுப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)

# அபுதாபியின் அழைப்புக்கு ஜனாதிபதி கோட்டா பதில்

(கொழும்பு)

அபுதாபி அரசின் முடிக்குரிய இளவரசரும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதித் தலைவருமான ஷேக் மொஹமட் பின் சயிட் அல் நஹ்யான் (Sheikh Mohammed bin Zayed Al Nahyan) தமது நாட்டுக்கு வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விசேட அழைப்பொன்றை விடுத்தார்.

ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த அவர், இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்த வேண்டுமென்ற தனது எதிர்பார்ப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஐக்கிய இராச்சியத்திற்கு



வருகை தருமாறும் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

முடிக்குரிய இளவரசரின் வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டதாகவும் விரைவில் அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார். (இ-7)

# மின் கம்பியில் மோதி சிவில் பாதுகாப்பு படை வீரர் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை-கோமரங்கடவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கறக்கஹவெவ பகுதியில் யானைக்கு வைத்த மின் கம்பியில் மோதி சிவில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அஜித் குணசேகர (வயது-32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

# நல்லாட்சி அரசில் காணி சுவீகரிப்பில் உரிய மதிப்பீடு வழங்கப்படவில்லை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்ட போது உரிய மதிப்பீடு வழங்கப்படவில்லையென அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அபிவிருத்தி செயற்பாடுகள் எனும் பெயரில் தம்முடைய தனிப்பட்ட தேவைகளையே நிறைவேற்றி, அசாதாரணமான ஆட்சியொன்றை முன்னெடுத்துச் சென்றதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதிவேக நெடுஞ்சாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்ட அமைச்சர், அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தியில் மக்கள் இதுவரை காலமும் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். கடந்த அரசாங்கத்தால் செவிசாய்க்கப்படாத மக்களின் பிரச்சினைகள் பல உள்ளன.

அவற்றால் மக்கள் இன்றும் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் என்ற வகையில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து, அமைச்சு மட்டத்தில் இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் நோக்கிலேயே கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ அரசின் கீழ் காணிகளுக்கான இழப்பீடுகளை வழங்கும் பொழுது காணியின் தற்போதைய பெறுமதிக்கு இழப்பீடுகளை வழங்கவில்லை. மாறாக முப்பது வருடங்களின் பின் இக் காணிகளின் பெறுமதியை கணக்கிட்டே இழப்பீடுகளை வழங்கினோம்.

அபிவிருத்திச் செயற்பாடுகளின் பொழுது மக்களை துன்புறுத்தவில்லை. அது மாத்திரமன்றி இதனை பொருளாதார ரீதியில் மக்களைப் பலப்படுத்தும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். காணிகளைக் கையகப்படுத்தும் போது அவர்களின் எதிர்காலம் உறுதியான முறையில் பாதுகாக்கப்படும் வகையில் காணிகளுக்கான உரிய பெறுமதிகளை வழங்கிய பின்னரே காணிகளை கையகப்படுத்தினோம்.

2015 ஆம் ஆண்டில் ஆட்சியமைத்த நல்லாட்சி அரசாங்கம் மிகவும் கொடூரமான முறையில் மக்களின் பக்கத்திலிருந்து சிந்திக்காது அன்றைய காலகட்டத்தில்



காணிகளின் மதிப்பைக் கருத்திற்கொண்டு அதற்கான இழப்பீடுகளை வழங்கிக் காணிகளை கையகப்படுத்திக் கொண்டது.

இம் மதிப்பீட்டு முறையில் பல சிக்கல்கள் உள்ளன. பல கடிதங்களை அனுப்பி இவ்விடயம் தொடர்பில் மக்கள் இன்று எம்மை தெளிவூட்டியுள்ளனர்.

இப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க நாம் எதிர்பார்க்கின்றோம். மக்களுக்கான கொடுப்பனவை குறைத்து மாத்திரமன்றி, அன்று மிகவும் அசாதாரணமான முறையிலே மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

(குப்பிழான்)

இணுவிலான் சிகாகோ பாஸ்கர் எழுதிய "மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை மாலை 5 மணி முதல் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-18)

# இரத்ததானம்

(குப்பிழான்)

அமரர்- கிருபராஜா மதுசூதனின் நான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சுன்னாகம் மயிலணி நண்பர்களின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மயிலணி சைவ மகாவித்தியாலய மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-18)

# விபத்தில் தாயும் மகளும் பலி!

(தங்கொல்ல)

தங்கொல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்தனர்.

இச் சம்பவம் நேற்று முந்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

ஆட்டோவும் வானும் நேருக்கு நேர் மோதுண்டதன் காரணமாகவே குறித்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரொம்பாவ-கொரொக்கலவத்த பிரதேசத்தைச் சேர்ந்த தாயும் மகளுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

ஆட்டோ சாரதி பலத்த காயங்களுடன் நாரம்மல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பதவி வெற்றிடங்களை வெளிப்படுத்துக

## பொது நிர்வாக அமைச்சு கோரிக்கை

2019.12.31 ஆம் திகதி உள்ளடங்கலாக அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கையை தருமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கோரிக்கை விடுத்தது. அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச்செயலகங்கள் உள்ளடங்கலாக குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாவட்டச் செயலக ரீதியாக வெற்றிடங்களை அனுப்பும் போது பிரதேச செயலகங்கள் மூலம் தனித்தனியாகத் தரவுகள் அனுப்பப்பட வேண்டும் என அந்த அமைச்சு கடிதம் அனுப்பியுள்ளது. (இ-10)

# மணல் அகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலும் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுகிறது

## மாந்தை கிழக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன என மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் நவரத்தினம் ரஞ்சனா தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கில் தொடர்கின்ற மணல் அகழ்வு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 30ஆம் திகதி மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மணல் அகழ்வினைத் தடுப்பது தொடர்பாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போதிலும் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடை பெறுவதாகவே முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

தொடரும் மணல் அகழ்வினால் கிராமங்களின் முக்கிய வீதிகள் சேதமடைந்துள்ளன. மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்தாவிட்டால் மாந்தை கிழக்கின் பல கிராமங்கள் அழிவடையும் அபாயத்தில் உள்ளன.

அத்துடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதி கிடைக்காததன் காரணமாக வீட்டுத் திட்டம், கம்பெரலிய போன்ற பல திட்டங்கள் முடங்கி உள்ளதாகவும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி கிடைக்க வேண்டும். கடன்களைப் பெற்று திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்கள் பிரதேச செயலகத்திற்கு நாள்தோறும் வந்து செல்கின்றனர் எனவும் மேலும் தெரிவித்தார். (9-350)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பாட சாலை மண்டபத்தில் இடம்பெறும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஜ)

## விசேட பூஜை நிகழ்வு

பாகிஸ்தானில் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச கிக்பொக்சிங் குத்துச்சண்டை போட்டிக்கு வடக்கு மாகாணத்தை பிரதிபலித்து விளையாடவுள்ள வவுனியாவைச் சேர்ந்த ஏழு குத்துச்சண்டை வீரர்களுக்கு ஆசி வேண்டி விசேட பூஜை நிகழ்வு வவுனியா குட்செட் வீதியில் அமைந்துள்ள கருமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்றது. (ஜ-250)

# தனியார் பேருந்தில் வெடிமருந்து குச்சிகள் மீட்டு

## சாரதி மற்றும் நடத்துநர் கைது

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் 51 ஜெலக்னெட் வெடி மருந்து குச்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்றினை வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மறித்து சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த பேருந்தில் 51 ஜெலக்னேட் வெடிமருந்து குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அவற்றை மீட்ட இராணுவத்தினர் குறித்த வெடி மருந்து குச்சிகளைக் கொண்டு வந்த குற்றச்சாட்டில் தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

மீட்கப்பட்ட வெடிமருந்து குச்சிகளும் கைது செய்யப்பட்ட இருவரும் செட்டிகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், தனியார் பேருந்தும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-9)

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளை தரமுயர்த்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம், ஒட்டுசுட்டான் வைத்தியசாலைகளை தரமுயர்த்துமாறு அப்பகுதி பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

மாங்குளம் பிரதேச வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக பெயர்ப் பலகை காணப்படுகின்ற போதிலும் ஒரு பிரதேச வைத்தியசாலைக்குரிய வளங்களுடனேயே காணப்படுகின்றது.

மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்கின்ற மக்கள் மாங்குளம் வைத்தியசாலைக்கு சென்றால் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கோ கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கோ அனுப்பப்படுகின்ற நிகழ்வுகள் தொடர்கின்றன.

மாங்குளம் வைத்தியசாலையில் இருந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மகப்பேற்றிற்கு நோயாளர்காவு வண்டியில் அனுப்பப்படுகின்ற பெண்கள் திரும்பும்போது குழந்தையுடன் பேருந்திலோ அல்லது ஆட்டோவிலோ பயணிக்க வேண்டிய அவலம் காணப்படுகின்றது.

மாங்குளம் வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாததன் காரணமாக முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கே சடலங்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இந்நிலையில் மாங்குளம் வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் வைத்தியசாலைகளை தரமுயர்த்தி வளங்களை அதிகரிப்பதன் மூலம் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்கின்ற குடும்பங்கள் பெரும் நன்மையடைவார்கள் என பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. (9-350)




# தே.வீ.அ.அ.சபையின் செயற்பாட்டால் முல்லைத்தீவில் 211 பயனாளிகள் பாதிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் முழுமையாக இதுவரை வழங்கப்படாமையினால் வீட்டுத்திட்டப்பயனாளிகள் தமக்கான வீடுகளை முழுமைப்படுத்தமுடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு முற்பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்பெறாத குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறான குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்கள் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு,துணுக்காய், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு முதலாம் கட்ட மற்றும் இரண்டாம்கட்ட கொடுப்பனவுகளாக ஒரு இலட்சம் ரூபா ஒன்றரை இலட்சம் ரூபா பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்பட்ட நிலையில் ஏனைய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இவ்வாறு வீட்டுத்திட்ட பயனாளிகள் தமக்கான வீடுகளுக்குரிய கட்டுமானப் பணிகளை தொடங்கிய நிலையில் அவற்றை இடைநடுவில் கைவிட்டுள்ளனர்.

இதேவேளை ஒரு சில பயனாளிகள் வங்கிகளிலும் தனியார் நிறுவனங்களிடமும் கடன்களை பெற்று வீடுகளுக்கான கட்டுமானப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறான பயனாளிகள் தமது வீடுகளை கட்டிமுடிக்க முடியாமலும் வீட்டுக்காக பெற்ற கடன்களை செலுத்த முடியாமலும் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இரண்டாயிரத்து 211 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென 1589 மில்லியன் ரூபா நிதி தேவையான நிலையில் 428 மில்லியன்ரூபா நிதி இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பில் அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடியுள்ளதாகவும் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# கிராம வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்



(மன்னார்)

2020 ஆம் ஆண்டு மாவட்ட ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கும் ஒன்றுகூடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் ஏற்பாட்டில் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் தலைவர் பி.எஸ்.அன்ரன் தலைமையில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த ஒன்றுகூடலில் கிராம ரீதியாக இயங்கி வரும் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் நேசக்கரம் பிரஜைகள் குழு அங்கத்தவர்கள் ஊடாக 2020 ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள கிராம பிரதேச மட்ட செயற்பாடுகள், உள்ளக அபிவிருத்தி சமூக சேவை செயற்பாடுகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது

அத்துடன் கிராம மட்டத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான குறைபாடுகளை இனம்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய பிரதேச சபை மற்றும் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தும் முகமாக செய்யப்படவுள்ள பொதுக் கலந்துரையாடல் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. (ஜ-285)

முயற்சி இல்லையென்றால் உன்னால் ஜெயிக்க முடியாது. முயற்சி இருந்தால் உன்னால் தோற்க முடியாது. -அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சாதனை படைக்கும் வல்வெட்டித்துறை மண்

நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம் என்றான் பாரதி.

நிலத்தின் தன்மை அந்த நிலத்தில் விளையும் பயிர்களுக்கும் உண்டாகும் என்பது அவனின் கருத்து.

இஃது விஞ்ஞான ரீதியிலும் ஏற்புடையதாகும்.

ஆக, நிலத்தின் தன்மை எங்ஙனம் பயிர்களுக்கு ஏற்படுகிறதோ அதேபோல ஊரின் தன்மை அங்கு பிறந்த மக்களுக்கு ஏற்படும் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

இந்த வகையில் வடமராட்சி வல்வெட்டித்துறை வீரத்தின் விளைநிலமாகும்.

இங்கு வல்வெட்டித்துறை மக்களின் வீரம் என்பது பண்பாட்டு விழுமியங்களைக் காப்பாற்றுவதிலும் துணிச்சல்மிக்க முயற்சிகளை முன்னெடுப்பதிலும் பரவியிருப்பதுதான் நாம் கவனிக்க வேண்டிய விடயம்.

ஆம், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்த மண் வல்வெட்டித்துறை.

அந்த வீரன் பிறந்த இடத்து மண்ணில் ஒரு பிடியையேனும் எடுத்துச் செல்ல வேண்டும் என தென்பகுதி மக்கள் விருப்பங் கொண்டு வல்வெட்டித்துறை மண்ணை எடுத்துச் சென்று பெருமை கொண்டனர்.

இதேபோன்று வல்வெட்டித்துறை தந்த வீரமறவர்களின் நீண்ட பட்டியலை இங்கு தந்துவிட முடியும். அந்தளவில் வல்வெட்டித்துறை வீரம் செறிந்த மண்.

இது தவிர, ஆழிக்குமரன் ஆனந்தன் போன்றவர்களின் சாதனைகள் அந்த மண்ணுக்குப் பெருமை கொடுத்தன.

ஆக, எதை எடுத்தாலும் அதனைச் சாதனையாகச் செய்ய வேண்டுமென்ற வீரம் வல்வெட்டித்துறை மண்ணுக்கு இருந்ததாலேயே அன்னபூரணி கப்பலை ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பிய சாதனையை வல்வெட்டித்துறை மண் செய்தது.

யுத்த காலப் பகுதியில் வல்வெட்டித்துறை மக்கள் பட்ட கஷ்ரங்கள் துன்பங்கள் சொல்லுந்தரமன்று.

இதனால் வல்வெட்டித்துறையை விட்டு தமிழகத்துக்கும் ஏனைய நாடுகளுக்கும் கணிசமானவர்கள் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

இத்துணை இடர்கள் நேர்ந்தபோதிலும் வல்வெட்டித்துறை மண்ணில் இருக்கின்றவர்கள் தங்கள் பண்பாட்டு மரபை இம்மியும் கைவிட்டனர் அல்லர்.

இந்திரவிழாக் கொண்டாட்டம் இன்றும் முன்பு போல நடக்கிறது எனும்போது, அதற்குள் இருக்கக்கூடிய பண்பாடு மீதான பற்றுதல் வல்வெட்டித்துறை மக்களிடம் எவ்வாறு உள்ளதென்பதை உணர்வதற்குப் போதுமானது.

இதேபோன்று வருடந்தோறும் நடைபெறும் பட்டத்திருவிழா பற்றி இங்கு நாம் எங்ஙனம் வியந்து சொல்வது.

யாருமே நினைத்துப் பார்க்க முடியாத அளவில் கற்பனைவளங்களைக் கருப்பொருளாக்கி அவற்றை பட்டமாய் வானத்தில் பறக்க விடுகின்ற அற்புதம் எங்கள் ஈழத் திருமண்ணுக்குப் பெருமை தருவதாகும்.

ஆம், தைப்பொங்கல் திருநாளில் வல்வெட்டித்துறை கடலோரம் பட்டம் ஏற்றுகின்ற அந்தப் பெருவிழா அந்த ஊரின் பெருமை கூறும் திருநாளாகும்.

இவ்வாறாக பண்பாட்டு விழாக்களைத் தொன்று தொட்டு காத்து வரும் வல்வெட்டித்துறையை சாதனைக்குரிய மண் என்று மகுடம் சூட்டுவோம்.

# பகிடிவதையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல அறிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் பகிடிவதை காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன, இதன் அறிக்கை 3 மாத காலப்பகுதிக்குள் வழங்கப்பட இருப்பதாகவும், இதற்கான திட்டம் தற்போது வகுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சலீம் மர்சுக், முன்னாள் உபவேந்தரான நாரதவர்ண சூரிய, பேராசிரியர் சங்கைக்குரிய மாகம்மன பஞ்ஞானந்த தேரர், கலாநிதி பெனட் சாந்த அடிகளார், கலாநிதி சந்திரா அம்புல்தெனிய மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசன்ன லால் டி அல்விஸ் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கத்தவர்களாகச் செயற்பட உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அதன் அமைப்பாளரும் செயலாளருமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உப தலைவர் திருமதி ஜனிதா லியனகே செயற்படவுள்ளார் என்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை கடந்த 5 வருட காலப்பகுதியில் பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக கல்வியைக் கைவிட்ட மாணவர்களுக்கு மீண்டும் பல்கலைக்கழக கல்விக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரம் பேர் பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக கல்வியைக் கைவிட்டுள்ளனர். இவர்கள் உள ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தல்களுக்கு ஆளானமை இதற்கான காரணமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம-3)

இராணுவம் மீது தாக்குதல்

## சந்தேகத்தில் மேலும் ஒருவர் இராணுவத்தால் நேற்று கைது

(கரணவாய்)

இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் ஒரு சந்தேகநபர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தைப்பொங்கல் தினமான கடந்த புதன்கிழமை இரவு நாகர்கோவில் பகுதியில் ரோந்து சென்றுகொண்டிருந்த மருதங்கேணி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் மறுநாள் வியாழக்கிழமை அப்பகுதியைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் விடுவிக்கப்பட்ட நிலையில் மூவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீகுமார் பிரதீபன் என்ற இளைஞன் நேற்று சனிக்கிழமை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். விளையாட்டு நிகழ்வு ஒன்றிற்காக நாகர்கோவிலில் இருந்து மருதங்கேணி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது அவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இளைஞர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இவரிடம் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## விடுதலையும் சுதந்திரக்காற்றும் எமது இனத்தின் நாகரிகம்

மாவை எம்.பி தெரிவிப்பு

(சாவகச்சேரி)

எமது இனத்தின் நாகரிகம் தான் எமது விடுதலையும், சுதந்திரக் காற்றும். ஆகவே எமது நாகரிகத்தைக் கைவிடாமல் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் ஆவின அறவோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரியில் இடம்பெற்ற உழவர் திருவிழா மற்றும் பட்டிப் பொங்கல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

பொங்கல் விழா தமிழர்களின் பாரம்பரியத்தை உலகெங்கும் பறைசாற்றி நிற்கின்றது. குறிப்பாக எம் தேசத்தில் மிகச் சிறப்பாக பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. எமது மக்கள் இந்த தேசத்தில் அழிந்து போனாலும், உயிரைக் கொடுத்தாலும் தமிழர் பாரம்பரிய நிகழ்வுகள் மூலமாக எமது பண்பாடுகள் மற்றும் பாரம்பரியத்தை காத்து நிற்க வேண்டும். அதுவே எமது மக்களின் எழுச்சியை ,எமது மக்களின் ஆர்வத்தை தூண்டும். இவ்வாறான பெருவிழாக்கள் எமது இனத்தின் ஒழுக்கத்தை; எமது இனத்தின் பண்பாடு மற்றும் நாகரிகத்தை பேணிப் பாதுகாக்கும்.

எமது மக்கள் தமது இனத்தின் விடுதலைக்கு தங்களை எடுத்துச் செல்வதற்கான ஆர்வத்தையும், தீவிரத்தையும் இவ்வாறான பெரு விழாக்கள் ஏற்படுத்தும். சகலரும் தமது எதிர்காலத்தை நினைத்து தமது பண்பாடு, பாரம்பரியம் மற்றும் நாகரிகத்தை கைவிடக்கூடாது. எமது நாகரிகமே எமது விடுதலை. எமது நாகரிகமே எமது சுதந்திரக் காற்று. நாம் அந்த சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இவ்வாறான பெரு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-3,30)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்


மிக வேகமாக முடிவெடுக்கக்கூடாது. ஏனென்றால் வேகமான முடிவுகள் உறுதியானவை அல்ல!. -ரூஸோ

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- பிள்ளைகளே! தந்தையின் போதனைக்குச் செவி சாயுங்கள் மெய்யுணர்வை அடையும்படி அதில் கவனம் செலுத்துங்கள்.
- தந்தையைக் கொடுமைப்படுத்தித் தாயைத் துரத்திவிடும் மகன், வெட்கக் கேட்டையும் இழிவையும் வருவித்துக் கொள்வான்.
- மனக்கவலையை ஒழியுங்கள், உடலுக்கு ஊறு வராதபடி காத்துக் கொள்ளுங்கள், குழந்தைப் பருவமும் இளமையும் மறையக் கூடியதே.
- நீ இளவயதின் இச்சைகளை விட்டு ஓடிவிடு. தூய்மையான உள்ளத்தோடு ஆண்டவரை பெயரை அறிக்கையிட்டு வழிபடுவோருடன் நீதி, நம்பிக்கை, அன்பு, அமைதி ஆகியவற்றை நாடித் தேடு.
- நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடித்துக் கொள்ளாதீர்கள்.
- மனவலிமை கொண்டவர்களாகிய நாம் வலுவற்றவர்களின் குறைபாடுகளைத் தாங்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.
- கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்பர் அவரே ஆசி பெற்றவராவார்.
- பெற்றுக் கொள்வதைவிட, கொடுத்தலே பேறுடைமை என்று கடவுள் கூறியதை எப்போதும் நினைவு கூருங்கள்.

# ஒரு நாள் கிரிக்கெட்டில் விளையாட ஆசைப்படும் ஏபி.டிவில்லியர்ஸ்




கிரிக்கெட் உலகில் 360 டிகரி என செல்லமாக அழைக்கப்படும் தென்னாபிரிக்காவின் அதிரடி துடுப்பாட்ட வீரர் ஏபி.டிவில்லியர்ஸ் ஒருநாள் கிரிக்கெட்டிலும் விளையாடுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு திடீரென சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற ஏபி.டிவில்லியர்ஸ், மனம் மாறி தற்போது மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆர்வம் காட்டியுள்ளார். இதற்காக ஏபி.டிவில்லியர்ஸ், தனது விருப்பதை வெளியிட்டிருந்தார். எனினும், உலகக் கிண்ணத் தொடரின் போது அவரது விருப்பம் நிராகரிக்கப்பட்டது.

எனினும், தற்போது தென்னாபிரிக்க அணியில் மாற்றம் கொண்டுவர முன்னாள் வீரர்களான கிரேம் ஸ்மித்தை இயக்குநராகவும் மார்க் பவுச்சரை தலைமைப் பயிற்சியாளராகவும் நியமித்தையடுத்து, ஏபி.டிவில்லியர்ஸின் ஆசை நிறைவேறத் தொடங்கியுள்ளது எனலாம்.

அத்தோடு, நடப்பு ஆண்டு நடைபெறவுள்ள இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாட வேண்டுமென்ற ஏபி.டிவில்லியர்ஸின் ஆசையை, அணியின் சிரேஷ்ட வீரரான டுபிளெஸிஸ்சும் வரவேற்றுள்ளார்.


தனது மீள் வருகையை நிரூபித்துக் காட்ட வேண்டிய நிலையில் உள்ள டிவில்லியர்ஸ், அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பிக்பேஷ் தொடரில் களமிறங்கியுள்ளார்.

இதற்கிடையில் ஒருநாள் கிரிக்கெட்டிலும் விளையாடுவதற்கு ஏபி.டிவில்லியர்ஸ் விருப்பம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,

"நான் 50 ஓவர் கிரிக்கெட்டில் விளையாட விரும்புகிறேன். அதில் எந்தவொரு பிரச்சினையும் இருக்காது. நான் எப்போதுமே தென்னாபிரிக்காவுக்காக விளையாட விரும்புகிறேன். சர்வதேச கிரிக்கெட் விளையாடுவது மிகப்பெரிய கௌரவம் எனத் தெரிவித்தார். (ஜ)

# தனது கடைசிப் போட்டியை ஆடி முடித்து விட்டார் டோனி

## ஹர்பஜன் கூறுகிறார்




இந்திய கிரிக்கெட் சபையின் இந்த ஆண்டுக்கான வருடாந்த ஒப்பந்தத்தில் இருந்து டோனி நீக்கப்பட்டதால் அவரின் சர்வதேச கிரிக்கெட் முடிந்து விட்டது.

இந்நிலையில் டோனி ஏற்கனவே இந்தியாவுக்கான அவரது கடைசிப் போட்டியை விளையாடி விட்டார் என்று ஹர்பஜன் சிங் தெரிவித்தார்.

இது குறித்து ஹர்பஜன் சிங் தெரிவிக்கையில், பொதுவாக இதன்மூலம் டோனியின் சர்வதேச கிரிக்கெட் போட்டி முடிவுக்கு வந்துள்ளது. உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டிக்குப்பின் அவர் மீண்டும் அணியில் இடம் பெறாமல் இருக்கிறார்.

உலகக் கிண்ணம்தான் இந்தியாவுக்காக அவர் விளையாடிய கடைசிப் போட்டியாக இருக்கும் என நான் கேள்விப்பட்டேன். தானாகவே ஏன் அணியில் இடம் பிடிக்கவில்லை என்பதற்கான மனநிலையை அவர் ஏற்கனவே தயார்படுத்திக்கொண்டார் என மேலும் தெரிவித்தார். (ஜ)






கிளிநொச்சி சிவபாத கலையக அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பரமேஸ்வரி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான மு.சந்திரகுமார், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆ.பவானந்தன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

# தைப்பொங்கலை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை 19 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் கரவெட்டி வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன் வெற்றி பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். (ஜ-18)

# சகலதுறை வீரர் காலமானார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான பாபு நட்கார்னி, தனது 86 ஆவது வயதில் காலமானார். பொவாயில் உள்ள தனது மகள் அனுராதா கரேயின் இல்லத்தில் அவர் உயிர் பிரிந்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

வயது முதிர்வு காரணமாகவே அவர் உயிரிழந்தார். 1950 களிலும் 60 களிலும் நட்கர்னி 41 பயிற்சி போட்டிகளில் ஆடியுள்ளார். மகாராஷ்ட்ரா நாஷிக்கில் பிறந்த நட்கர்னி இடது கை சுழற்பந்து வீச்சில் புகழ்பெற்றவராவார்.

தன் கிரிக்கெட் வாழ்க்கையில் ஓவருக்கு சராசரியாக 1.67 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்த அதிசிறந்த பந்து வீச்சாளர் நட்கார்னி.

1964 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற பயிற்சி போட்டியில் 21 மெய்டன் ஓவர்களை தொடர்ச்சியாக வீசி இதுவரை யாரும் செய்யாத சாதனைக்குச் சொந்தக்காரர் பாபு நட்கர்னி. 32 ஓவர்கள், 27 மெய்டன், 5 ஓட்டங்கள், விக்கெட் இல்லை. இது உலக அளவில் சிறந்த பந்து வீச்சாக இன்றுவரை திகழ்கிறது. (ஜ)

# பிக்பேஷ் தொடரில் மென்பேர்ன் அணி வெற்றி

பிக்பேஷ் இருபது-20 தொடரின் 41 ஆவது லீக் போட்டியில் மென்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

மென்பேர்ன் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், மென்பேர்ன் ஸ்டார்ஸ் அணியும் பெர்த் ஸ்கொர்சர்சஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மென்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மென்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 141 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஹில்டன் காட்ரைட் ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களையும் கிளென் மேக்ஸ்வெல் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெர்த் ஸ்கொர்சர்சஸ் அணியின் பந்துவீச்சில், மெத்தியு கெல்லி 3 விக்கெட்டுகளையும் ஜெய் ரிச்சட்சன் மற்றும் பவாட் அஹமட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 142 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பெர்த் ஸ்கொர்சர்சஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 131 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால் மென்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றதை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கேமரூன் பான்கிராப்ட் 32 ஓட்டங்களையும் குர்டிஸ் பெட்டர்சன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.




மென்பேர்ன் ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில், நிக் மெட்டின்ஸன் 3 விக்கெட்டுகளையும், டேனில் வோரொல், சந்தீப் லமேச்சன், கிளின்ட் ஹின்ச்லைப் மற்றும் கிளென் மக்ஸ்வெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 25 ஓட்டங்களையும் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்திய கிளென் மக்ஸ்வெல் தெரிவு செய்யப்பட்டார். (ஜ)

## பயங்கரவாத...

கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன ஓய்வு பெற்றதன் பின்னர் குறித்த பதவி வெற்றிடத்திற்காக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பயங்கரவாத விசாரணைப் பிரிவு பிரதி பொலிஸ் மா அதிபர் நுவன் வெதசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (ம-3)

# சீனாவிடமிருந்து வை 12 ரக விமானங்களை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

சீனாவிடமிருந்து வை.12 ரக விமானங்கள் இரண்டினை அரசாங்கம் கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விமானங்களை 6 மில்லியன் டொலர்கள் செலவில் இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.



இதேவேளை அண்மையில் ஹப்புத்தளை பகுதியில் உடைந்து விழுந்து விபத்துக்குள்ளான விமானம் கடந்த 30 வருடம் பழைமையான வை.12 ரக விமானம் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விமானம் சீனாவின் ஹெபின் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்நிலையிலேயே சீனாவிடமிருந்து வை. 12 ரக விமானங்களை அரசாங்கம் கொள் வனவு செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஐ.நாவுக்கான இலங்கை...

தின்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரஞ்சித் சிங் சந்து அமெரிக்காவுக்கான இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக இந்திய பிரதமர் அலுவலகத்தின் கூட்டு செயலாளராக கடமையாற்றிய சிரேஷ்ட ராஜதந்திர அதிகாரியான கோபால் பாக்லே நியமிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்...

பட்டு சிகிச்சைப்பெற்று வந்த போது அவரை பார்வையிடுவதற்கு ரவூப் ஹக்கீம் சென்றமை தொடர்பாகவே முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது.

மேலும் இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தன்னிடம் இருப்பதாகவும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - காத்தான்குடி பகுதியில் கைக்குண்டு ஒன்று வெடித்த சம்பவமொன்றில் காயமடைந்த ரில்வான், கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காலத்திலேயே அவரை பார்வையிட ரவூப் ஹக்கீம் சென்றதாகவே முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு தொடர்பாக பொலிஸ்மா அதிபரே ரவூப் ஹக்கீமிடம் விசாரணைகளை முன்னெடுக்க உள்ளார் என தெரிவித்துள்ளது. (ம-3)

## 360 கிலோ...

யாழ்ப்பாணம் விசேட பொலிஸ் அதிரடி படையினருக்கு கிடைத்த ரகசிய தகவல்களின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை மதியம் யாழ். நகர் பகுதிகளில் உள்ள கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதன் போது ஒரு கடையில் இருந்து தடை செய்யப்பட்ட 30 கிலோ தங்கூசி வலையும் மற்றைய கடையில் இருந்து சுமார் 330 கிலோ தங்கூசி வலையும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட கடை உரிமையாளர்கள் இருவரையும் மீட்கப்பட்ட வலைகளையும் விசேட பொலிஸ் அதிரடி படையினர் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம், ஒப்படைத்தனர்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடை உரிமையாளர்களையும் வலைகளையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர். (ம-3.114)

## ஜனாதிபதி...

கைக்கு விஜயம் செய்திருந்த போது விடுத்த அழைப்பிற்கமைய ஜனாதிபதி அங்கு செல்லவுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி சீன ஜனாதிபதி உள்ளிட்ட பலரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 7 ஆம் திகதி இந்தியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

பிரதமராக பதவியேற்றதன் பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும்.

இந்த விஜயத்தின் போது, அவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பலரை சந்திக்கவுள்ளார்.

இதன்போது, இரு தரப்பு உறவுகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. (ம-3)

## இன்று மழை...

பட்டுள்ளது.

அத்துடன் மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-3)

## இந்திய பாது...

13 ஆம் திருத்த சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் மேற்படி நேற்றைய சந்திப்பு முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. (ம-3)

## ஐக்கிய...

பூர்வ இல்லத்தில் நேற்று இந்த சந்திப்பு இடம் பெற்றது.

சுமார் ஒரு மணித்தியாலம் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலை மற்றும் அடுத்த கட்ட செயற்பாடுகள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி தொடர்பில் கட்சி தலைவர்கள் சபாநாயகர் கரு ஜயசூரியவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (ம-3)

## தலைமைத்து...

முன்நிறுத்தி எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கலந்துரையாடுவதற்கு தான் தயாராகவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாற்றமடையவுள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் வினவப்பட்டது.

அதற்கு அவ்வாறான திட்டம் இல்லை என அவர் பதிலளித்தார். (ம-3)

## சிங்கலே...

பிள்ளையார் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு விஜயம் செய்தனர்.

பௌத்த கலாசார மத்திய நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் ராவண பலகாய அமைப்பின் தலைவர் இத்தா கந்தே சத்தா திஸ்ஸ தேரர் மற்றும் சிக்கலே அமைப்பை சேர்ந்த ,மடில்லே பஞ்ஞாலோக தேரர் ஆகியோர் அடங்கிய பிக்குகள் அடங்கிய குழுவினர் இரவு 7 மணியளவில் வருகைதந்து ஆலயம் அமைந்துள்ள பகுதியை பார்வையிட்டதோடு பிள்ளையார் ஆலய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையை சேர்ந்த அமைப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மேலும் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு எதிரே உள்ள இராணுவ முகாமுக்குள் நீராவியடி பகுதியில் அமைந்துள்ள குறித்த குருகந்தே ரஜமகா விகாரையின் தொன்மையை சொல்லும் தொல்பொருள் சிதைவுகள் இராணுவத்தினரால் அருங்காட்சியகமாக வைக்கப்பட்டு இருக்கும் இடத்துக்கும் சென்று பார்வையிட்டனர் .

கொழும்பில் இருக்கும் பௌத்த பிக்குகளைவிட வடக்கு கிழக்கில் வசிக்கும் பிக்குகள் பல்வேறு இன்னல்களை சந்திப்பதாகவும் தமிழ் இனவாதிகளால் அவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாகவும் அந்த நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கோடு அவர்களுக்குரிய பாதுகாப்பை ஏற்படுத்தி பௌத்த மதத்தை வளர்க்கும் நோக்கோடு தாம் இப்பகுதிக்கு விஜயம் செய்ததாக ராவண பலகாய அமைப்பின் தலைவர் இத்தா கந்தே சத்தா திஸ்ஸ தேரர் தெரிவித்தார். (ம-3)

## இலங்கையின் பாதுகாப்பை...

இருநாட்டு இராணுவத்தினருக்குமிடையே பலமான ஒத்துழைப்புகள், சமுத்திர பாதுகாப்பு, கரையோர பாதுகாப்பு, படைகளுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கிடையிலான சமுத்திர வலயம் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்ய வேண்டிய தன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டிய இந்திய பாதுகாப்பு ஆலோசகர், ஏனைய பிராந்திய நாடுகளையும் கண்காணிப்பாளர்களாக இந்த செயற்பாட்டில் இணைத்துக்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இரகசிய தகவல்களை ஒன்று திரட்டும் தொழிநுட்பத்திற்கு இலங்கைக்கு உதவியளிக்க இந்தியா உறுதியளித்துள்ளது. அத்துடன் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இலங்கை பாதுகாப்பு படையினருக்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளது. மேலும் பூகோள ஒருங்கிணைப்பு மையத்தினை ஸ்தாபித்தல் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-3)

























## வேலைக்கு ஆட்கள் தேவை

YK Plaza காட்சி அறைக்கு வேலைக்கு ஆண்கள் தேவை. (1908)

சம்பளம் - 21000/-, வயது 18 - 40
விருப்பம் உள்ளவர்கள் நேரில் வரவும்

No.39, Stanley Road, Jaffna.
021 222 3530, 070 304 3636



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் குறொஸ் றோட்டில் 2 நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 7 (ஏழு) பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு. காணியை பார்வையிட்ட பின்பு விலை பேசித் தீர்மானிக்கப்படும். தரகர் தேவையில்லை. (1912)

மேலதிக விபரங்களுக்கு
Whatsapp, Viber, IMO
0776078888, 0778015156



## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-8954)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK – 550*/= Kg (C-8785)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS


தமிழர்களின் உரிமைகளைப் பறித்துவிட்டு

# அரசாங்கம் தருகிற அபிவிருத்தி எமக்கு அழிவுகளையே தரும்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழர்களின் உரிமையையும் சுதந்திரத்தையும் பறித்து விட்டு தருகிற அபிவிருத்தி எமக்கு அழிவுகளையே தரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாரதிபுர மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், தமிழர்கள் இந்த மண்ணிலே சம உரிமையுடனும் சம அந்தஸ்துடனேயே வாழ விரும்புகிறோம் என்பதையே தமிழ் மக்கள் கடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

இதைச்சிங்களத்தலைவர்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அண்மையில் இந்த அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் தமிழர்களுக்கு சோறுதான் முக்கியம் என எள்ளிநகையாடும் வகையில் கருத்து தெரிவித்தார்.

எமது இனத்தின் விடுதலைக்காகவே கந்தகம் சுமந்தும் இரவு பகலாக சரியான வேளை உணவு கூட உண்ணாமல் களங்களில் சமராடி உயிர் துறந்தவர்கள். இவர்களின் தியாகங்களை எல்லாம் கொச்சைப் படுத்தும் வகையில் அவரின் கருத்துக்கள் உள்ளன. உரிமை அற்ற அபிவிருத்தியினால் எந்தவகையான பிரயோசனமும் இல்லை என்பதற்கு கடந்த ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பின்னர் நடந்த விடயங்கள் மிகச்சிறந்த உதாரணமாகும். அப்போது இஸ்லாமிய சகோதரர்களில் எத்தனை அமைச்சர்கள் இருந்தார்கள். அத்துடன் விசேட அதிரடிப்படையினருக்கு பொறுப்பாகவும் லத்தீப் என்பவரே இருந்தார்.

அவர்களால் தங்கள் இனத்திற்கு இழைகக்கப்பட்ட அநீதிக்கு எதிராக எதுவும் செய்ய இயலாதவர்களாய் இருந்தார்கள். அவ்வாறே எமக்கும் நிகழும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினருடன் கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்களான ஜீவராசா, சிவகுமார், கட்சியின் பிரதேச அமைப்பாளர் சுபாஸ்,பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள்,பொதுமக்கள்எனபலருமகலந்துகொணடனர். (ம-3.312)


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஆங்கில எழுத்து தொடர் கொண்ட லான்சர் 50 (யப்பான்) (1918) 077 662 1660



## காணி வாடகைக்கு

56/2, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி எனும் இடத்திலுள்ள
வெற்றுக் காணியை தனியார்
நிறுவனத்தை நடத்துவதற்கு /
வேறு தேவைக்கு வாடகைக்கு /
குத்தகைக்கு கொடுக்கப்படும். (1920)

தொடர்புகளுக்கு:-
077 365 7292



## நீர்க்கசிவை தடுப்பதற்கு Waterproofing

உங்கள் சீமெந்திலான கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவுகளை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம். உலகத்தரம் மிக்க இரசாயனப் (Finex) பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். (1914)

North and East Engineering Jaffna
0775244177/0767797716/0212222363



## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் உள்ள பிரபல மோட்டார்
சைக்கிள் சேவை நிலையத்துக்கு
மெக்கானிக் அனுபவம் உள்ளோர்
மற்றும் உதவியாளர்கள் தேவை. (C-8946)

தொடர்பு
077 486 9567



## பணிப்பெண் தேவை

யாழ்.நகரத்தில் வீட்டில் தங்கி
நின்று வேலை பார்ப்பதற்கு
பெண் உதவியாளர் தேவை (C-8947)

தொடர்பு
0775440901



## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் Garmentக்கு
தையல் வேலை தெரிந்த பெண்கள் மற்றும்
பெண் உதவியாளர்கள் தேவை. (1919)

075 353 5422, 076 341 1324



## வேலைவாய்ப்பு

எமது Import நிறுவனத்தில் இவ்வாண்டுக்கான புதிய பல தரப்பட்ட வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பிக்கும் ஒவ்வொருவருடைய தகைமை மற்றும் திறமைகளுக்கேற்ப வேலைவாய்ப்பு வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

- பதவிகளுக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து வருவோருக்கு உங்கள் மாவட்டங்களிலேயே வேலை செய்யும் வாய்ப்பு பெற்றுத் தரப்படும். (1915)

தொடர்புகளுக்கு:- 077 174 3524, 076 939 3965



## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8786)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



முடிவுத் திகதி 20.01.2020

## ஊடகத்துறைச் சான்றிதழ் பயிற்சிநெறி

MRI

jaffnamediastudies27@gmail.com

- வெகுசன ஊடகத்துறையில் பிரகாசிக்க
- வானொலி,தொலைக்காட்சியில் தொகுப்பாளர் மற்றும் அறிவிப்பாளராவதற்கு
- ஊடகவியலாளராவதற்கு.
- குறும்பட இயக்குனராவதற்கு.
- வீடியோ,ஓடியோ எடிட்டிங்,
- டிசைன் & லேஅவுட்,
- கமராக்களை நீங்களே கையாளலாம்
- 100% தொழில்சார் பயிற்சிகள்



278,புகையிரத நிலைய வீதி,
கொக்குவில்,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 488 9228
076 980 1509
021 221 6277

(C-8949)



## வவுனியா கிளைக்கான பதவி வெற்றிடம்

BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON



கடந்த தசாப்தகாலமாக சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றில் அனுபவம்மிக்க உலகின் முன்னணி IATA நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட முதல் 10 தர இடங்களுக்குள் BOC TRAVELS நிறுவனமும் ஒன்றாகும்.

இவ் நிறுவனமானது முன்னணி விமான பயண முகவர்களுடனும் நட்சத்திரவிடுதிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு வாடிக்கையாளர்களுக்கு அதி உன்னத சேவையை வழங்கி வருகிறது.

எங்கள் அனுபவமிக்க பணியாளர்களோடு இணைந்து சேவை செய்வதற்கு திறமையான செயல்திறன் மிக்க அர்ப்பணிப்புள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### TRAVEL EXECUTIVES

தகைமை :

- விமான பயணச்சீட்டுக்கள் வழங்கல் ஆசன ஒதுக்கீடு என்பவற்றில் விமானசேவை டிப்ளோமா தகைமைச்சான்றிதழ் இருத்தல் வேண்டும். இத்துறையில் 3-4 வருட அனுபவமும் மேலதிக தகைமையாக Galileo Reservation முறைமை சம்பந்தமான அறிவும் இருத்தல் வேண்டும்.
- வவுனியா/ யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் தொடர்பாடல் தகைமையுடன் சரளமாக ஆங்கிலம் எழுத பேச தெரிந்திருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கு பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் அண்மையில் எடுத்த புகைப்படம் மற்றும் இரண்டு உறவினர்கள் அல்லாத பரிந்துரையாளவர்கள் விபரத்துடன் இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழு (7) நாட்களுக்குள் பின்வரும் மின்னஞ்சல் (email) முகவரியினூடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

Careers@boctravels.com (C-8940)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 261

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 19.01.2020 | தொலைபேசி : 021 222 3378



# சரித்திரம் படைக்கும் வல்வெட்டித்துறை




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

பண்டிதர் பரமலிங்கத்தின் முகத்தில் இனம்புரியாத கவலை புரையோடியிருந்தது. இதனை அவதானித்த விதானையார் விசுவலிங்கம், என்ன பண்டிதர் ஐயா ஒரு மாதிரியாக இருக்கிறியள் என வினவினார்.

விதானையாரின் கேள்விக்குப் பதில் கூறுவதைப் பண்டிதர் தாமதப்படுத்தினாராயினும் பதிலளிக்காமல் விடவில்லை.

**பண்டிதர்:** என்ன செய்யிறது, எங்கட பிள்ளையள் சிலர் தவறான முடிவுக்கு வந்து தங்கட உயிரை மாய்க்கிறதை நினைக்க இதயம் கருகிப் போகுது.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் நிலைமையை உணர்ந்த ஆலடி அமைதியாயிற்று. அந்த அமைதியைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:** பண்டிதர் சொல்லுற விடயம் எங்கள் எல்லாரையும் பாதித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொள்ள, அந்த வேதனையைத் தாங்க முடியாத தாய் தனக்குத் தானே தீமூட்டி இறந்து போனார். இதுகளை நினைக்கும் போது மனித வாழ்வே வெறுத்துப் போகிறது.

**விதானையார்:** சாத்திரியார் இங்கதான் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் பக்கபலமாக இருக்க வேணும். என்ன பிரச்சினை வந்தாலும் என்ர அம்மா, அப்பா, சகோதரங்கள் இருக்கினம் என்ற நம்பிக்கையை பிள்ளைகளிடம் ஏற்படுத்திறது பெற்றோரின் கடமை.

**மூப்பர்:** அதுமட்டுமல்ல, தங்கட பிரச்சினைகளை ஆசிரியர்களிட்டச் சொல்லி ஆலோசனை பெற முடியும் என்ற நினைப்பையும் மாணவர்களிட்ட ஆசிரியர்கள் ஏற்படுத்த வேணும்.

**கங்காணி:** எதுவாக இருந்தாலும் தற்கொலையைத் தடுப்பது தொடர்பில நாங்கள் ஆழமாகச் சிந்திக்க வேணும். இது விடயத்தில யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறை அதிக கவனம் செலுத்தி, தற்கொலையைத் தடுக்கின்ற வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றை செயல் வழிப்படுத்துவது கட்டாயமானது. இவ்வாறு கங்காணியார் கூற,



## தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்

அதனை ஆலடி மாநாட்டில இருந்த அனைவரும் தலையாட்டி ஏகமனதாக அங்கீகரித்துக் கொண்டனர்.

**விதானையார்:** அதுசரி எங்கட நீதியரசர் தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னம் பொங்கல் பானை என்று அறிவித்திருக்கிறார் போல...

**பண்டிதர்:** தைப்பொங்கல் என்பது தமிழர்களின் திருநாள். இதில பொங்கல் பானை என்பது எங்களின்ர ஓர் அடையாளம். ஆகையால நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா பொங்கல் பானையைத் தெரிவு செய்தது பொருத்தமானது தான்.

**வாத்தியார்:** ஆலடியில அரசியலைக் குறைத்துக் கொள்வது நல்லது எண்டு தான் நினைக்கிறன்.

(மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் இவ்வாறு கூறியதும் ஆலடியில மீண்டும் அமைதி நிலவியது).

அரசியல் சார்ந்த கதைகளுக்கு வாத்தியார் வரம்பு போடுகிறார் என்பதைப் புரிந்து கொண்டதாலேயே ஆலடியில அமைதி நிலவியது. எனினும் ஆலடியின் அமைதி நீண்டு செல்லவில்லை. இடையில குறுக்கிட்ட விதானையார், அரசியல் பேசினால் அது ஆபத்து எண்டு நாங்கள் நினைக்கிறம். ஆனால் அரசியல் பற்றிப் பேசி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வராமல் விடுவதாலதான் ஆபத்து என்பதை எங்கட மக்கள் புரிந்து கொள்ளுகினமில்லை. இண்டைக்குப் பாருங்க அது கிடைக்கும் இது கிடைக்கும் எண்டு எங்களுக்கு உத்தரவாதம் அளித்த தமிழ் அரசியல் தரப்புகள் இப்ப என்ன சொல்லப் போகினம்.

அவையள் என்ன சொல்லுறது. அவையள் சேர்ந்து நிண்ட ரணில் விக்கிரமசிங்கவே பெரும் கஷ்டத்தில இருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி உடைந்து இரண்டாகிப் போட்டுது. சஜித் பிரேமதாஸ தலைமையில ஐக்கிய தேசிய முன்னணி உதயமாகுது எண்டால் இனி, ரணிலின் பாடு கஷ்டம்தானே. சிறாப்பர் கனகசபை கூறினார்.

**மூப்பர்:** யாருக்கும் நம்பிக்கையில்லாதவரை எங்கட கூட்டமைப்பு நம்பினது எண்டால் பாருங்களன்.

**பண்டிதர்:** ரணில் விக்கிரமசிங்க் பிரதமராகப் பதவியேற்ற பிற்பாடு கூட்டமைப்போட சேர்ந்து கொண்டு அப்போதைய வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை ஓரம் கட்டினவர். நான் விக்னேஸ்வரனோட கதைக்கமாட்டன். அவரோட கதைக்க வேண்டிய தேவை எனக்கில்லை எண்டெல்லாம் சொன்னவர். இப்ப தன்ர கட்சிக்காரர்களோடகூடக் கதைக்க முடியாமல் இருக்கிறார்.

**வாத்தியார்:** இதுதான் பாருங்க எப்பவும் நேர்மையாக நடக்கப் பழகிக்கொள்ள வேணும். இதை விட்டிட்டு நரித்தந்திர வேலை பார்த்தால் எண்டைக்கோ ஒருநாள் எங்களுக்கு அது உலை வைக்கும்.

**பண்டிதர்:** இதைத்தானே பட்டினத்தடிகள் தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும் எண்டு சொன்னவர்.

**சிறாப்பர்:** அப்ப பண்டிதர் ஐயா, தன்வினை தன்னைச் சுடத் தொடங்கிற்றுது எண்டு சொல்லுறியள்.

**சாத்திரியார்:** செம்பும் போ பையும் போ எண்ட கதையாய் அரசியலமைப்புச் சீர்திருத்தம் எண்ட கதையும் முடிஞ்சு போய்ச்சுதாக்கும்.

**மூப்பர்:** நீங்கள் இதைச் சொல்லுறியள். ஆனால் சம்பந்தர் ஐயா தன்னைச் சந்தித்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளிட்ட ஜெனிவாவின்ர கையில தான் எங்கட தமிழரின் வாழ்வு தங்கியிருக்கிறதெண்ட மாதிரிக் கூறியிருக்கிறார்.

**விதானையார்:** ஜெனிவா விதித்த நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றக் காலஅவகாசம் தேவை எண்டு ஜெனிவாவுக்குச் சொன்ன சம்பந்தர் ஐயா இப்ப பார்த்தியளோ.

**கங்காணி:** அதுதானே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் ஜெனிவாவில கூடியபோது; இலங்கை அரசு, சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேணும் எண்டு கூறிய போது அதனை உடனடியாக நிறைவேற்ற வேணும் எண்டு சம்பந்தர், சுமந்திரன் ஆகியோர் சொல்லியிருந்தால் இண்டைக்கு நிலைமை வேற.


ஆனால் அண்டைக்கு எங்கட ஆக்களே கால அவகாசம் கொடுக்க வேணும் எண்டு கூறினதால எல்லாம் கெட்டுப் போய்ச்சுது.

**சிறாப்பர்:** சந்தர்ப்ப சூழலைப் பயன்படுத்தாமல் எல்லாவற்றையும் போட்டுடைத்துப் போட்டு இப்ப மற்றவர்களைக் குறை கூறி என்ன பயன். எப்பவும் நாங்கள் தெளிவாகச் சிந்தித்துச் செயற்பட வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழகப் பயணம்



13 ஆவது திருத்தச் சட்ட மூலம் நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ள நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வாக $13^+$ அமையும் எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வேறுபட்ட கருத்துக்கள் பொதுமக்களைக் குழப்புமேயன்றி ஜனாதிபதி-பிரதமர் ஆகியோருக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்தமாட்டாதென்பது நிறுதிட்டமான உண்மை.

இவ்வாறு கூறுவதற்குக் காரணம் தம்பி ஜனாதிபதி, அண்ணன் பிரதமர். எனவே 13 பற்றியோ அல்லது $13^+$ பற்றியோ கதைப்பதற்கு முன்னதாக அவர்கள் இருவரும் தங்களுக்குள் கதைத்திருப்பர்.

எனவே ஜனாதிபதி- பிரதமர் ஆகிய இருவரும் கூறுகின்ற கருத்துக்கள் கேட்போருக்கு முரண்பட்டதாகத் தெரிந்தாலும் அது கூறியவர்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தாதென்பது மட்டும் உண்மை.

இவை ஒருபுறமிருக்க, தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன என்ற விடயம் விடை தெரியாத வினாவாகத் தொக்கி நிற்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்க பலத்துடன் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தீர்வு எதனையும் வழங்காமல் காலங்கடத்தலைக் கனகச்சிதமாகச் செய்து முடித்தது. இதற்குக் கூட்டமைப்பின் தலைமை கடுமையாக ஒத்துழைத்தது.

நடைமுறைக்கு வராத அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற பெயரால் நான்கு ஆண்டுகள் கடந்து போயின. அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஒருபோதும் நடைமுறைக்கு வரப்போவதில்லை என்பதைக் கூட்டமைப்பின் தலைமை நன்கு அறிந்திருந்தாலும் தமிழ் மக்களை நம்பச் செய்யும் வகையில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வரும் என உத்தரவாதம் வழங்குகின்ற அளவுக்கு கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு உதவியது.

எனினும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி காட்சி மாற்றம் பெற, இப்போது எதுவும் பேச முடியாத இறுக்கமான சூழ்நிலைக்குள் கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனோரின் உறவுகளின் பதகளிப்பு, நில ஆக்கிரமிப்பு, அத்துமீறி பௌத்த விகாரைகள் அமைப்பு என எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாத அளவிலேயே கூட்டமைப்பின் நிலைமை இருந்தது.

தங்களின் ஆதரவோடு இயங்கிய அரசாங்கத்தைக் கொண்டு எதுவும் செய்யமுடியாத கூட்டமைப்பினர், இப்போது ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சியில் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எதுவாயினும் தமிழர்களின் உரிமைசார் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்கமாட்டாதென்பதை சிங்களப் பேரினவாதம் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது.

அதாவது தமிழ் மக்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் எதனையும் கொடுக்காதென்பதில் சிங்கள அரசியல்வாதிகள் தெளிவாக உள்ளனர். இதனாலேயே இரா.சம்பந்தன் தொடர்பிலோ அல்லது கூட்டமைப்பின் இதர தலைவர்கள் தொடர்பிலோ சிங்களத் தரப்பினர் கோபம் கொள்வதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வாலாசப்படுத்தி அவர்களைத் தம்வசமாக்கிவிட முடியும் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிரூபித்தார். அவர் கையாண்ட நடைமுறையைச் சிங்கள ஆட்சியாளர்கள் பின்பற்றி கூட்டமைப்பை தமது தரப்பாக்கிக் கொள்வர் என்பதில் ஐயமில்லை.

ஆனால் கூட்டமைப்பைச் சமாளிக்கலாமென்றால், அதனைக் கடந்து நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்கள் கூட்டணி என்ற அரசியல் கட்சியை உருவாக்கி அதனூடாக தமிழ் மக்களின் உரிமைசார் விடயத்திற்குக் குரல் கொடுக்கத் தலைப்பட்டுள்ளார். இதனால் குழப்பமடைந்த சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை கடுமையாக விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

எனவே, சிங்களப் பேரினவாதத்திற்கு நீதியரசர் விக்னேஸ்வரன் இடைஞ்சலாக இருக்கப் போகிறார் என்ற பயமே அவர்களின் விமர்சனத்திற்கான காரணமெனலாம்.

தவிர, நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் அண்மையில் தமிழ்நாட்டிற்குச் சென்று உலகத் தமிழர் விழாவில் பங்கேற்று ஆற்றிய உரை இந்திய தேசத்தை விழிப்படைய வைத்துள்ளது.

ஈழத் தமிழர்களுக்கான தீர்வை இந்தியா பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று சி.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய உரை இந்திய மக்களை ஈழத்தமிழர்கள் பால் திசை திருப்பியுள்ளது.

வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சராக, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமாக தமிழகத்திற்குச் சென்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு தமிழகத்தில் நடந்த வரவேற்புகள் அவர் மீதான நம்பிக்கை தமிழகத்தில் எத்துணை தூரம் உயர்வு பெற்றுள்ளதென்பதை எடுத்துரைப்பதாகவுள்ளது.

இதற்கு மேலாக, அவரிடம் செவ்வி காண்பதில் தமிழக ஊடகத்துறையினர் காட்டிய ஆர்வத்தைப் பார்க்கையில், ஈழத்தமிழர்களின் உரிமை விடயத்தில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் நேர்மையுடனும் நிதானத்துடனும் செயற்படுகின்றார் என்ற அவதானிப்புக்கள் அங்கு இருந்துள்ளது என்பதையும் நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

உலகத் தமிழர் விழாவில் பங்குபற்றச் சென்ற சி.வி. விக்னேஸ்வரனை தமிழகத்தின் அரசியல்வாதிகளும் வழக்கறிஞர்களும் ஓய்வுபெற்ற நீதியரசர்களும் சந்தித்தமை ஒரு புதிய பரிமாணம் எனலாம்.

இவ்வாறாக சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் தமிழகப் பயணத்தின் அடுத்த கட்டம் பிரதமர் மோடியுடனான சந்திப்பாக இருக்கலாம் என்ற நினைப்புகள் தென்பகுதிப் பேரினவாதிகளுக்குக் கடுப்பை ஏற்படுத்தவே செய்துள்ளது.

ஆக, நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் தமிழகப் பயணம் ஈழத்தமிழர்களுக்கு இந்தியாவின் ஆதரவைத் தருகின்ற வெற்றிப் பயணம் என்பதை அரசியல் நோக்கர்கள் ஏற்றுள்ளனர்.

திருநீலகண்டன்




# காசி - வாரணாசி மணிகர்ணிகா

காசி "முக்தி தலம்" என்றழைக்கப்படும் உத்தரப்பிரதேசத்தில் உள்ள இத்தலம் மிகவும் பழைமைவாய்ந்தது. இவ்வூரை வாரணாசி, பனர்நிஸ் என்று அழைப்பர். விஸ்வநாத சுவாமியும் விசாலாட்சி, அன்னபூரணி அன்னையும் ஆட்சி செய்யும் இப்பீடத்தில் தங்கள் உயிர் பிரிவதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றனர். இங்குவரும் அடியவர்கள், உலகத்தில் உள்ள சைவர்கள் இந்த சேத்திரத்தை புண்ணியத்தலமாக கருதி வணங்கி அருள் பெறுகின்றார்கள்.

இவ்வூரில் கொலுவிருக்கும் அன்னை விசாலாட்சி ஆ[illegible]மா பிரியும் தருணத்தில் உள்ளவர்களை தன்மடி மீது கிட[illegible]த்தி முந்தானையால் வீசுவதாகவும் விஸ்வநாதர் இ[illegible]ர்கள் காதில் சிறீராம நாமத்தை உச்சரிப்பதாகவும் வரலாறு கூறுகின்றது. கணக்கற்ற கோயில்களைக் கொண்ட இந்நகரத்தில் உள்ள துண்டி கணபதி ஆலயம், சிறி கேதாரேஸ்வரர், சைவபுத்திரி, ப்ரம்மசாரிணி, சந்திரகண்டா, கூஸ்மாஸ்டா, ஸ்கந்தமாதா, காத்தாயினி இன்னும் பல புகழ்பெற்றவை. இந்த காசி மாநகரில் நடைபெறும் நவராத்திரி விழா மிகவும் விமர்சையானது. இந்த அன்னையர்களை வணங்குபவர்க்கு கவலைகள் நீக்கி வேண்டுவனவற்றை அளிக்கின்றாள் அன்னை விசாலாட்சி.

பராசக்தி பல வடிவங்கள் கொண்டு பக்தர்களைக் காக்கிறாள். முப்பெருந்தேவிகளாக துர்க்கா, லக்சுமி, சரஸ்



வதி போன்றோர் முறையே கல்வி, செல்வம், வீரம் போன்றவற்றை அருளுகின்றனர். அதுபோல எல்லா உயிர்களுக்குமே உணவளித்து வறுமைப் பிணியிலிருந்து காப்பதையே தன் கடமையாக கருதும் அம்பிகையே அன்னபூரணியாக அவதரித்து காசிமாநகரில் திருவருள் புரிந்து வருகின்றாள். சக்தி பீடமாகத் திகழ்கின்ற அன்னை விசாலாட்சி திருக்கோவில் தென்னிந்திய கோவிற் பாணியில் அமைந்துள்ளது. இச் சக்திபீடத் தலத்தில் கங்கை கரையோரத்தில் நீராடுவதற்கு 64 படித்துறைகள் அமைக்கப்பட்டுள்ளன. "மணிகர்ணிகாகாட்" என்ற படித்துறையில் அன்னை அருள்பாலிப்பதால் இது மணிகர்ணிகை பீடத்தலமாகவும் வழங்கப்படுகின்றது.

முக்தி தலமான காசியில் பக்தர்களுக்கு அருள்செய்ய அழகுடன் மணிகர்ணிகா பீடத்தில் அமர்ந்தவன் எல்லாத் திசைகளிலும் உள்ளவரும் போற்ற ஒருமித்த உள்ளத்தோடு சத்தியசாதனையை விளக்க சாந்த வடிவத்தோடு காட்சி தருபவன். முக்தி பேற்றை தரும் விஸ்வநாதரின் மனம் மகிழ நித்தியகல்யாணியாய் குணம் கடந்த தத்துவமாய் நிகரற்று விளங்கும் நின் அற்புத ஆற்றலை உன் அருள் பெற்ற சித்தர்களாலும் கூற இயலுமோ? உன் பெருமை இன்னதென்று எவரால் கூறமுடியும்? உன் அழகை கண்டு களித்திடும் மனத்தூய்மை பெற்றோர் யார்? எட்டுத் திக்குகளிலும் உள்ளவர்களால் போற்றி வணங்கப்படுபவள் இந்த விசாலாட்சிதேவி.

இறைவனிடம் நாம் பக்தி செலுத்துகின்றோம். ஆனால் இந்த பக்தி மிகுந்த நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். நம்பிக்கையின்றி செய்யும் எச்செயலும் நமக்கு நன்மை அளிப்பதில்லை. நம் ஒவ்வொருவருக்கும் ஓராயிரம் ஆசைகள் தேவைகள். அதை நிறைவேற்றும்படி நாம் பரம்பொருளை பிரார்த்திக்கின்றோம்.

-சிவனடியான்-



ச.அபிசன்
தரம் 8, யா/ஸ்தான சி.சி.த.க.பாடசாலை, SOS சிறுவர் கிராமம்.

## பெரிய இடத்து நாகரிகம்!

ஒரு ஜமீன் வீட்டுக் கல்யாணம். பெரிய பெரிய மிட்டாமிராசுக் குடும்பங்கள் தங்களுடன் ஆயாக்களையும் வேலைக்காரர்களையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தனர். தங்களுக்கென இட்ட வேலைகளைச் செய்யவும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதுமான வேலை அவர்களுடையது.

அங்கு வந்திருக்கும் பெண்களோ காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகளுக்கும் மூன்று விதமான ஆடைகளாக மாற்றி உடுத்தினர். அந்த ஆடைகளுக்கு ஒற்றுமையாகக் கூடிய மாதிரி கால் செருப்பு, கற்கள் பதித்த கைவளையல், கழுத்து நெக்லஸ், காதுத் தோடு ஆகியவற்றையும் மாற்றி மாற்றி அணிந்தனர்.

அங்கு வந்திருந்த இரண்டு வேலைக்காரர்களில் ஒருவன் "வேளைக்கு வேளை எப்படி எப்படியெல்லாம் ஆடை ஆணிகள் மாற்றிக் கொள்கிறார்கள் பார்த்தாயா?" என்றான்.

"வேளைக்கு வேளை ஆடை அணிகலன்களை மட்டும் தான் மாற்றிக்கொள்கிறார்களா? வேளைக்கு வேளை ஆம்படையான்களையும் மாற்றிக் கொண்டு சுற்றுவது கூடத் தெரியவில்லையா?" என்றான் இரண்டாமவன்.

"அதெல்லாம் பெரிய இடத்து நாகரிகம். நமக்கெதுக்கு அந்த வம்பு தும்பெல்லாம்" என்றான் முதலாமவன்.

## பழமொழிகள்

- சிறு பிள்ளை வேளாண்மை விளைஞ்சும் வீடு வந்து சேராது.
- சுக துக்கம் சுழல் சக்கரம்.
- சுடர் விளக்காயினும் தூண்டு கோல் ஒன்று வேண்டும்.
- சுட்ட சட்டி அறியுமா சுவை.
- சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?
- சுண்டைக்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணம்.
- சுத்தம் சோறு போடும் எச்சில் இரக்க வைக்கும்.
- சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு.
- சும்மா வந்த மாட்டை பல்லைப் பிடித்துப் பாராதே
- சும்மா கிடக்கிற சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி.
- சுயபுத்தி போனாலும் சொற்புத்தி வேண்டாமா?
- சுவரிருந்தால்தான் சித்திரம் வரையலாம்.



ம.காருண்யா
தரம் 2பி, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.








**வைகைப் புயல் வடிவேலு பற்றி உங்கள் கருத்து?**

**சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்க வேண்டும் என்பது சரியா?**

**விக்னேஸ்வரன் ஐயா பிதற்றுகிறார் என்கிறாரே ஒரு அரசியல்வாதி?**

சுதன் — குப்பிளான்

**இந்தியாவிடம் தீர்வு இல்லை. எங்களிடமே இருக்கிறது என்கிறதே அரசு?**

ஓ...அப்படியோ தம்பி சுதன். நாம் காலம் காலமாக இலங்கை ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். ஒவ்வொருத்தர் புதிதாக வரும் போதும் தீர்வு நிச்சயம் என்று சத்தியம் செய்வதும் ஆட்சியில் அமர்ந்ததும் அதைக் குப்பையில் எறிவதுமாக இருக்கிறதே தவிர எமக்கான தீர்வு வருவதாய் இல்லை.

யார் என்ன சொன்னாலும் மூன்றாவது மத்தியஸ்தம் இன்றி எமக்கான தீர்வு கிடைக்கப்போவதில்லை. இது சர்வ நிச்சயம்.

தர்ணிகா — கௌவுந்தில்

**கூட்டமைப்பு பேசுவதை விட விக்னேஸ்வரன் ஐயா பேசும் போது பவர் அதிகமாக இருக்கிறதே?**

அரசுக்கு ஒத்தணம் கொடுப்பவர்கள் தேர்தல் காலத்தில் மட்டும் மாரித்தவளைகள் என்பது மக்களுக்குத் தெரியாதா என்ன.

எங்கே விக்னேஸ்வரன் வெளிநாடுகளில் சரி, உள்நாட்டிலும் சரி பேசுவதை போல எம் தலைமை பேசட்டும் பார்ப்போம்.

எல்லாம் சுயநலம் மட்டுமே. பொதுநலத்திற்கு இம்மியும் இடமில்லை.

அருட்கதிர் — துன்னாலை

**விக்னேஸ்வரன் ஐயா பிதற்றுகிறார் என்கிறாரே ஒரு அரசியல்வாதி?**

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க யார் பேசினாலும் எந்த வரலாற்றை சுட்டிக் காட்டினாலும் பிதற்றல் என்ற ஒற்றைப் பதத்தில் முடித்துக் கொண்டு விடுவார்கள்.

என்ன செய்ய எமக்கான இருப்பை நிலைநிறுத்திப் பேசத் தெரியாத சுயநல அரசியல்வாதிகள் இருக்கும் நிலையில் விக்னேஸ்வரன் ஐயா போன்ற யதார்த்தவாத அரசியல்வாதிகளை விமர்சித்துக் கொண்டே இருப்பார்கள்.

நாம் எல்லோரும் சேர்ந்து அமோக ஆதரவில் கொண்டு வந்தவரை தூக்கி எறிந்தது எம் தலைமை. அது எதனால்? ஏன்? என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாம் பதவி, புகழ், பணமோகம் என்பதை உணர்ந்து கொண்டால் சரி.

சாளினி — தொண்டைமானாறு

**ஐ.தே.கவின் தலைமைப்பதவி பற்றி உங்கள் கருத்து என்ன?**

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றி நாயகன் டோனியின் நிலைதான் இப்போது ஐ.தே.க. தலைவர் ரணிலுக்கும் போலத் தெரிகிறது.

ஜீபா — கரவெட்டி

**தமிழர்களுக்குச் சோறுதானாம் தேவை தீர்வு தேவை இல்லையாமே?**

எங்களுடன் வயலுக்கு வந்தாயா? நாற்று நட்டாயா? அங்கு கொஞ்சி விளையாடும் எம் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப் பணி புரிந்தாயா... மானங்கெட்டவனே..

இதைச் சொல்லுபவர்கள் தமிழினம் ஒன்றும் சோற்றுக்கு வழியில்லாத இனம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தன்மானத்தை இழந்துதான் சோறு தின்று உயிர் வாழ வேண்டும் என்றால் அந்த உயிரைத் துறப்பதில் தவறேதும் இல்லை.

அரசியல் சுயலாபங்களுக்கு தமிழினத்தை இழிவு படுத்தாதீர் .அதையே இவ்விடத்தில் பதிவிடுகிறோம்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

கோகிலன் — வரணி

**சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்க வேண்டும் என்பது சரியா?**

ஏதோ ஆட்சியாளர்கள் எமக்கான தீர்வைத் தந்து விட்டார்கள் என்பது போலவும் இப்போது இந்த தேசிய கீதப் பிரச்சினைகள் பெரிய பிரச்சினை போலவும் பேசிக் கொண்டிருக்கிறோம்.

முதலில் எமக்குத் தரவேண்டிய தீர்வைத் தரட்டும். அதன் பின் தமிழா – சிங்களமா என்பதைப் பார்க்கலாம்.

நிது — யாழ்ப்பாணம்

**இந்திய சினிமாவில் அதிக ரசிகர்களைக் கொண்ட நடிகர் யார் வியாசரே?**

எம்.ஜி.ஆர் – சிவாஜி, ரஜினி – கமல், விஜய்–அஜித் இப்படி காலத்துக்குக் காலம் ரசிகர் கூட்டணி இருந்து கொண்டே இருக்கிறது.

இதில் என்ன வியப்பென்றால் முன்பு சினிமா வெறும் பொழுதுபோக்காக இருந்தது. அது இப் போது இளைஞர்களின் வாழ்வியல் ஆகிவிட அடிதடி, குடிவெறி, ரவுடித்தனம் இது தான் ஹீரோஜிஷம் என்று தறுதலையாகிறது எம் சமூகம்.

தனா — இணுவில்

**தேவதைகள் எப்படி இருப்பார்கள்?**

தேவதை என்றவுடன் வெள்ளை உடை உடுத்தி இறக்கைகள் வைத்து அழகான பெண், காதலி மாதிரி என்பார்கள் பலர்.

என்னைப் பொறுத்தவரை எனது தேவதை என் தாய் தான்.

என்னை இந்த உலகிற்குப் பிடிக்க வைத்தவள். நான் பசியில் அழ முன்னம் அதை உணர்ந்து பால் கொடுத்தவள். எனக்குக் குளிருமென்று தன் ஸ்பரிசம் தந்தவள். நான் பூமியில் வைத்த முதல் காலடிக்கு அடித்தளமாய் இருந்தவள். நான் என்னை எதிலும் முதன்மைப்படுத்த விம்பமாய் இருந்தவள்.

என்னைப் பார்த்துப் பார்த்து இந்த உலகத்தைப் புரிந்திடும் சிற்பமாய் என்னை செதுக்கியவள். இப்போப்பட்ட தெய்வம் அவள் தான் என் தேவதை இப்போதும் எப்போதும்.

நிதர்சன் — யாழ்ப்பாணம்

**வைகைப் புயல் வடிவேலு பற்றி உங்கள் கருத்து?**

தமிழ் சினிமாவில் நாகேசின் வெற்றிடத்தை யாராலும் நிரப்பிவிட முடியாது என்ற கருத்தை அடித்துடைத்து இமயமாய் உயர்ந்தவர் வடிவேலு.

அவ்வளவிற்கு போடாத வேடம் இல்லை. எந்த வேடம் என்றாலும் அந்தப் பாத்திரத்தை தனக்குள் கொண்டு வந்து தன் உடல் மொழியால் எம்மை ஆட்கொண்டவர்.

தமிழ் சினிமாவில் வடிவேலுவைத் தவிர்த்து பார்த்து விட முடியாத அளவில் இருக்கிறார் நம் வைகைப்புயல் வடிவேலு.

திகழன் — யாக்கரு

**கூட்டமைப்பின் தலைமை மாறுமா?**

தவறு செய்யலாம். அது தவறு எனத் தெரிந்து கொண்டால் திருத்திக் கொள்ள வேண்டும் இதுதான் மனிதப் பண்பு.

ஆனால் இங்கே ஒரு தவறு அல்ல. ஓராயிரம் தவறுகள் செய்கிறார்கள். அது தவறு என்று அவர்களுக்கு நன்றாகத் தெரிகிறது.

ஆனாலும் அற்பசொற்ப சலுகைகளுக்காக திருந்தாமல் மீண்டும் புதுப்புதுத் தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறார்கள்.

இதில் என்ன வேடிக்கை என்றால் தாம் செய்யும் இந்த சுயநலத் தவறுகளை சரியானதாய் மக்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மக்களும் நம்பிக் கொண்டே இருக்கிறார்கள். நாய் வால் நிமிராது அவ்வளவே.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

# அம்மாவின் முத்தம்

ஆர்.எஸ்.ஆனந்தன், தும்பளை



சின்னச் சின்ன
கண்கள் சிமிட்டி
சிரித்தாடும் சிங்கார ஓவியம்
வண்ணவிழி மலர்கள் மலரும்
வார்த்தை ஜாலங்கள்
மத்தாப்பு சிரிப்புதிர்த்தும்
மாய வர்ணங்கள்
மலரோ! முகமோ?
என ஜாடை காட்டும்
பௌர்ணமி நிலவின் விம்பம்
பவளவாய் உதிர்த்தும்
வார்த்தை மலர்கள் சிந்தும்
தேன் துளிகளை
அள்ளிப் பருகியும்
ஆவல் தணியாமல்
கட்டி முத்தமிட்டு
மூச்சு முட்டி
விழிநடுவே எமை இருத்தி
இமைகள் மூடாமல்
காத்துக்கிடந்த
அம்மாவைவிட
இந்த உலகம் பெரிதல்ல

## தவிப்பு

தம் தேவைகளை மட்டுப்படுத்தி
பிள்ளைகள் தேவைகளை பூரணப்படுத்தி
அவர்களை உன்னத நிலைக்கு உயரவைத்து
உள்ளம் மகிழும் பெற்றோர்களை உதிரும் வயதில்
முதியோர் இல்லத்தில் தவிக்கவிட்டு–நீ
எந்த நாட்டில் வாழ்ந்தாலென்ன
எப்பதவியில் இருந்தாலென்ன
உனக்கும் இந்நிலை வருமென்று
உள்ளத்தில் எழுதி வை

க.மலர்
சிறுவர் இல்லம்,
திருநெல்வேலி.

## தற்கொலை ஒரு தீர்வா?

தரணியில் மனிதன் தத்தளிக்கும் போது
தன்னையறியாமல் தற்கொலைக்குப் போகிறான்
தடுத்து நிறுத்த முடியாத நிலைமையில்
தன்னுயிரை மாய்ப்பவர் பலர்

பிரச்சினை வரலாம் அதனை
பின்னால் சற்று சிந்திக்கனும்
காதலில் தோல்வியா கவலையை விடு
கட்டாயம் உனக்கு வாழ்வுண்டு

படைத்த இறைவன் பழயளப்பான்
பரலோகம் போகத் துடிக்காதே
தற்கொலையும் ஓர் கொலைதான்
தக்க தருணத்தில் இறைவன் தண்டிப்பான்

இறைவன் தந்த உயிரை மனிதன்
எடுக்க நினைப்பது தவறல்லவா
வாழ்க்கையில் பிரச்சினைகள் வருவது சகஜம்
வாழ்ந்து பார்க்கனும் சவால்கள் மத்தியில்

ரி.நிஷா, ஜெர்மனி

## விழித்திரை

என் தலைசாய்க்க உன் மடி வேண்டும்
அதிலேயே என் கவலைகள் தீர வேண்டும்
கைரேகை போல என்றும் நீ வேண்டும்
கைகோர்த்து தெருவில் சுற்ற வேண்டும்

திரைவானில் சித்திரமாய்
உன் பெயரை விழித்திரையில்
மறைத்து வைத்தேன்

உன் பொய்யான காதலை
மெய்யாய் நினைத்து
கனவில் வாழ்ந்தேன்
கனவும் கற்பனையாய் போனது

என் காதல் மாளிகைக்குள்
புகுந்து விட்ட உன்னை
நித்தம் எண்ணிக் காத்திருப்பேன்
விழித்திரையில் காட்டும் விம்பமாய்

கிளியூர் அபி, அபிஷா

## கொடியேற்றம்



நகரின் மத்தியில்
பௌத்தக்கொடி கட்டப்பட்டதாகப்
பரபரப்புச் செய்தி படத்தோடு!
ஊடகங்களுக்கு வேறுவேலை இல்லையா?
இது பௌத்த நாடு
பௌத்தம் அரச மதம்!
கொடி கட்டலாம்
பிள்ளையார் ஆலய வளாகத்தில்
பிக்குவைத் தகனம் செய்யலாம்!
வெந்நீர்க் கிணற்றோரம்
விகாரை எழுப்பலாம்
இது பௌத்த நாடு!
பௌத்தம் அரச மதம்!
சந்தேகம் இருந்தால்
கர்தினால் மல்கம் ரஞ்ஜித்
சாட்சி சொல்லுவார்!

கொடி கட்டியவர்
மனநலம் குன்றியவர்
என்ற செய்தி தான் இடறுது, இடறுது!
அப்ப,
ஆலய வளாகத்தில் தகனம் செய்தோரும்
வெந்நீர்க் கிணற்றோரம்
விகாரை எழுப்பியோரும்
மனநலம் வாய்ந்தோர்
என்றல்லவா ஆகிறது!
இடறுது, இடறுது,
எங்கோ இடறுது!

சோ.பத்மநாதன்

## மௌனத்தின் தேடல்– 481



## பசியாத போதும்

பசித்தால் மட்டுமே
புசிக்கும் ஐ அறிவை
பசியாத போதும் நா
பதத்திற்கு ஊன் சுவைக்கும்
விசித்திரப் பிறப்பே
ஆறறிவு மானுடமாம்
இயற்கையுடன் இனும்
இயையாமை ஏனோ..

கந்தபாலன்
நல்லூர்

## மனிதா விழித்திடு

செல்போனில்
செல்பியெடுக்கும்
மனிதா! உன் பின்னாலே
சிங்க வடிவில்
காத்திருக்கின்றது
உனக்குப் பேராபத்து
இன்றே விழித்திடு
உன் உயிரை நீ காத்திடு

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## காட்டு இராசா

வாகனத்தில் பயணிக்கும்
வகையிருப்பால் தானே
ஆக மட்டும் செல்பிக்கு
ஆசைப்படும் மானுடமே
போகவிட்டுப் புதினம்
பார்க்கும் காட்டு இராசா
தாக்காமல் உன்னைப்
பாதுகாக்கும் உயர் உயிரே

தணிகைவாசன்
தாவடி

## சுயம்பிச் சாகசம்

நவநாகரிகத்தில் மாற்றமடைந்து
சுயம்பியில் மட்டும்
மாற்றான் உதவியின்றி
திளைத்து நிற்கும் மானிடா!
வனவாசிகள் தன்குணத்தையே
நாகரிகத்தையே என்றும்
மாற்றவில்லை இங்கே– நீ செய்யும்
சுயம்பிச் சாகசம் உன் கண்ணீர் அஞ்சலி
சுயம்பியாகாமல் பார்த்துக்கொள்
அறிவுள்ள மானிடா!

ரசிகன்

## வித்தகரா நீ எம்மிலும்

வாழிடத்தை அழித்தீர்
வளமான காடுகளை
ஊழித்தீ ஏற்றி வைத்தீர்
அழிப்பீர் விலங்குகளை
ஆசைப்பட்ட போதெல்லாம்
விழிப்புணர்வு இன்றியே
விரும்பும் எம் கொலையால்
வித்தகரா நீ எம்மிலுமே

சிவகாமி
நல்லூர்

## புகழ்ச்சி

எத்தனை யுகங்கள்
மாறினாலும் மாறாதது
மானிட புத்தியினம்
எல்லோருக்கும்
இயல்பாகவே உள்ளே
ஒழிந்து கொண்டு
இருக்கும் ஆசை
தன்னை யாராவது புகழ்ந்து
பேசவேண்டும் என்பதுதான்
சிங்கத்தின் அருகினில் நின்று
செல்பி எடுப்பதால் நீயும்
சிங்கமாக முடியுமென்றால் இல்லை
உன்னை அசிங்கமாக்கப் பல
மரணவலைகள்
காத்திருக்கின்றன
மாறிவிடு மானிடா
மறந்துவிடாதே உன்
அருகே இருப்பது
மரணவாசல் என்று

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை.சி.ம.வி.

## மௌனத்தின் தேடல் –482



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அவதானமிழந்தால் ஆபத்து

பயணச் சீற்றில்
(இருக்கையில்)
இருந்து வெளியே தலை
காட்டும் நண்பனே!
செல்பி எடுக்கும் வேட்கையில்
வேங்கைக்கு இரையாகப்
போகிறாயா?
உன்னையும்
வேங்கையையும்
இணைத்து காட்சிப்படுத்தவா
முயற்சி செய்கிறாய்?
அவதானமிழந்தால்
அழிவு ஆபத்து

அபிகுலமாலிகா
சங்கானை

## செல்ஃபி

செல்ஃபீக்கு அடிமையான
சுந்தர பாண்டியரே
உம் பின்னே உறுமும்
'சிங்கம் கண்டாயோ?
கண்டும் ஆர்வக் கோளாறில்
செல்பி எடுத்துவிட
கர்ஜிக்கும் சிங்கமோ
உம்மை செம்பி எடுத்துவிடும்
உள்ளே போம் ஒழுங்காய் கதவைப் பூட்டும்
நல்ல பிள்ளையாய் இரும்
இது உமக்கு மிக்க நன்றே


கஜன், சங்கானை

## அசண்டையீனம்

சிங்கம் உன் பின்னால் வருவது
கூடத் தெரியாமல் செல்போன் மோகத்தில்
சிரிக்கிறாயே மனிதா– உன்
அசண்டையீனத்திற்கு
ஓர் அளவே இல்லையா?

சுஜா, யாழ்ப்பாணம்

சிறுகதை



# பெற்ற மனம்

பசி வயிற்றைக் கிள்ளியது. நேரம் நள்ளிரவு பன்னிரெண்டு மணியைத் தாண்டிவிட்டது. எனினும் சூரிச் மாநகரம் பகலைப் போலவே பரபரப்பாக நகர்ந்து கொண்டிருந்தது. சூரிச் மட்டுமா சரவணனும் பரபரப்பாகவே காணப்பட்டான். காலை ஐந்து மணிக்கு எழுந்து உதிரத்தை உறையவைக்கும் பனிவாடையின் சில்லென்ற குளிரையும் சட்டை பண்ணாது குளிர்சாதனப் பெட்டியில் அடைபட்டுக் கிடந்த ஏதோ பழைய உணவுகளைச் சூடாக்கி இயந்திரத்தனமாக அள்ளி வாயில் போட்டுக் கொண்டு வேலைக்குப் போனவன் இப்போதுதானே வீடு திரும்பியிருக்கின்றான். மிகவும் அசதியாக விருந்தது. ஆனாலும் பசி என்ற ஒன்றுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டுமல்லவா!

எப்படியோ நூடில்ஸ் தயாரித்தாயிற்று. இனி உருளைக்கிழங்கில் ஒரு பிரட்டல். நல்லவேளை மாசிக்கருவாடும் கொஞ்சமிருந்தது வாய்த்துவிட்டது. அதுவும் நண்பன் முரளிக்கு ஊரிலிருந்து வந்த உறவினர் யாரோ கொடுக்க அதில் ஒரு சிறிய பங்கு இவனுக்கும் கிடைத்தது இப்போது வாசியாகிவிட்டது.

கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன் ஊரில் பெற்றோருடன் வாழ்ந்த நாட்களை உள்ளம் இரைமீட்டது. வேளாவேளைக்குச் சாப்பாடு. தவறிவிட்டால் கூப்பாடு. காரசாரமாக மச்சம் மாமிசங்களென்று வாய்க்கு ருசியாக வகை வகையாக அம்மா சமைத்துப்போட வயிறு முட்டச்சாப்பிட்டு விட்டு பொறுப்பில்லாது ஊர் சுற்றியதை மறக்க முடியுமா! பிள்ளையார் கோயில் தேர் முட்டியில் சுற்றிவர அமர்ந்திருந்து தேவன், நகுலன், பாபு ஆகிய நண்பர்களுடன் சீட்டாடுவது, அம்மன் கோயில் குளத்தில் குதித்து நீந்தி விளையாடுவது, இப்படி எத்தனை விதமான ஆட்டங்களை ஆடிவிட்டு இப்போது அருமைப்பெற்றோர், ஆசைத்தங்கை அனுஷாக்குட்டி மற்றும் அத்தனை உறவுகளையும் பிரிந்து ஆயிரக் கணக்கான மைல் தூரத்திற்கு அப்பால் பறந்து வந்து இந்த் சுவிட்சர்லாந்து என்னும் பணக்காரத் தேசத்தில் அடைக்கலம் பெறுவதற்காக அப்பப்பா எத்தனை சோதனைகள்! எத்தனை வேதனைகள்! இவைகளெல்லாவற்றையும் போதனைகளாக்கி சரவணனும் ஒரு தகுதியான ஒரு மனிதனாகி வாழ்ந்து காட்ட வேண்டும். அவனைப் பொறுத்தவரையில் இது காலத்தின் கட்டாயம்.

நூடில்ஸ் சூடாகவிருந்தது. உருளைக் கிழங்குப் பிரட்டலும் மாசிச்சம்பலும் நாவுக்கு ருசி காட்டின. சில்லிட்டுக் கொண்டிருந்த குளிருக்கு சூடான அந்த உணவு இதமாகவிருந்தது. சரி எப்படியோ வயிற்றுப்பாடு பார்த்தாயிற்று. மெல்லப் படுத்து உறங்கினால் நேரம் போவதே தெரியாது. ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து செக்கிழுக்க போகவேண்டுமே! விழிகள் உறக்கத்திற்காகக் கெஞ்சிக் கொண்டிருந்தன. இனியும் பொறுக்க முடியாது. பொத்தெனக் கட்டிலில் வீழ்ந்தான். ஐந்து நிமிடங்கள் ஓடியதோ என்னவோ அதற்குள் அலைபேசி தொணதொணத்தது.

"இதாரப்பா இந்த நேரம்"

அவனையுமறியாது உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

"ஹலோ தம்பி! சரவணா! என்னடா அண்டைக்கு மொருக்கால் எடுத்தனான். நீ தூக்கயில்லை. என்ன அக்காவை மறந்து போனியே! உங்கை உவர் சுப்புறுவற்றை மோன் சுகந்தன் உங்கை சுவிஸிலையிருந்து அவையின்ர வீட்டுக்கு விதம்விதமாய் உடுப்புகள் அனுப்புறான். நீ என்னடா எண்டால் இரண்டரை வரியம் ஆகியும் எங்களுக்கு என்ன அனுப்பினனி! இனியெண்டாலும் ஏதேன் நல்ல உடுப்புகள் சாமானுகள் வாங்கி அனுப்பி விடு. இஞ்சை! உன்ரை ஆசை மருமோள் சுகிக்குட்டியும் கதைக்கப் போறாளாம். குடுக்கிறன் கதை"

" ஹலோ! குஞ்சு மாமா! என்ன நடக்குது மாமா! எனக்கொரு லப்டொப்பும் ஒரு நல்ல போனும் வாங்கி அனுப்புங்கோ! அனுப்பச் சுணங்குமெண்டால் உங்கையிருந்து வாற ஆக்களிட்டை வாங்கிக் குடுத்து விடுங்கோ! இஞ்சை என்ரை வகுப்புப் பிள்ளையள் சுபத்திரா, ரேஷ்மா எல்லாரும் வைச்சிருக்கிறாளவை. அவையின்ரை சொந்தக்காரர் ஆரோ உங்கை சுவிஸிலையிருந்து தானாம் அனுப்பினவை. எனக்கும் கெதியாய் அனுப்பிவிடுங்கோ என்ரை மாமாக்குட்டியெல்லே! இஞ்சை மாமா போனை வைச்சிடாதேங்கோ! அம்மப்பாவும் கதைக்கப் போறாராம். கதையுங்கோவன் உங்க அப்பா வோடை. ஆசைப்படுராரெல்லே!

" ஓம் தம்பி சரவணன்! ஓ! இஞ்சை புதினங்கள் ஒண்டுமில்லை. சாமான் சண்டியளெல்லாம் சரியான விலை. அயினேக்கை எய்ப்பன் சாராயம் குடிக்கிறனான். இப்ப அதுகும் எக்கச்சக்கமாய் விலை ஏறீட்டுது. உங்கை என்னவோ "ஜொனி வோக்கரோ" என்னம் பொண்டோ விஸ்கி இருக்குதாம். சோக்காயிருக்குமாம். கார்க்காரக் கந்தசாமி தான் சொன்னவன். பஞ்சிப்படாமல் அதிலை வாங்கி ஆரிட்டையேன் குடுத்துவிடு. சாகிறதுக்கு முந்தி அந்தச் சாமானையும் ஒருக்கால் குடிச்சுப் பாப்பம். "அயத்துக்கியத்துப்" போகிடாதை. கெதியாய் ஆரிட்டையேன் குடுத்துவிடு! என்ன வைக்கிறன். கொக்காளுக்குக் காசும் போகுது. வைக்கட்டே!"

வந்த உறக்கமும் சொல்லாமற் கொள்ளாமல் எங்கேயோ ஓடி ஒளிந்துவிட்டது சரவணனுக்கு. தாயகத்திலிருந்து சுவிஸ் என்னும் இந்த அழகாபுரிக்கு வந்து இரண்டரை வருடங்கள் கண்களை மூடிக்கொண்டு ஓடிவிட்டன. இன்னமும் வதிவிட உரிமை கிடைக்கவில்லை. இன்றைக்கோ நாளைக்கோ! பிடிபட்டால் மறுவார்த்தையின்றி ஊருக்குத் திருப்பியனுப்பி விடுவார்கள். தினமும் பயந்து பதுங்கி ஒவ்வொரு நிமிடத்தையும் ஒளிந்திருந்து வாழும் சரவணனின் வாழ்க்கை எத்தனை பாரதூரமானது.! எத்தனை பயங்கரமானது.

இங்கே வருவதற்காகப் பட்ட கடன் கொஞ்ச நஞ்சமா! அத்தனைக்கும் அம்மா அருள் நாயகியே தனித்து நின்று பாரிய பொறுப்பினைச் சுமந்து கொண்டிருக்கின்றாள். அந்தக் கடனை மீள அளிப்பதற்கே இதுவரை முடியவில்லை. வதிவிட உரிமை இல்லாதவர்க்கு இங்கே வேலையும் கொடுக்க யாரும் முன்வரமாட்டார்கள். இந்த இக்கட்டான நிலையில் ஒளித்துப் பதுங்கி எப்போதாவது கிடைக்கும் சிறு சிறு வேலைகளைச் செய்தே வயிற்றையும் கழுவ வேண்டும். வாடகை, வரி, இந்தியாதிச் செலவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டும். தாய் அருள் நாயகிக்கும் மாதாந்தம் ஏதோ ஒரு சிறு தொகையாவது அனுப்ப வேண்டும். அருளம்பலம் மாஸ்டரிடம் வாங்கிய பதினைந்து இலட்சம் கடனையும் அம்மா அருள்நாயகிதானே அடைக்கவேண்டும். அப்பா சிவானந்தம் எதுவிதப் பொறுப்புகளுமற்ற செல்லப்பிள்ளை. அவருக்கு அவ்வப்போது குடித்துக் கும்மாளம் போட மது பானம் கிடைத்துவிட்டால் அதுவே சொர்க்கம் ஆகிவிடும்.

சரவணன் சற்று உறங்கித்தான் விட்டான். அலைபேசி மீண்டும் அவசரமாக அழைத்தது. "சே! இதென்ன கரைச்சலப்பா! ஆரப்பா இப்ப எடுத்து என்ரை உயிரை வாங்குதுகள்! எடே! அம்மா! கடவுளே! கடன்காரர் கரைச்சல் குடுக்கினம் போலை! இப்ப அவவும் எடுத்து ஒப்பாரி வைக்கப்போறா! இந்த மாதம் வேலையளும் அம்பிடையில்லை. உழைப்பும் காணாது. என்ன சொல்லப் போறானோ, என்ன செய்யப் போறானோ"

அறுத்துப்போட்ட ஆமை இறைச்சியாகத் துடித்துக் கொண்டிருந்தது சரவணனின் உள்ளம்.

"ஹலோ அம்மா! சுகமாயிருக்கிறீங்களே!" ஏதோ சம்பிரதாயத்துக்காக கேட்டானேயொழிய அம்மாவை இப்போது எப்படிச் சமாதானப் படுத்துவதென்பது மிகப்பெரிய கேள்வியாக நின்று தலைவிரித்தாடியது.

"தம்பி! சரவணன்! என்ரை ராசா! என்ன மோனை செய்யுறாய்! 'சாப்பிட்டாச்சே! ஒண்டுக்கும் யோசிக்காதையெடா என்ரை செல்லம்! கடன் தனியைப் பற்றி மூளையைப் போட்டுக் கலக்காதை. சந்தோசமாயிரு. காலநேரம் சரிவர எல்லாம் சரிவரும். கடவுள் கைவிடமாட்டார். உங்கை மச்சம் கிச்சம் ஏதேன் சமைச்சுச் சாப்பிடலாமெண்டால் வடிவாய்ச் சாப்பிட்டு உடம்பைக் கவனியடா! கவலைப்படாதை ஒண்டுக்கும்! சாப்பிடு நல்லாய்ச் சரியோ! வைக்கிறன்.

பெற்ற மனம் பேசி முடித்தது. மற்ற மனம் பேதலித்தது.

மிருசுவில் தமிழ்தாசன்,
மீசாலை கிழக்கு, மீசாலை.

# ரஷ்யாவின் கடைக்கண் பார்வை



விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்து ஐந்து மாதங்களுக்குப் பின்னர், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

2009 ஒக்டோபர் 26 ஆம் திகதி கொழும்பு வந்திருந்த போது, அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம ஆகியோரை சந்தித்து, இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவது குறித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார் சேர்ஜி லாவ்ரோவ்.

அப்போது, ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ இப்போது பிரதமராக இருக்கின்ற நிலையிலும் ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சராக இன்னமும் இருக்கின்ற சேர்ஜி லாவ்ரோவ், எதிர்வரும் 14 ஆம் திகதி இலங்கைக்கு மீண்டும் வரப்போகிறார். ஒரே ஒருநாள் பயணமாக இருந்தாலும், அவரது இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகிறது.

2009ஆம் ஆண்டு போரின் முடிவுக்குப் பின்னராக காணப்பட்ட சூழலுக்கும், 2019 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான சூழலுக்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசங்கள் இல்லாத ஒரு சூழல் காணப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசாங்கம் வெற்றி பெறுவதற்கு ஆயுதத் தளபாடங்களை வழங்கி ஒத்துழைத்த பல நாடுகளில் ரஷ்யாவும் ஒன்று. ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்ட மிக் போர் விமானங்கள், எம்.ஐ-17, எம்.ஐ.24 ஹெலிகொப்டர்கள், பி.ரி.ஆர். துருப்புக்காவிகள், கவச வாகனங்கள், தாங்கிகள் என்பன போரில் முக்கியமான பங்கை ஆற்றியிருந்தன.

எனவே, போர் முடிவுக்கு வந்த பின்னரும், ரஷ்யாவுக்கும் ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் இடையில் மிக நெருங்கிய உறவுகள் காணப்பட்டிருந்தன. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது மாத்திரமன்றி, அவர் பதவியிழந்த பின்னரும் ரஷ்யாவுக்குப் பல பயணங்களை மேற்கொண்டிருந்தார். ஆனால், 2015 இல் மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், சீனாவைப் போலவே, ரஷ்யாவிடம் இருந்து





விலகியே நின்றது. அதற்குக் காரணம் அமெரிக்கா தான்.

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கம் பரவுவதை மாத்திரம் அமெரிக்கா எதிர்க்கவில்லை. ரஷ்யாவின் ஆதிக்கம் அதிகரிப்பது குறித்த அச்சமும் அமெரிக்காவுக்கு இருக்கிறது. அதனால் தான் ரஷ்யாவின் பாரம்பரிய நண்பனாக இருந்து வந்த இந்தியாவுடன், நெருக்கத்தை ஏற்படுத்தியது அமெரிக்கா.


ரஷ்யாவிடமிருந்து எஸ்-400 ஏவுகணைகளை இந்தியா வாங்கிய போது அதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் இந்தியா அதனையும் மீறி வாங்கிய போது, அமெரிக்கா எதுவும் செய்யவில்லை. ஏனென்றால், ரஷ்யாவுடனான போட்டியை விட, இந்தியப் பெருங்கடலில் அமெரிக்காவுக்கு நண்பர்கள் தேவைப்படுகிறார்கள். சீனா, ரஷ்யா போன்ற சக்திகளிடம் அவர்கள் சிக்கிவிடக் கூடாது என்று எதிர்பார்க்கிறது அமெரிக்கா.

இலங்கையுடன், ரஷ்யா பாதுகாப்பு ரீதியான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. குறிப்பாக ரஷ்யாவிடமிருந்து ஆயுதத் தளபாடங்களை வாங்குவதை அமெரிக்கா எதிர்த்தது.

ரஷ்யாவின் Rosborono export நிறுவனத்திடம் இருந்து போர்த்தளபாடங்கள் வாங்கக்கூடாது என்று அமெரிக்கா எச்சரிக்கை செய்தது. இதனை கடந்த ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகவே கூறியிருந்தார். அமெரிக்காவினால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ரஷ்ய நிறுவனத்திடம் ஆயுதங்களை வாங்கக் கூடாது என்று அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுத்ததால் அப்போதைய அரசாங்கம் விலகியிருக்க வேண்டியிருந்தது.

இதனால் ரஷ்யாவிடம் இருந்து ஜிபார்ட் -5 ரக போர்க் கப்பல் மற்றும் எம்.ஐ.17 ஹெலிகொப்டர்கள், பி.ரி.ஆர் துருப்புக்காவி கவசவாகனங்கள், ஏ-கே.47 ரக துப்பாக்கிகள் போன்றவற்றின் கொள்வனவு நடவடிக்கைகளை மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் கைவிட நேரிட்டது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ரஷ்யா வழங்கி



யிருந்த கடன் திட்டம் காலாவதியாகியிருந்த நிலையிலும், மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துக்கு அதனை நீடித்து, 300 மில்லியன் டொலர் கடன் திட்டத்தில், ஜிபார்ட் -5 போர்க்கப்பலை வழங்க ரஷ்யா இணங்கியிருந்தது.

ஆனால், அமெரிக்காவின் எதிர்ப்பினால், ரஷ்ய நிறுவனத்துடன், ஆயுதத் தளபாடக் கொள்வனவு உடன்பாடுகளில் கையெழுத்திட முடியாத நிலை முன்னைய அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்தது. ஏனென்றால், ரஷ்யாவை விட அமெரிக்காவின் தேவை கொழும்புக்கு அதிகமாக இருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவின் பக்கம் சாயும் எண்ணத்தில் இருந்தாலும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை மீறி அவரால் வரையறுக்கப்பட்ட அளவிலேயே செயற்பட முடிந்தது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அமெரிக்க சார்புடையதாக இருந்தமை மாத்திரம் அதற்குக் காரணமல்ல. சர்வதேச அரங்கில் இலங்கை அரசாங்கம் அழுத்தங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்கும், அமெரிக்காவின் தயவு தேவைப்பட்டது. குறிப்பாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்காவை உள்ளடக்கிய மேற்குலகத்தின் அழுத்தங்களில் இருந்து தப்பிக்க வேண்டியிருந்தது. அதனால், அமெரிக்காவை பகைத்துக் கொண்டு ரஷ்யா பக்கம் சாயமுடியாத நிலையில் மைத்திரிபால சிறிசேன இருந்தார். எனினும் அவர் தனது பதவிக் காலத்தின் இறுதிக்கட்டத்தில், குறிப்பாக, 2018 நடுப் பகுதிக்குப் பின்னர், ரஷ்யாவுடனான நெருக்கத்தை அதிகப் படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தினார்.

ரஷ்யாவுக்கான தூதுவராக கலாநிதி தயான் ஜயதிலக நியமிக்கப்பட்டது அதில் முக்கியமான ஒரு அம்சமாகும். அதற்குப் பின்னர், ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு உறவைப் பலப்படுத்திக் கொள்வதற்கான அடுக்கடுக்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக இருந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஆகியோர் தனித்தனியாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ரஷ்யாவுக்குப் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பயணங்களின் போது மூன்று விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. முதலாவது ரஷ்ய பாதுகாப்பு தளபாடங்களை இலங்கை படைகளுக்கு கொள்வனவு செய்வது. பொருத்தமான ஆயுத தளபாடங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது. இரண்டாவது, இலங்கைப் படையினருக்கு ரஷ்யாவில் பயிற்சிகளை அளிப்பது. குறிப்பாக ஆட்டிலறி சூட்டுப் பயிற்சிகள் மற்றும் தீவிரவாத முறியடிப்புப் பயிற்சிகளை அளிப்பது, ரஷ்யாவில் இலங்கைப் படையினருக்கான பயிற்சி இடங்களை அதிக



ரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மூன்றாவதாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது. இதற்கமைய, ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றும் கூட கைச்சாத்திடப்பட்டது. ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு 2019ஆம் ஆண்டில் வேகமான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை அடுத்து, இலங்கைக்கு (அம்பாந்தோட்டை துறைமுகம்) வந்த முதலாவது வெளிநாட்டுப் போர்க்கப்பல் கூட, ரஷ்யாவினுடையதாகத் தான் இருந்தது.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் மொஸ்கோவில் தூதுவராக உள்ள கலாநிதி தயான் ஜயதிலகவின் பங்கு முக்கியமானது. மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக பாடுபட்டவர் தயான் ஜயதிலக.. பின்னர் அவர் மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் போய், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகப் பாடுபட்டார்.

அவ்வாறான ஒருவருக்குத் தான் மைத்திரிபால சிறிசேன கடுமையான போராட்டத்துக்கு மத்தியில், ரஷ்யாவுக்கான தூதுவர் நியமனத்தை பெற்றுக் கொடுத்திருந்தார். இப்போது ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்துள்ள நிலையில், ரஷ்யாவும் இலங்கையின் மீதான ஈர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. ரஷ்ய வெளிவிவகார அமைச்சர், சேர்ஜி லாவ்ரோவ், இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள பயணமும் அதன் ஒரு வெளிப்பாடு தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரும் 14ஆம் திகதி சீனாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ் அன்றைய தினமே கொழும்பு வரவுள்ளார்.

இந்த இரண்டு பயணங்களுமே அமெரிக்காவுக்கு சவாலானவை. இலங்கையில் மாத்திரமன்றி இலங்கைக்கு வெளியிலும் இது மேற்குலகத்துக்குச் சவாலானது தான். இலங்கையில் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் ஆதிக்கம் செலுத்துவதை மாத்திரம் மேற்குலகம் எதிர்க்கவில்லை. இலங்கைக்கு வெளியில், குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும், இந்த இரண்டு நாடுகளும் இணைந்து இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தவை.

வரும் மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் குறித்த விவாதம் நடக்கப்போகின்ற நிலையில், ரஷ்யா, சீனாவுடன் இணைந்து கொழும்பு வகுக்கப் போகின்ற வியூகம் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்துக்கு மிகமிக சவாலாகவே இருக்கும். அந்தச் சவாலை அமெரிக்காவும் அதன் நேச சக்திகளும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன ?

- ஹரிகரன் -

# இந்தியாவில் உள்ள ஈழத்து அகதிகள் தாயகம் திரும்புவதை ஆட்சியாளர்கள் விரும்பவில்லை

## ஜூனியர் விகடனுக்கு சி.வி. விக்னேஸ்வரன் செவ்வி

**"இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் மீண்டும் தாய்நாட்டுக் குத் திரும்பவேண்டும்' என்று சொல்லி யிருக்கிறீர்கள்... அப்படி யென்றால் அங்கே நிலைமை சீராகிவிட்டதா?"**

"எந்த விதத்திலும் சூழல் மாற வில்லை. ஆனால், இந்த விடயத்தில் கொள்கைரீதியாக சில முடிவுகளை நாங்கள் எடுக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக, இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் அங்கே திரும்பிவர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை வெகு வாகக் குறைந்துவருகிறது. பத்து இலட்சம் பேர் எங்கள் மாகாணங்க ளில் இருந்து வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து விட்டனர். இந்தியா வில் வசிக்கும் மக்களும் அங்கு வர வில்லை என்றால், அந்த எண்ணி க்கை மேலும் குறைந்துபோகும். ஆனால், அவர்கள் அங்கே வருவ தில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதும் எனக்குத் தெரியும். அதன் காரணமாகத்தான் அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை கொடுக்க வேண் டும் என இந்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கின்றோம். எங்களின் கோரிக் கையை இந்திய அரசாங்கம் கனி வோடு பரிசீலிக்க வேண்டுகிறோம்."

**"இரட்டைக் குடியுரிமை வழங் குவதற்கு இந்தியச் சட்டத்தில் இடமில்லை என்கிறார்களே?"**

"சட்டத்தில் இடம் இருக்கிறதா இல் லையா என்பது எனக்குத் தெரியாது. சட்டத்தில் இடம் இருந்தால் நல்லது. அப்படி இல்லாவிட்டால், இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கு ஏற்றவாறு சட்டத் திருத்தம் கொண்டு வருவ தற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்க ளது கோரிக்கை. அதுதான் எல்லோரு க்கும் நன்மை தரக்கூடியது. அப்படிச் செய்தால், ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை கொடுக்க வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இருக்காது. எங்கள் தாயகத்திலும் தமி ழர்களின் எண்ணிக்கை அதிகமாகும்."



**"முகாம்களில் வசிக்கும் இலங் கைத் தமிழர்க ளில் 90 சதவிகி தத்துக்கும் அதி கமானோர் இந் தியக் குடியு ரிமை வேண் டும் என்ற கோரி க்கை யைத்தானே முன் வைக்கின்றனர்?"**

"தாய்நாட்டுக்குத் திரு ம்புவதற்கு எங் கள் மக்கள் நிச்சயம் விரும்புவார்கள். ஆனால், இங்கு கிடைக்கக் கூடிய வாழ் வாதாரம், குழந்தைகளின் கல்விக்கான உதவிகள் அங்கு வந்தால் கிடைக்குமா என்கிற பயம்தான் அவர்கள் இலங்கை வருவதைத் தடுக்கிறது. அதை உறுதி செய்தால் நிச்சயமாக அவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்புவார்கள். ஆனால், எங்கள் ஆட்சியாளர்கள் அதைச் செய்ய மாட்டார்கள். தமிழர்கள் திரும்பி வரா விட்டால் நல்லது என்று இருப்பார் கள். எங்கள் வடக்கு, கிழக்கு மாகாணப் பிரச்சினைகளை இந்தியா சரிசெய்ய முன்வந்தால், இலங்கைக்குத் திரும்பும் தமிழக மக்க ளின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதாக இந்தியா உத்தரவாதம் கொடுத்தால், நிச்சயமாக எங்கள் மக்கள் தாய்நாட் டுக்குத் திரும்புவார்கள் என்பது எங்கள் எதிர்பார்ப்பு."

> **"தமிழர் திருநாளில் பங்கேற்க சென்னை சென்றிருந்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜூனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகிறது"**

**'நாங்கள் இலங்கைக்கு திரும்பிச் சென்றால் அங்குள்ள தமிழர்களின் ஒத்துழைப்புகூட எங்களுக்குக் கிடைக் காது' என்பது இங்குள்ள தமிழர்கள் பலரது கருத்தாக இருக்கிறதே?"**

"ஆம்! அந்த மாதிரியான பிரச்சி னைகள் இருப்பது உண்மைதான். அத னால்தான் அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்துதர முன்வர வேண் டும் என்ற கோரிக்கையை இந்திய அரசிடம் முன்வைக்கிறோம்."

**"இலங்கையில் நிலவிவந்த தமிழர்-சிங்களவர் எனும் இனப் பிரச்சினை, இப்போது இந்து-பௌத்தம் என மதப் பிரச்சினையாகத் திசை திருப் பப்படுகிறதே?"**

"அதற்குக் காரணம் இருக்கிறது. அண்மைக்காலங்களில் பௌத்த சின் னங்களை வடக்கு, கிழக்கில் பலவந்த மாகத் திணிக்கின்றனர். அதற்கான எதிர்ப் பலைதான் அப்படித் தோற்றமளிக்கிறது. ஆனால், அங்கே முதன்மையான பிரச்சினை யாக இருப்பது, தமிழர்களுக்கும் சிங்கள வர்களுக்குமான இனப் பிரச்சினை தான்."

**"குடியுரிமை திருத்தச் சட்டத்திலும் சரி, இதற்கு முன்பும் சரி, இலங் கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இங்கிருக்கும் இந்து அமைப்பு களோ, பா.ஜ.க அரசாங்கமோ எது வும் செய்ததில்லை என்ற குற்றச்சாட் டும் இருக்கிறதே?"**

"பா.ஜ.க. தலைவர்கள் சிலருடன் எனக்கும் தொடர்பு இருக்கிறது. அவர்கள் என்னிடம், 'பௌத்தர்களும் இந்துக்கள் தானே, புத்தர்கூட இந்துதானே, பிறகு ஏன் அங்கே பிரச்சினை வருகிறது. அவர் களுடன் இணைந்து இணக்கமாக வாழ லாமே' என்று சொல்லியிருக்கின்றனர். அவர்களிடம், 'பௌத்தர்களுக்கும் எங்க ளுக்கும் பிரச்சினை இல்லை. சிங்கள வர்களுக்கும் எங்களுக்கும் தான் பிரச் சினை. அங்கு இருப்பது மதப் பாகுபாடு இல்லை இனப்பாகுபாடு. ஆகவே, எங் களை மத ரீதியாக அவர்களுடன் சேரச் சொல்வதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது' என்பதை நான் மிகத் தெளி வாகச் சொல்லியிருக்கிறேன்"

**ஜூனியர் விகடன்**

# ஈழத்தமிழ் பாடகி மாயாவுக்கு அரச குடும்பத்தின் உயர் விருது





(லண்டன்)

சர்வதேச ரீதியில் அதிகம் கவனிக் கப்படும் லண்டன்வாழ் ஈழத்தமிழ் பாடகி யான எம்.ஐ.ஏ. எனும் மாதங்கி மாயா அருள்பிரகாசத்துக்கு (MIA) பிரித்தானிய சாம்ராச்சியத்தின் அங்கத்தவருக்கான எம்.பி.ஈ (Member of the Order of the British Empire -MBE) விருது வழங்கப்பட்டது. சர்வதேசத்தில் இசைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காகவே அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. லண்டனிலுள்ள பக்கிங் ஹாம் அரண்மனையில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வைபவத்தில் பாடகி எம்.ஐ.ஏவுக்கு பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் வில்லியம் இந்த விருதை வழங்கிக் கௌரவித்தார்.

மாதங்கியின் தந்தை அருள்பிரகாசம் (அருளர்) ஈழப்போராட்டத்தின் முன்னோ டிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஈரோஸ் இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான அருளர், லங்கா ராணி எனும் நூலையும் எழுதினார்.

கடந்த மாதம் அருளர் காலமாகியி ருந்தார். இலங்கையிலிருந்து பிரிட்ட னுக்குச் சென்ற அருள்பிரகாசம், கலா தம்பதியின் மகளாக 1975 ஜூலை 18 ஆம் திகதி லண்டனில் பிறந்தவர் மாதங்கி. அவர் 6 மாத குழந்தையாக இருந்த போது அவரின் பெற்றோர் இலங்கைக்குத் திரும் பினர்.

மாதங்கி யாழ்ப்பாணத்தில் தனது ஆர ம்பக் கல்வியை கற்றார். யுத்தம் தீவிர மடைந்த நிலையில் 1986 ஆம் ஆண்டு மாதங்கிக்கு 11 வயதாக இருந்த போது அவரின் குடும்பம் மீண்டும் லண்ட னுக் குத் திரும்பியது.

2000 ஆம் ஆண்டு இசைத்துறையில் கவனம் செலுத்த ஆரம்பித்தார் மாதங்கி. தற்போது மேற்குலக இசைத்துறையில் மிகப் பிரபலமான பாடகிகளில் ஒருவராக மாத ங்கி மாயா அருள்பிரகாசம் (வயது44) விளங்குகிறார்.

2004 ஆம் ஆண்டு சண்ஷவர், காலாங் ஆகிய பாடல்கள் மூலம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த மாதங்கி, 2005 ஆம் ஆண்டு அருளர் எனும் பெயரில் தனது முதல் பாடல் அல்பத்தை வெளியிட்டார். 2007 ஆம் ஆண்டு தாயார் கலாவின் பெய ரில் கலா எனும் 2 ஆவது பாடல் அல்பத்தை வெளியிட்டார்.

கலா அல்பத்தில் இடம்பெற்ற பேப்பர்பி ளேன்ஸ் எனும் பாடல் எம்.ஐ.ஏவுக்கு பிரிட்டன், கனடா, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பெரும் புகழை ஈட்டிக் கொடுத் தது.

மேற்கத்தேய இசைத் துறையில் முன் னிலை கலைஞர்களில் ஒருவரானார் எம்.ஐ.ஏ. அமெரிக்க தேசிய கால்பந்தாட்ட லீக் இறுதிப் போட்டியின் இடைவேளையில் இசை நிகழ்ச்சி நடத்துவது பல கலை ஞர்களின் கனவாகும்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற சுப்பர் பொல் இசை நிகழ்ச்சியில் பாடகிகள் மடோனா, நிக்கி மினாஜ் ஆகி யோருடன் எம்.ஐ.ஏ. எனும் மாதங்கியும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரம் தேடி

# அரச குடும்பத்தைத் துறந்த ஹாரி அதிர்ச்சியில் இங்கிலாந்து ராணி

இங்கிலாந்து அரசியலை பிரெக்ஸிட் தாக்கியதைப்போல், இங்கிலாந்தின் அரச குடும்பத்தைச் சூறாவளியாகத் தாக்கியுள்ளது ஹாரி எக்ஸிட்!

டயானாவின் இரண்டாவது மகனும் இளவரசருமான ஹாரி, அவருடைய மனைவி மேகன் மெர்க்கல் இருவரும் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுவதாக இன்ஸ்டாகிராம் மூலம் அறிவித்துள்ளது, இங்கிலாந்தில் புயலைக் கிளப்பியுள்ளது.

ஆறு மாதம் கனடாவில் தங்கிவிட்டு, கடந்த 7ஆம் திகதி இங்கிலாந்து திரும்பிய ஹாரி-மேகன் தம்பதி, அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தனர். தங்களின் நிதி சுதந்திரத்துக்காக வேலை பார்க்கப்போவதாகவும், தங்கள் நேரத்தை இங்கிலாந்திலும் வட அமெரிக்காவிலும் செலவிட விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன், 'அரசுக்கும் ராணிக்கும் தொடர்ந்து சேவை செய்ய கடமைப்பட்டுள்ளோம்' எனவும் கூறியுள்ளனர்.





அப்போதே குடும்பத்தில் பிரச்சினை வெடித்தது. அவரின் காதல் திருமணத்தை அரச குடும்பம் முழுமனதோடு அங்கீகரிக்கவில்லை. மெர்க்கல் வெள்ளையர் அல்ல... விவாகரத்தானவர் என்பதால், அரச குடும்பத்தினர் பலமுறை அவரை தரக்குறைவாக நடத்தியதும், ஊடகங்களில் அவரைப் பற்றி தவறாகப் பேசிவந்ததும் ஹாரியை அதிகளவில் காயப்படுத்தின. அதனால், ஹாரி தம்பதியர் அரச குடும்பத்திலிருந்து சற்று விலகியே இருந்து வந்தனர்.

ராஜ குடும்பத்தின் பகட்டு, படாடோபம் திறப்பு விழாக்களில் கலந்துகொள்ளும் ஆடம்பரம் அனைத்தையும் தொடக்கத்திலிருந்தே ஹாரி வெறுத்து வந்தார். தாயைப்போலவே, குழந்தைகளுக்கும் முன்னாள் போர்வீரர்களுக்கும் உதவிபுரிவதை ஹாரி மிகவும் விரும்பினார். 1997இல், மத்திய அங்கோலாவில் கண்ணிவெடி புதைத்து வைத்திருந்த பகுதியில் நடந்து சென்று உலகின் கவனத்தை ஈர்த்தவர் இவரின் தாய் டயானா. அதேபோல் கடந்த ஆண்டு, தாயின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஹாரியும் நடந்துகாட்டினார்.

தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் மீடியா மூக்கை நுழைக்கிறது என்ற ஆத்திரம், ஹாரிக்கு நீண்ட காலமாகவே இருந்துவந்தது. தன் தாய் டயானாவை மீடியா துரத்தியதுபோல் தன் மனைவியையும் மீடியா துரத்தியதால், ஹாரி நொந்துபோனார். பலமுறை மீடியாவுடன் நேரடியாக மோதினார்.

அரச குடும்பத்தில் இருப்பதால் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், சங்கடங்களைப் பலமுறை வெளிப்படுத்தியுள்ளார் ஹாரி. கடைசியில், அரச குடும்பத்திலிருந்தே வெளியேற ஹாரி தம்பதியினர் முடிவு செய்து விட்டனர்.

இதுவரை அரச குடும்பம்தான் அதன் உறுப்பினர்களை வெளியேற்றித் தண்டித்துள்ளது. ஆனால், ஒருவர்கூட தாங்களாக வெளியேறியதில்லை. 1936இல் எட்டாம் எட்வர்டு, அமெரிக்கப் பெண் வில்லீஸ் சிம்சனை மணப்பதற்காக மணிமுடியைத் துறந்தார். அதனால், அவர் அரச குடும்பத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். 1996இல் வேல்ஸ் இளவரசி டயானா, இளவரசர் சார்லஸை விவாகரத்து செய்ததால் அரச குடும்ப அந்தஸ்தை இழந்தார். 2016இல் அமெரிக்க நிதி நிறுவனர் ஜெப்ரி எப்ஸ் டெய்னுடன், இளவரசர் ஆன்ரூ தொடர்பு வைத்திருந்தது அம்பலமானதால், அவரும் அரச குடும்பத்தால் ஓரங்கட்டப்பட்டார். ஆனால், மேகன்-ஹாரி தம்பதி தாங்களாகவே வெளியேற முடிவுசெய்துள்ளனர். அரச குடும்பத்துக்கு அரசு வழங்கும் நிதியைத் தொட மாட்டோம் எனவும் அறிவித்துவிட்டனர்.



இங்கிலாந்து வரலாற்றில் இதுவரை இப்படியொரு முடிவை யாரும் எடுத்ததில்லை. நாட்டின் அரசர் ஆவதற்கு ஆறாவது நபராக வரிசையில் நிற்கும் ஹாரியின் இந்தத் தடாலடி முடிவால், அரச குடும்பம் அதிர்ச்சியில் உறைந்து கிடக்கிறது. இப்படி ஒரு முடிவை எடுக்கும் முன், குடும்ப உறுப்பினர் ஒருவரிடம்கூட ஹாரி ஆலோசிக்கவில்லை என்பதுதான் ராணி எலிசபெத்தை மிகவும் காயப்படுத்திவிட்டது.

இந்தப் பிரச்சினையை எப்படி சுமுகமாகச் சமாளிப்பது என்று அரச குடும்பம் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது, மேகன் கனடாவுக்குப் பறந்துவிட்டார். "சில காலமாக இந்தத் தம்பதியர் சந்தித்து வந்துள்ள பிரச்சினைகளுக்கான ஒரு முடிவுதான் இது" என்கின்றனர் அரச குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள்.

2017இல் அமெரிக்க நடிகை மேகன் மெர்க்கலைக் காதலித்து திருமணம் செய்துகொள்வதற்காக, அரச பாரம்பரியங்களை உடைத்தெறிந்தார் ஹாரி.

மகாராணியும் மற்றவர்களும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண துடித்துக்கொண்டிருக்கும்போது, கனடாவுக்குப் பறந்துவிட்டார் மேகன். இவர்களுக்கு எப்படி நிதி, பாதுகாப்பு வழங்குவது போன்ற சிக்கல்கள் அரசுக்கும் எழுந்துள்ளன.

'மீண்டும் நடிப்புத் தொழிலுக்கு மேகன் திரும்புவார். ஹாரி தொண்டு நிறுவனம் தொடங்கவுள்ளார். கடந்த டிசெம்பரில் அவருடைய நிறுவனத்தைப் பதிவுசெய்ய விண்ணப்பித்துள்ளார்' என்று மேற்கத்திய மீடியாக்கள் பரபரக்கின்றன.

காதலியைக் கைபிடிக்க அரச பாரம்பரியங்களைக் கைவிட்ட ஹாரி, மனைவிக்காக அரச வாழ்வையும் துறக்க முடிவு செய்துவிட்டார். இவர்கள் எங்கே, எப்படி வாழப்போகிறார்கள் என்பது இதுவரை யாருக்கும் தெரியாது. ஆனால், தாய் டயானாவைப் பின்பற்றும் ஹாரியின் சேவை தொடரும் என்பது மட்டும் அனைவருக்கும் தெரியும்.

# "தி.மு.க. இப்போது சரிந்து விட்டது!"


"என் மடியில் இருந்த அழுக்கு மூட்டையை இறக்கி வைத்துவிட்டேன். இப்போது, வெறும் மடியாக இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது" உற்சாகமாகவும் சந்தோசமாகவும் பேசுகிறார் தி.மு.கவிலிருந்து வெளியே வந்துள்ள மூத்த அரசியல்வாதியான பழ.கருப்பையா.

"என்ன மாதிரியான எதிர்பார்ப்புடன் தி.மு.கவில் சேர்ந்தீர்கள். ஏன் இப்போது விலகியிருக்கிறீர்கள்?"

"தி.மு.கவில் சேர்வதற்கு எனக்குத் தயக்கம் இருந்தது. ஆனால், தி.மு.கவுக்கு வருமாறு ஒரு பொது மேடையில் கலைஞர் எனக்கு அழைப்பு விடுத்தார். 'உங்களைப் போன்றவர்கள் திராவிட இயக்கததைக் காக்க வேண்டும். என் காலத்திலும் என் காலத்துக்குப் பிறகும்...' என்று அவர் அழைத்தார். இவ்வளவு பெரிய வார்த்தைகளைச் சொல்லி அழைக்கிறாரே என்று தி.மு.கவில் சேர்ந்தேன். தி.மு.கவில் சேர்ந்த பிறகு, எனக்குச் சில எதிர்பார்ப்புகள் இருந்தன. ஆனால், கலைஞர் உடல்நிலை சரியில்லாமல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதன் பிறகு, ஸ்ராலின்தான் கட்சியை வழிநடத்தினார்.

ஸ்ராலினையும் முக்கிய தலைவர்களையும் வைத்துக்கொண்டு பல புதிய கருத்துகளைப் பேசினேன். உதாரணமாக, 'இந்துசமய அறநிலையத்துறை' என்பதை 'திராவிட சமயங்கள் அறநிலையத்துறை' என்று மாற்ற வேண்டும் என்று சொன்னேன். சைவம், வைணவம், முருக வழிபாடு, நாட்டுத்தெய்வங்கள் வழிபாடு, முன்னோர்கள் வழிபாடு போன்றவற்றின் அடிப்படையில்தான் நம் சமயங்கள் உள்ளன.

வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து சமயம், நம்முடைய சமயம் அல்ல. எனவே, 'திராவிட சமயங்கள் அறநிலையத்துறை' என இருக்க வேண்டும் என்று சொன்னேன். ஏதோ சொல்கிறார் என்ற நினைப்புடன் நான் சொன்னதை ஸ்ராலின் கேட்டுக்கொண்டார்.




"தி.மு.க.இப்போது சரிந்துவிட்டது!"

அவ்வளவுதான். அங்கு கருத்துருவாக்கம் நடக்கவில்லை, அல்லது கருத்துருவாக்கம் செய்வதற்கான அறிவுத்திறன் உடையதாக தி.மு.க. இப்போது இல்லை. இந்து அணிதிரட்டல் இங்கு நடக்கிறது. 'நாங்கள் இந்து அல்ல... தமிழ்நாட்டில் உள்ள நாங்களெல்லாம் திராவிட சமயத்தவர்' என்று சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் உங்கள் பகுத்தறிவுக் கொள்கைக்கு மோசம் வந்துவிடும் என்றால், பகுத்தறிவுக் கொள்கையே உங்களுக்கு விளங்கவில்லை என்றே அர்த்தம்."

"பா.ஜ.க.எதிர்ப்பு, மதச்சார்பின்மை போன்ற கொள்கைகளில் தி.மு.கவும் உறுதியாகத்தானே இருக்கிறது. பா.ஜ.க. அரசுக்கு எதிராக தி.மு.க.எம்.பிகள் தொடர்ந்து வீரியமாகப் போராடிக் கொண்டுதானே இருக்கிறார்கள்?"

"அப்படிச் சொல்ல முடியாது. தி.மு.கவுக்கு மக்களவையில் 38 எம்.பிக்கள் இருக்கிறார்கள். மூன்றாவது பெரிய கட்சியாக அது இருக்கிறது. அப்படியிருக்கும்போது, அது செயற்படும் விதமும் கருத்துகளை முன்வைக்கும் விதமும் வேறு மாதிரியாக இருக்க வேண்டும். காஷ்மீர் துண்டாடப்படுகிறது. ஆனால், 'ஃபரூக் அப்துல்லாவை விடுதலை செய்' என்று இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அதுவும் முக்கியம்தான். ஆனால், அதையும் தாண்டி மிகப்பெரிய தொடர் போராட்டங்களை இவர்கள் நடத்தியிருக்க வேண்டும். காந்தியின் சிந்தனைக்குப் பிறகுதான் மொழிவழி தேசியம் என்பது பிறந்தது. அதைச் சிதைப்பதுதான் பா.ஜ.கவின் முதன்மையான நோக்கம். காரணம், இன உணர்வு என்பது இந்து அணிதிரட்டலுக்கு எதிரானது. முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டியவர்கள் அல்லது இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்பட வேண்டியவர்கள் என்பது பா.ஜ.கவின் நிலைப்பாடு. அதற்கு மொழிவழி உணர்வு தடையாக இருக்கிறது. எனவே, மாநிலங்களை உடைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்."

"அதைத் தி.மு.க. கடுமையாக எதிர்த்துக் கொண்டுதானே இருக்கிறது?"

"எதிர்ப்பு என்பது ஒரு நாள் அறிக்கையாகவோ, ஒரு நாள் போராட்டமாகவோ மட்டும் இருக்கக் கூடாது. இந்தி எதிர்ப்பைக் காலமெல்லாம் சொல்வதைப்போல, பிற்படுத்தப்பட்டோர் நலனைக் காலமெல்லாம் பேசுவதைப்போல இந்தப் பிரச்சினையையும் பார்க்க வேண்டும். ஆனால், நீட் தேர்வுக்கு எதிராகப் பேசிய அளவுக்குக்கூட, காஷ்மீர் விவகாரத்தைத் தி.மு.க.பேசவில்லை."

"கார்ப்பரேட் கம்பனியைப்போல தி.மு.க செயற்படுவதாகக் குற்றம்சாட்டியிருந்தீர்களே?"

"பணத்துடன் வருபவர்களுக்குத்தான் தி.மு.கவில் முன்வரிசையில் இடம் தரப்படுகிறது. அதனால்தான், பிரசாந்த் கிஷோர் போன்றவர்களை வேலைக்கு வைத்து, பல நூறு கோடி ரூபாயை அள்ளிக்கொடுக்கிறார்கள். இது, பொய்மையின் மீது கட்டப்படும் மாளிகை!"

"இந்த விமர்சனங்களை ஸ்ராலினிடம் நேரில் சொன்னீர்களா?"

"தி.மு.கவிலிருந்து விலகுவதற்கு முன்பாக ஸ்ராலினைச் சந்தித்தேன். 'பணம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே தி.மு.கவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது' என்பது உட்பட என் விமர்சனங்களை எல்லாம் சொன்னேன். சிரித்தபடியேதான் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். என் விமர்சனங்களுக்கு அவர் என்ன பதில் சொன்னார் என்பதை நான் சொல்வது நேர்மையாக இருக்காது. ஓர் அறிவு இயக்கமாக இருந்த தி.மு.க., இப்போது சரிந்துவிட்டது."

"எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி எப்படி இருக்கிறது?"

"இலவசங்களையும் பணத்தையும் கொடுத்து வாக்கு வ்ாங்குவது, பிறகு ஆட்சிக்கு வந்து பணத்தைக் கொள்ளையடிப்பது, இந்த இரண்டைத் தவிர இந்த இரு திராவிடக் கட்சிகளுக்கு வேறு எதுவும் தெரியாது. இது ஒரு நச்சுச்சுழல். இதற்கெல்லாம் மாற்றாக ஓர் அமைப்பு எழ வேண்டும், ஒரு வலிமையான தலைவன் எழ வேண்டும்."

"ரஜினியைச் சொல்கிறீர்களா?"

"அந்த பேருந்து எந்த ஊருக்குப் போகப்போகிறது என்று இன்னும் போர்டே போடவில்லை. 2021 இல் பேருந்து புறப்படும் என்று சொல்லியிருக்கிறார். புறப்படும் நேரத்தில் அந்த பேருந்து எந்த ரூட்டில் போகும் என்று தெரியும்."

"நடிகர் விஜய்யும் அரசியல் ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகிறாரே?"

"யார் வேண்டுமானாலும் வரட்டும். முதலில் உங்கள் வண்டி எங்கே போகிறது என்பதைச் சொல்லுங்கள். உங்கள் கொள்கையைச் சொல்லுங்கள். இது ஒரு மதச் சார்பற்ற நாடு. நான் மதச்சார்பற்றவன் என்று சொல்லுங்கள். யாராக இருந்தாலும் முதலில் அவர்களின் கொள்கை என்ன என்று சொல்லட்டும்."

அரை நூற்றாண்டு அரசியல் பயணம்!

இந்திய தேசிய காங்கிரஸில்தான் பழ.கருப்பையாவின் அரசியல் பயணம் தொடங்கியது. 1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பிளவுபட்டபோது, காமராஜர் தலைமையிலான சிண்டிகேட் காங்கிரஸில் இணைந்த அவர், காமராஜர் மறைவுக்குப் பிறகு 1975 இல் ஜனதா கட்சியில் சேர்ந்தார்.

ஜனதா கட்சி பிளவுபட்டபோது, ஜன்தா தளத்தில் இணைந்தார். பிறகு, அதிலிருந்து விலகி 1988 ஆம் ஆண்டு தி.மு.கவில் சேர்ந்தார்.1992 இல் ம.தி.மு.கவை வைகோ தொடங்கியபோது, அதில் தன்னை இணைத்துக்கொண்ட பழ.கருப்பையா, பின்னர் அதிலிருந்து விலகி காங்கிரஸில் சேர்ந்தார். பின்னர் 2010 ஆம் ஆண்டு அ.தி.மு.கவில் இணைந்து 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் துறைமுகம் தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ-வாகத் தேர்வானார். 2016 ஆம் ஆண்டு துக்ளக் ஆண்டு விழாவில் பேசிய பழ.கருப்பையா, ஜெயலலிதா ஆட்சியைக் கடுமையாக விமர்சித்ததால் அ.தி.மு.க-விலிருந்து நீக்கப்பட்டார். ராயப்பேட்டையில் உள்ள பழ.கருப்பையாவின் வீடு தாக்கப்பட்டது. பிறகு, எம்.எல்.ஏ.பதவியை அவர் இராஜினாமா செய்தார். 2016 ஆம் ஆண்டு கருணாநிதி அழைப்பின் பேரில் தி.மு.கவில் இணைந்த அவர், தற்போது அதிலிருந்து விலகியுள்ளார்.

# பொக்கிஷம்...

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களுக்கு மூலிகை அக்கா கூறும் முத்தான முதல் வணக்கம் உரித்தாகட்டும்.

என்ன புதினமாப் பார்க்கிறியள். இப்பிடி மொட்டையா மூலிகை அக்கா என்று சொன்னால் யாரை நினைக்கிறது எண்டுதானே யோசிக்கிறியள். எல்லாம் வாசித்து முடிய உங்களுக்குத் தெளிவா விளங்கிப் போடும்.

சித்தர்கள், ஞானிகள் காலத்திலிருந்தே எங்கடை இனத்தைப் பற்றி செய்தி வந்திட்டுது. பழைய இலக்கியங்களில், காவியங்களில் எல்லாம் எங்களைப் பற்றி எழுதியிருக்கினம். ஆனால் இந்த நிமிஷம் வரை எங்கடை பழைய சந்ததியினர் பலர் அழிந்து போய் விட்டதைச் சொல்லி அழுது பயனில்லை.

இராமாயணத்திலை அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு வந்துதான் இலட்சுமனன் உயிரைக் காப்பாத்தினதாச் சொல்லினம். ஒரு மூலிகையைத்தேடி அலைய நேரம் போதாது எண்டுதான் மலையையே பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்து யுத்த களத்திலை கொடுத்ததாக வரலாறு.



மனிதர்கள் கண்டு பிடிக்காததைப் பற்றிப் பேசி என்ன பிரயோசனம். ஏற்கனவே கட்டாயம் நீங்கள் அறிந்து பயன் பெற வேண்டிய மூலிகைகளையாவது பாதுகாத்துப் பயன் பெறலாம் தானே. ஆயுர்வேத வைத்தியர்கள் மட்டும் அறிந்து தேடி வைத்தியம் பார்க்கும் மூலிகைகளையாவது இன்றைய தலைமுறை அறிஞ்சால் நல்லது தானே. குறிஞ்சா, சிறுகுறிஞ்சா, கரிசலாங்கண்ணி, மொசு மொசுக்கை. பொன்னாவரசு. சித்தாத்தை, வல்லாரை, கெக்கரி, தர்பூசனி, பூசனி, வெள்ளரி, நீத்துப் பூசனி, தூதுவளை, இப்பிடி அவசியமானதையாவது வீடுகளிலை வைத்து வளர்க்கலாம் தானே.

சாரணைக் கீரையை பெரியவைக்குக்கூடத் தெரியாது. ஆகப் பெரியவைக்குக் கொஞ்சம் தெரியும்.

அது வேரோடை கிளறி எடுத்து வேரைப் பாதுகாத்து குழந்தைப் பேறுகாலம், வயிற்று நோ போன்ற நோய் போன்றவைக்குப் பயன்படுத்தலாம்.

மணத்தக்காளி இலை, காய், பழம் மூன்றும் பயன்படுத்தலாம். ஆனால் அந்தச் செடியை இனங்கண்டால் தானே வாய் அவியல், அல்சர் எண்டு போத் தலையும் தூக்கிக் கொண்டு வைத்திய நிலையங்களிலை துண்டெடுத்துக் கொண்டு காத்திருக்கினம். கார்த்திகை பிறந்தால் கற்றாழை பூத்து நிக்கும். அருமையான மூலிகை- இப்ப கடலோரமும் இல்லை. கற்றாழையும் இல்லை.

கொவ்வையக்காவுக்குத் தடி நட்டுக்கொண்டு பெரியவரும் கந்தையாப்புவும் வருகினம். ஏதோ கதைக்கினம் கேப்பம்.

“மெய்யே கந்தையா மழை முடிஞ்சுது. இனி மூலிகைத் தோட்டத்தை தடி நாட்டி கயிறுபோட்டு பிடிச்சுக் கட்டி, பாத்தி வரம்பையும் பெரிதுபடுத்தித் தண்ணியைத் தளம்பத் தளம்ப விடு ராசா. பூச்சி, புழு, நோய் நொடி வராமல் கவனமாப் பார்” சின்னாம்பியண்ணையும் வந்து சேர்ந்திட்டார்.

“என்னண்ணை வைத்தியம் பார்க்கப் போறியளோ. மருந்து மூலிகையளை பக்குவப்படுத்திறியள். உந்தச் செடி, கொடியை இவ்வளவு கரிசனையா பாக்கிறியள் அண்ணை. இவ முத்தாச்சி அக்கா ஒரே புலம்பல். எல்லாப் பிள்ளையளையும் வெளியிலை அனுப்பிப் போட்டு பாரிசவாதப் புருஷனையும் பாக்க ஏலாமல் கிழவி அலரி விதையை அரைச்சுத் தின்ன வெளிக்கிட்டுது தெரியுமே” கடவுளே! பெரியவர் பதறிப் போனார்.

“என்ன சொல்லுறாய் சின்னாம்பி. ஏன் இந்தக் கிழவி இப்பிடி ஒரு முடிவெடுத்தது. ஒண்டும் பிரச்சினையில்லைத் தானே..” சின்னாம்பியண்ணை கிட்ட வாறார்.

“இல்லை அண்ணை. என்ரை மகள் அம்மிச்சத்தம் கேட்டுப் போய்ப் பாத்தால் விசயம் நல்ல வேளை அலரி சரியான வைரம் தானே. கிழவியின்ரை நடுங்கிற கையால அம்மிக் கல்லைத் தூக்கிக் குத்த முடியேல்லை. தெறிச்சுத் தூரம் போய் விழுந்து விட்டதாம். இண்டைக்குத் தடுத்துப் போட்டம். நெடுக காவல் போட முடியுமே அண்ணை...” பெரியவர் பெருமூச்சு விடுறார். ஏதோ சொல்லுறார்.

“சின்னாம்பி இஞ்சை பார் இந்த மூலிகைக் கொடியள் பூமி நிறையக் கிடக்கு. ஆனால் அதை அறிந்து கொண்டவையும் குறைவு. தேடிப் பாதுகாக்கிறவையும் குறைவு. இயற்கை நோயெதிர்ப்புக்குப் பயன்படுத்த தன் வயிற்றில் வளர்த்து வைச்சிருக்கு. ஆனால் அதைக் கண்டு கொள்வார், காப்பாற்றுவார் இல்லை. இந்த முதியவர்களும் இப்பிடித் தான். உயிர் வாழும் உரிமை இருந்தும் அவையாலை வளமாக வாழ முடியேல்லை. கையிருப்பு இல்லாமல், பிடிமானம் இல்லாமல் எல்லாச் சொத்தையும் வாரிக் கொட்டிப் போட்டு வெறுங்கையோடை ஆளணி உதவியும் இல்லாமல் ஏதிலிகளாக் கிடந்து தவிக்குதுகள். பிள்ளையளும் அப்பிடித்தான். இதுகளும் அப்பிடித்தான். ரோசம் ஒரு பக்கம். பாசம் ஒரு பக்கம். முதியோர் இல்லத்துக்குப் போனால் பிள்ளையளும் மரியாதையில்லையாம். எப்பிடி வாழ்ந்ததுகள் எங்கடை முதுசங்களப்பா முதியவர்கள். காலுக்கை நசுக்கி அழியிற மூலிகை மாதிரித்தான் கைவிடப்பட்ட முதியோரும். இரண்டையும் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டிய கடமை எல்லாருக்கும் உரியதப்பா. ம்... ம்...தேத்தண்ணியைக் குடி. வாசிகசாலையடிக்கு ஒருக்கால் போவம்”ம்...எங்களுக்கும் விடிவுகாலம் பிறக்குது போல.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சரஸ்வதி சபதம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள் : பி.சுசீலா குழுவினர்



கலை வாழ்க மலர் வாழ்க கலைமலரின் திரு வாழ்க
புலவர் திருநாவிற் பொருந்தும் தமிழ் வாழ்க !
கன்னித் தமிழோடு கலந்த நற்கவி வாழ்க
அன்னை கலைவாணி வண்ணப் பெயர் வாழ்க வாழ்கவே !

கோமாதா எங்கள் குலமாதா
குலமாதர் நலம் காக்கும் குணமாதா....(அ..அ...அ.....)

கோமாதா எங்கள் குலமாதா (2)
குலமாதர் நலம் காக்கும் குணமாதா
புவி வாழ்வில் அருள் பொங்கும் திருமாதா
வண்ணக் கோமாதா..

கோமாதா எங்கள் குலமாதா
குலமாதர் நலம் காக்கும் குணமாதா
புவி வாழ்வில் அருள் பொங்கும் திருமாதா
வண்ணக் கோமாதா...கோமாதா
கோமாதா எங்கள் குலமாதா குலமாதா

பாலூட்டும் அன்பிலே அன்னை நீயே
பழகும் உறவிலே பிள்ளை நீயே
பாலூட்டும் அன்பிலே அன்னை நீயே
பழகும் உறவிலே பிள்ளை நீயே
கருணை மனதிலே கங்கை நீயே
கருணை மனதிலே கங்கை நீயே
கல்லார்க்கும் கற்றவர்க்கும் தெய்வம் நீயே
கல்லார்க்கும் கற்றவர்க்கும் தெய்வம் நீயே

கோமாதா எங்கள் குலமாதா
குலமாதர் நலம் காக்கும் குணமாதா
புவி வாழ்வில் அருள் பொங்கும் திருமாதா
வண்ணக் கோமாதா...கோமாதா
கோமாதா எங்கள் குலமாதா குலமாதா

இணங்காதோர் மனம் கூட இணங்கும்
நீ எதிர் வந்தால் எதிர்காலம் துலங்கும்
இணங்காதோர் மனம் கூட இணங்கும்
நீ எதிர் வந்தால் எதிர்காலம் துலங்கும்
வணங்காத...ஆ..... வணங்காதோர்
சிரம் உன்னை வணங்கும்
வணங்காதோர் சிரம் உன்னை வணங்கும்
உன்னை வலம் வந்தால் நலம் எல்லாம் விளங்கும்
உன்னை வலம் வந்தால் நலம் எல்லாம் விளங்கும்
வண்ணக் கோமரதா...

கோமாதா எங்கள் குலமாதா
குலமாதர் நலம் காக்கும் குணமாதா
புவி வாழ்வில் அருள் பொங்கும் திருமாதா
வண்ணக் கோமாதா...கோமாதா
கோமாதா எங்கள் குலமாதா குலமாதா

நலம் நீயே...பலம் நீயே..
நதி நீயே...கடல் நீயே..
அருள் நீயே...அருள் நீயே...பொருள் நீயே..
பொருள் நீயே...ஒளி நீயே..
ஒளி நீயே...உயிர் நீயே..
உயிர் நீயே..
உலகம் யாவும் கருணையோடு
பெருகி வாழ அருள்வாயே....






தனுஷ் கடைசியாக அசுரன் படத்தில் நடித்து சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி முக்கியமானவராகி விட்டார். பலரின் கண்களுக்கும் இன்னும் அவர் சிவசாமி தான். அதிலிருந்து மாறி தற்போது பட்டாஸாக பொங்கலுக்கு வந்திருக்கிறார். பட்டாஸ் சத்தமாகவெடித்ததா இல்லை மென்மை யாக போய் விட்டதா என பார்க்கலாம்.

தனுஷ் பட்டாஸாக ஒரு திருடனாக ஊரில் ஜாலியாக தன் நண்பர் கலக்கப்போவது யாரு சதீஷ்டன் சுற்றி வருகிறார். அவ்வப்போது சின்னச்சின்ன திருட்டு வேலைகளில் ஈடுபட்டு வருகிறார். அவரை எதிர் வீட்டு பெண்ணாக கண்களை ஈர்க்கிறார் ஹீரோயின் மெஹ்ரீன்.

மறுபக்கம் சினேகா அடிமுறை என்னும் தற்காப்பு கலை பயின்று தன் ஆசானையே கணவனாக பெற்றவர். அவருக்கு வில்லன் நவீன் சந்திராவால் பெரும் அழிவு. தன் மகனை தொலைத்த ஏக்கத்திலும் தன்னை விட்டு பிரிந்த கணவரின் சோகத்தில் சிறையிலிருந்து வெளியே வருகிறார்.

இதற்கிடையில் சினேகாவுக்கு ஒரு பெரும் ஆபத்து. அவரை காப்பாற்ற போய் பல உண்மைகள் தனுஸ் க்கு தெரிய வருகிறது. சினேகாவுக்கு நேர்ந்தது என்ன? அவரின் மகன் கிடை த்தாரா? அழிக்கப்பட்ட தற்காப்பு கலை மீண்டும் உயிர் பெற்றதா என்பதே இந்த பட்டாஸ்.

தனுஷின் நடிப்பு திறமையை எடுத்துச் சொல்ல அசுரன் படமே போதும். இன்னும் தன் முகத்தை கண்ணாடியில் பார்த்தால் சிவசாமி தெரிகிறார் என அவரே கூறியுள்ளார்.

இந்த படத்தில் சென்னை பாஷையில் பட்டாஸாக அவர் பேசியது இண்ட்ரஸ்டிங். தன் பின்னணி என்ன என தெரிந்தும் தற்காப்பு கலையை வெளிப்படுத்தும் உருமாற்றமும் நேர்த்தியாக அமைந்துள்ளது.

ஹீரோயின் மெஹ்ரீன் உயர்ந்த வேலையில் அதிக சம்பளம் கிடைத்ததும் செய்யும் அலம்பல் இருக்கே, அப்பப்பப்பா.. தனுஷ் ஜோடியாக அவர் லைட் ரொமான்ஸ் காட்டுகிறார்.




புன்னகை இளவரசி சினேகாவை இப்படத்தில் பார்த்தது பலருக்கும் மகிழ்ச்சி. ஆனால் அவரின் முகத்தில் ஒரு வீரமும், இல க்கை அடைய வேண்டும் என்ற நோக்க மும் மட்டுமே ஒரு தாயாக உணர்வுகள் அதிகமாக கொட்டாமல் சகித்துச்செல்லும் சிங்கப் பெண் போல நடந்துகொள்வது பாராட்டத்தக்கது.

காமெடிக்கு முனிஷ்காந்த் இயல்பாக தன் நடிப்பை பதிவு செய்திருக்கிறார். இவருடன் கூட்டணி சேரும் தனுஷ், கலக்கப்போவது யாரு சதீஷ் போடும் கவுண்டர் கலக்கல்.

நிறைய தெலுங்கு படங்களில் நடித்துள்ள வில்லன் நவீன் சந்திரா ஹீரோவுக்கு இணையாக ஒரு துடிப்பை கையாள்கிறார். இனி இவருக்கு தமிழில் படங்கள் வர வாய்ப்புகளும் உண்டு.

தனுஷை வைத்து கொடி படத்தை இயக்கியிருந்த துரை செந்தில் குமார் தற்போது பட்டாஸ் படத்தில் மீண்டும் கூடியுள்ளார். கொடி படமே ஓகே. இந்த படம் கொஞ்சம் ஸ்லோ என சொல்லும் படி வைத்துள்ளார். 7 ஆம் அறிவு போன்ற படங்களை பார்த்து வந்தவர்களுக்கு இந்த படம் ஓகே லெவல் தான்.

விவேக் மெர்வின் இசையில் பாடல்கள் ஸ்வீட்டான ரகம். அதிலும் சில் ப்ரோ பாடலுக்கு நடன அமைப்பு இதயம் ஈர்ப்பு.

தற்காப்பு கலையை மீண்டும் உயிர் பெற செய்த முயற்சி வரவேற்கத்தக்கது.


ஆசானாகவும், திருடனாகவும் தனுஷின் நடிப்பு தனியான ஒன்று. பெண்களுக்கு பாதுகாப்பை வலியு றுத்தும் சினேகாவின் அதிரடி ஸ்டைல். முதல் பாதி மிகவும் மெதுவாக சென்றது போல ஃபீல். மொத்தத்தில் இந்த பொங்கலுக்கு பட்டாஸ் ஒரு நாட்டு ரக தயாரிப்பு.



# அலங்கா நல்லூரில் சீறிப்பாய்ந்த காளைகள்



# தலையில் விராட் ஹோலியின் முகம்; வித்தியாசமான ஹெயார் ஸ்ரைலில் ரசிகர்



விராட் ஹோலியின் உருவத்தை தலையில் வரைந்து கொண்டு வந்த இளைஞரின் புகைப்படம் ஒன்று வைரலாகி உள்ளது.

ஆக்ரோஷ வீரரான ஹோலிக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். இப்படி ஒரு வெறித்தனமான ரசிகரான சிராக் கிளாரே தலையில் ஹோலியின் உருவத்தை வரைந்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று மும்பை வான்கடே மைதானத்துக்கு போட்டியை காண வந்த அவரை பார்த்து அனைவரும் அதிர்ச்சியில் மூழ்கினர்.

அத்துடன் புகைப்படத்தை டுவிட்டரில் பதிவிட்டு, "சிறந்தவரான விராட் ஹோலி இதயத்திலிருந்து தலைக்கு" எனக் குறிப்பிட்டிருந்தார்.

பல ஆண்டுகளாக ஹோலியின் ஒவ்வொரு போட்டியையும் விடாமல் கண்டு ரசிக்கிறேன். அவர் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான அணியின் கப்டனாக ஆனதிலிருந்தே அவருக்கு நான் ரசிகராக இருந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஹோலியை நேரில் சந்திப்பதே தன்னுடைய வாழ்நாள் கனவு எனக் கூறும் சிராக் கிளாரே, அவரை கண்டதும் கால்களைத் தொட்டு வணங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

## வெளியானது இந்திய வீரர்களின் சம்பளம்



2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரையிலான இந்திய கிரிக்கெட் வீரர்களின் சம்பளம் எவ்வளவு என பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

அதன்படி கிரேட் ஏ ப்ளஸ் வீரர்கள் ஆண்டுக்கு ரூ.7 கோடி சம்பளம் பெறுவார்கள்.

இந்த பிரிவில் விராட் ஹோலி, ரோகித் சர்மா, பும்ரா ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். கிரேடிட் ஏ வீரர்கள் ஆண்டுக்கு ரூபாய் 5 கோடி சம்பளம் பெறுவார்கள்.

இப்பிரிவில் அஸ்வின், ஜடேஜா, புவனேஷ் குமார், புஜாரே, ரஹானே, கே.எல்.ராகுல், தவான், முகமது ஷமி, இஷாந்த் சர்மா, குல்தீப் யாதவ், ரிஷப் பொண்ட் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

கிரேடு பி ஆண்டுக்கு 3 கோடி ரூபாய் சம்பளம்: சாஹா, சாஹல், உமேஷ்யாதவ், ஹர்திக் பாண்டியா, மயங்க் அகர்வால், கிரேடி சி ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம்: கேதார் ஜாதவ், நவதீப் சைனி, தீபக் சாஹர், மணிஷ் பாண்டே, ஹனுமா விஹா, ரி ஷர்துல் தாகூர், ஸ்ரேயாஸ் அய்யர், வோஷிங்டன் சுந்தர்.

# உயிர்களிடத்தில் அன்பு செலுத்துங்கள்



ஒருநாள் திடீர்னு கடல் கொந்தளிக்க ஆரம்பிச்சு உலகம் எல்லாம் தண்ணில மூழ்க ஆரம்பிச்சிடுச்சு. உலகத்தில உள்ள எல்லா மக்களும் தண்ணில விழுந்து செத்துட்டாங்க. அப்போ ஒரு மூலைல ஒரு சின்ன குட்டி பாப்பாவோட சேர்த்து கொஞ்சம் பேர் மட்டும் உயிரோட இருந்தாங்க. அவங்க கடவுள் கிட்ட அவங்கள காப்பாத்த சொல்லி வேண்டிட்டு இருந்தாங்க.

அப்போ திடீர்னு வானத்துல இருந்து ஒரு தேவதை பறந்து வந்திச்சாம். அந்த தேவதை கீழ இருந்தவங்கள பார்த்து என்னோட சிறகுகள்ள உங்கள ஏத்திக்கறேன் . ஆனால் ஒரு நிபந்தனைன்னு சொல்லிட்டு என்னோட சிறகுகள்ள ஏதோ ஒரு பத்து பேர் மட்டும் ஏறிக்கலாம். அவங்க அவங்க கூட ஏதாவது அவங்களுக்கு புடிச்ச உயிரில்லாத ஒரு பொருள மட்டும் எடுத்துக்கலாம்னு சொல்லிச்சு. உடனே அவங்கவங்களுக்கு புடிச்ச ஒரு உயிரில்லாத பொருள எடுத்துக் கிட்டாங்க.

ஒருத்தர் அவருக்கு புடிச்ச வோக்கிங் ஸ்டிக் எடுத்துக் கிட்டாரு. ஒரு லேடி அவங்களுக்கு புடிச்ச லிப்ஸ்டிக் எடுத்துக்கிட்டாங்க. இந்த மாதிரி எல்லாரும் ஏறி னதுக்கப்புரம் ஒருத்தருக்கு மட்டும் இடம் இருந்துச்சு. அந்த சமயத்தில ஒரு குட்டி பாப்பா மட்டும் கீழேயே நின்னுட்டு இருந்துச்சாம்.

அத பார்த்த தேவதை, ஏன் நீ வரலயான்னு கேட்டுச்சு. அதுக்கு அந்த பாப்பா, தன்னோட கைல இருந்த நாய் குட்டிய காட்டி எங்கிட்ட இதுதான் இருக்கு, வேற ஒண்ணு மில்லையே! இதுக்கு உயிர் இருக்கறதுனால நான் எப்படி வர்றதுன்னு கேட்டுச்சாம்.

அதுக்கு தேவதை இருந்துட்டு, ·அதனால் என்ன உன்னோட நாய் குட்டிய கீழ விட்டுட்டு நீ மட்டும் வா ன்னு சொல்லிச்சு. அதுக்கு அந்த பாப்பா இருந்திட்டு எல்லாரும் அவங்களுக்கு புடிச்ச பொருள கூடவே எடுத்துட்டாங்க.

எனக்கு புடிச்சது இந்த நாய்க்குட்டி தான். நான் செத்தாலும் பரவாயில்ல இந்த நாய் குட்டிய நீ கூட்டிட்டு போ, அப்படின்னுசு. இத கேட்ட அந்த தேவதை என்ன சொல்றதுன்னு தெரியாம மெய் சிலிர்த்து கூட இருந்த எல்லாத்தையும் கீழ உதறி விட்டுட்டு அந்த குட்டி பாப்பாவையும் நாய் குட்டியையும் கூட்டிட்டு பறந்து போயிடுச்சாம்.

**நீதி: எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் அன்பே கடவுள்,குழந்தையும் தெய்வமும் ஒன்று. மனசு குழந்தை போல இருந்தா மீண்டும் மழலை பருவத்துக்கு போக வாய்ப்பு கிடைத்தா தெரியும் அன்பை தவிர மற்ற உணர்வுகள் எல்லாம் பொருள்கள் எல்லாம் அர்த்த மற்றவை.**

# அறிந்துகொள்ள...

❖ குளிர் காலத்தில் குயில் கூவாது.

❖ எடிசன் தன் வாழ்நாளில் மொத்தம் 1368 கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளார். அவர் மூன்று மாதங்கள் மட்டுமே பாடசாலை சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ லியான்னடோ டாவின்சி ஒரு கையால் எழுதி கொண்டே, மறு கையால் படம் வரையும் திறன் உடையவர். அவர் வரைந்த உலகப் புகழ் பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையால் வரை யப்பட்டது.

❖ கரப்பான்பூச்சி தலையை வெட்டி எறிந்தாலும், அது தலை இன்றி ஒன்பது நாள் வரை உயிர்வாழும். ஒன்பதாவது நாளின் இறுதியில் அது பசியில் தான் இறந்து போகும்.

❖ கிளியும், முயலும் தன் பின்னால் இருப்பதை தலையை திருப்பாமலே கண்டுபிடித்து விடும்.

❖ யானையின் கால் தடத்தின் நீளம் அளந்து, அதை ஆறால் பெருக்கி வரும் விடையே யானையின் உயரம்.

❖ கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு இதயம். மனிதன் இறந்து போனதும் முதலில் செயலிழக்கும் உறுப்பு இதயம்.

❖ 1610 ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள் தொகை வெறும் 3100 பேர் தான்.

❖ ஒரு ஆண்டு ஆணாகவும் அடுத்த ஆண்டு பெண்ணாகவும் மாறும் உயரினம் ஈரிதழ் சிட்டு.

❖ வால்டிஷ்னி மொத்தம் 32 ஒஸ்கார் விருதுகளை பெற்றுள்ளார்.

❖ ஒருதலைமுறை என்பது 33 ஆண்டுகள்.

❖ பெரியார் பொதுக்கூட்டங்களில் மாநாடுகளில் சுமார் 21,400 மணிநேரம் பேசியுள்ளார். அவருடைய சொற்பொழிவை ஒலி நாடாவில் பதிவு செய்தால் 2 ஆண்டுகள் 5 மாதங்கள் 11 நாட்கள் வரை தொடர்ந்து ஒலிபரப்பாகும்.

❖ ஒட்டகம் ஒரே சமயத்தில் 90 லீற்றர் தண்ணீரைக் குடிக்கும். ஆனால் ஒட்டகத்திற்கு தண்ணீரில் நீந்த தெரியாது.

❖ தத்துவம் பயின்று ஆன்மீகவாதியான பிறகு தான் கராத்தே வீரர் ஆனார் புருஸ்லீ.

❖ சுவாரின் என்ற அவுஸ்திரேலிய நாட்டு பறவை குளிக்காமல் தன் கூட்டுக்குள் நுழையாது.

❖ விமானத்தில் இருக்கும் கறுப்பு பெட்டி ஆரஞ்சு நிறத்தில் இருக்கும்.

❖ சீல்வண்டுகள் 17 ஆண்டுகள் தூங்கும்.

❖ யானை, குதிரை நின்று கொண்டே தூங்கும்.

❖ நீர் நாய் ஒன்றரை நிமிடம் மட்டுமே தூங்கும்.

❖ டொல்பின் ஒரு கண் விழித்தே தூங்கும்

❖ புழுக்களுக்கு தூக்கமே கிடையாது.

❖ நாம் இறந்த பிறகும் கண்கள் மட்டும் 6 மணிநேரம் பார்க்கும் தன்மையுடையது.

(முற்றும்)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1950

Search for people, places and things

**ஸ்ராலின்**

சந்தோசங்களை மனது இருக்கும் எவரோடும் பகிர்ந்து கொள்ளலாம். கவலைகளை மனதில் இருப்பவரோடு மட்டுமே பகிர்ந்து கொள்ள முடியும்!



**வெங்கட்**

தூக்கி வீசப்பட்ட இடத்தில் மரமாக வளர்ந்திடு...! தூக்கி வீசியவர்கள் அண்ணார்ந்து பார்க்கும் அளவிற்கு



**குமரன்**

வாழ்க்கையில் வீணாக கடந்ததையும் நடந்ததையும் மறந்து விடுங்கள்... இனி கடப்பதையும் நடப்பதையும் கவனமாகக் கையாளுங்கள்



**சுஜிதா**

பலத்தைக் கூட்டி, பலவீனத்தைக் கழித்து, வாய்ப்பினைப் பெருக்கி, தடைகளை வகுத்தால் தன்னம்பிக்கை தானாக வளரும்




**ஹேமா**

கொடுப்பவரை ஏழை ஆக்காமல் பெறுபவரை செல்வந்தன் ஆக்கும் ஒரே செயல் புன்னகை மட்டுமே



**சித்ரா**

யாருக்கும் உங்களைக் கணிக்கும் உரிமை கிடையாது. ஏனெனில் அவர்களுக்கு உங்களைப் பற்றிய வதந்திகளே அதிகம் தெரிந்திருக்குமே தவிர வலிகளை அல்ல...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்


வலம்புரியின் மருத்துவச்சுடர் 208

## எம்மை நெறிப்படுத்த...

அந்த காரங்களுக்குள்
அமிழ்ந்து போயின
மனங்கள்
புயல் கண்டு
பொங்கும் கடலின்
அலைகளாய் சிந்தனைகள்
விடுதலைக்கனவுகள்
விழலுக்கு இறைத்த
நீராய்...
போயின வற்றி.
வெளிச்சங்கள்
திருட்டுப்போன
இருட்டுச்சூரியனின்
கறுப்புக்கீற்றுகளில்
நிழல்கள் மட்டுமே
நிரந்தரமாயின.

இழுத்து இழுத்து
இன்னமும்





வாகாய்
போர்த்துக்கொள்கின்றோம்
"போர்" எனும்
போர்வையை...

பாரெல்லாம்
பறையடித்துக்
போர் தின்ற பூமியென
அறை கூவும்
நாம்
ஊரின் சீலம்
சீர் எல்லாம்
காற்றில் பறப்பதை
திரும்பியும் பார்ப்பதில்லை.

இனியேனும்
புரையேறிப்போன
சிந்தனைகளில்
புரட்சி பிறக்கட்டும்
எந்தவளமும்
இல்லையென்று...
கண்ணில் நீர்ஏந்தாது
நந்தவனங்களாய்
இந்த பூமி..
மலர்ந்து கொள்ளட்டும்
சொந்த வளங்களில்
சொர்க்கம் கண்டு
எந்த வளம் இல்லை
என்று
இறுமாந்து கொள்ளட்டும்!

எங்கிருந்து ஆரம்பிப்போம்
எங்களை சீர்படுத்த...?

தரணியில் முதல்
முகிழ்த்த தமிழ்மொழி
முழங்க
திரும்பிய இடமெல்லாம்
திருக்குறள்
அடி தொட்டு ஒழுக
திடமாக இருந்த
தொன்மைப்பரம்பரை
திரும்பிட
எங்கிருந்து
ஆரம்பிப்போம்
எங்களை சீர்படுத்த?

குழந்தைகள் இப்போதெல்லாம்
பெரியவர் ஆகிவிடுகின்றார்கள்
சீக்கிரமே..
ஆறுக்கு முன்னமே
ஆள் உயர மூட்டைகளுடன்
கிளம்பி விடுகின்றார்கள்
வீடுகள் திரும்பினாலும்
விலை உயர்ந்த
பேசிகளுடன் மட்டுமே
பேசிக்கொள்கின்றார்கள்.

பாரதி பாடிய
ஓடி விளையாடு பாப்பாவை
சின்னத்திரையில் மட்டுமே
சிலிர்ப்போடு
பார்க்கின்றார்கள்.

சுகதேகியாய்
இருப்பதொன்றும்
சும்மா லேசுப்பட்ட விடயமல்ல...
இந்நாளில்
வீதிக்கு இறங்கிப்பாருங்கள்
விதி
காத்திருக்கின்றது
உங்களோடு
விளையாட...!
நீங்கள் போகவேண்டிய
இடம் வருகுதோ..
இல்லையோ
வகையாய் வந்து சேரும்
தொற்றியும்
தொற்றாமலும்
வருத்தங்களெல்லாம்.

வாகனங்களுக்கு
எதற்காய்
சிக்னல் வைத்தான்
வளைந்து நெளிந்து
நிமிந்தோடும்
கறுப்பு வீதிகளுக்கெல்லாம்
ஏன்
கோடு வரைந்தான்
யாரிடம் சொல்லி
அழ...
யார்க்கெடுத்துரைக்க...

அபிவிருத்தி
அடைந்ததாய்..
அவர்கள் கொடுத்ததாய்
இவர்கள்
எடுத்ததாய்
அனுதினமும்
முகப்புத்தகங்கள்
மூச்சு முட்டும் அளவுக்கு
தினக்குறிப்பு
செய்திகள்.
இருந்தும் என்ன
இன்னும் கூட
வாழ என்னவோ
இவர்களுக்கு
நிலமில்லை
போகமட்டும்
கம்பள பாதைகள்
நீண்டிருக்கு.

உள்ளூர் பானங்கள்
உற்பத்தியை
நிறுத்தச்சட்டம் வந்தது
ஊரின் மூலை
முடக்கெல்லாம்
மதுவிற்காய்
கட்டடங்கள் எழுந்தது.

அபிவிருத்தி என்றோர்கள்
அமோகமாய்
அபின் விருத்தி செய்தார்கள்.
அபின் கஞ்சா
விருத்தி செய்தார்கள்.

நிதர்சனமாய்
இதுதான் நிலைமை
என்னும் போது
வெண்ணை திரண்டு வர
பானையே உடைந்த கதை
பால்யம் முதல்
படித்த நமக்கு
பானையே உடையாமல்
நெய் ஒழுக
வெண்ணெய் திரண்டிருக்காம்
என்பவரை
என்ன செய்ய...?

எப்போதும்
குறை அளந்து
குப்பை எண்ணங்களை
குவித்து வைத்து
குழம்பாமல்
மனக்கதவுகளை
திறப்போம் அகலமாய்.
இப்போது நான்
சொன்னவற்றை
இந்தக் கணம் தொட்டு
சீராக்க
தூய்மை மனதோடு
தூரப்பார்வையுடன்
புன்னகைத்துப் பாருங்கள்
வெண்ணெய் மட்டுமல்ல
வளைகுடாவின்
எண்ணெய்கூட
எம்மண்ணில்
ஊற்றெடுக்கும்.

நீரிழிவு நிலையத்திற்கு
ஆண்டுவிழா
எடுப்பதால்...
அடுத்த பத்தாண்டில்
பேரழிவு வரும்
இந்நோயால் என்று..
பக்கங்களாய்
செய்தி சுடுவதனால்
ஓர்(இரு) வரியில்
ஒன்றைக்கூறி
முடிக்கலாம்
என எண்ணுகின்றேன்

உங்கள்
யாக்கைகளில்
தாராளமாய்
இருக்கின்றது
இனிப்பு.
வார்த்தைகளில்
கொஞ்சம்
சேர்த்துக்கொள்ளுங்கள்
எல்லோரின்
வாழ்க்கையும்
தித்திப்பாகும்.....!!

Dr .து. நளாயினி
பொது வைத்திய நியுணர்

## வேக நடை

ஆரோக்கியமான ஒவ்வொருவரும் 30 நிமிடங்கள் வேக நடையை உடற் பயிற்சியாக செய்து வருவார்களாயின் அவர்கள் பல தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுவர்.

வேக நடை என்பது பொதுவாக 5 கிலோ மீற்றர் 1 மணி என்ற வேகத்தில் நடப்பது என்று பொதுவாக வரைவிலக் கணப்படுத்தப்படுகிறது.

30 நிமிடங்கள் 5 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் நடப்போமாயின் எம்மால் 2.5 கிலோ மீற்றர் தூரம் நடக்க முடியும்.

சராசரியாக நிமிடத்திற்கு 110 அடிகள் எடுத்துவைப்போமாக இருந்தால் மேற்குறிப்பிட்ட வேகத்தை எம்மால் பேண முடியும். நேரம் போதாமல் இருக்குமாயின் இதனை 15 , 15 நிமிடங்களாகவும் பிரித் துக்கொள்ளலாம். இந்த வேகநடையை அமைதியான இயற்கையான சூழலில் செய்வோமாயின் அது மன அமைதிக்கும் உறுதுணையாக அமையும்.

Dr.சிவன்சுதன்
பொது வைத்திய நியுணர்.



பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்